வெளியீடு எண் : 384,

சிவமயம்

# தட்சிணாமூர்த்தி

DAKSHINAMURTI

दक्षिणामूर्ति



Q.23
N90
128021

திருவாவடுதுறை ஆதீனம்

1990

திருக்கயிலாய பரம்பரைத்

**திருவாவடுதுறை ஆதீனம்**

இருபத்திரண்டாவது குரு மகாசந்நிதானம்

# ஸ்ரீ அம்பலவாண தேசிகமூர்த்திகள்

# ஏழாவது ஆண்டுக் குருபூசை விழாமலர்

**22—3—1990**

வள்ளுவர் ஆண்டு 2021

மெய்கண்டார் ஆண்டு 767 சுக்கில பங்குனி – 9உ

# தட்சிணாமூர்த்தி

**DAKSHINAMURTI** दक्षिणामूर्ति



திருவாவடுதுறை ஆதீனம்

வெளியீடு எண்: 384

# தட்சிணாமூர்த்தி

# DAKSHINAMURTI

(முற்பகுதி — PART - I)

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்துமூன்றாவது குரு மகாசந்நிதானம்

**சீர்வளர்சீர் சிவப்பிரகாசபண்டாரச்சந்நிதி அவர்கள்**

அருளாணையின் வண்ணம்

வெளியிடப்பெற்றது.

**திருவாவடுதுறை ஆதீனம்**

**1990**

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
12821.
சென்னை-600 008.

# குருமரபு வாழ்த்து


கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
கயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ. மாதவச் சிவஞான யோகிகள்.

Q23
N90



திருவாவடுதுறை ஆதீனம் குருமுதல்வர் அருள்திரு நமசிவாயமூர்த்திகள்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குரு மகாசந்நிதானம்
**ஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகள்**
( சிவப்பேறு - பங்குனி - திருவோணம் )

உரிமைப் பதிப்பு

விலை ரூ. 30-00

ஆக்கியோன் :

**S. நாராயணசுவாமி** எம். ஏ., பி. எட்.,

திருவிடைமருதூர்

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,

— திருவாவடுதுறை. —

# எடுத்தாண்ட நூல்கள்

1. திருமுறைகள்
2. சிவபராக்கிரமம்
3. ஸ்ரீ தத்துவநிதி
4. சில்பரத்நாகரம்
5. காசிப சில்பரத்னம்
6. திருத்தலப் பெருமை
7. காமிகம்
8. காரணம்
9. சிவரகசியம்
10. கந்தபுராணம்
11. மருதவன புராணம்
12. திருவிளையாடற் புராணம்
13. திருப்பெருந்துறைப் புராணம்
14. திருப்பெருந்துறை (சிலைவிளக்கம்)
15. பிறதல வரலாற்று நூல்கள்
16. ஆலங்குடி தலபுராணம்
17. கணபதி
18. முருகன்
19. ஆதீன சரஸ்வதி மகால் நூலக கையெழுத்துப் பிரதிகள் & அச்சுப் புத்தகங்கள்
20. கலைச்செல்வங்கள்
21. அபிதான சிந்தாமணி
22 சிற்ப அகராதி ( ஆதீன நூலக ஓலைச்சுவடிப் புலம் )
23. சமய சாத்திர அகராதி
24. கலைக்களஞ்சியம்
25. இவ்வாதீனத்தின் 17-வது குரு மகாசந்நிதானம் அவர்கள் எழுதி வைத்த ஏட்டுப்பிரதி
26. சிலப்பதிகாரம்
27. பஞ்சமரபு
28. சிற்பச்செந்நூல்
29. திருமந்திரம்
30. திருவாசகம்
31. தென்னிந்திய சிவவடிவங்கள்
32. ஹிந்துமத தர்ம விளக்கம்
33. சிவமூர்த்தங்கள்
34. கவின்மிகு தஞ்சைக் கலைக்கூடம்
35. சிவபோதம்
36. தஞ்சைக் கலைக்கூட கலைவிழா மலர்
37. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குரு சிஷ்ய சம்பவ வரலாற்று வியாசமும்
38. கலைஞன் கண்ட கடவுள்
39. தென்னிந்திய சிற்ப வடிவங்கள்
40. தென்னிந்திய கல்வெட்டு சாசனங்கள்
41. தமிழகச் சிற்ப ஓவியம்
42. ஆனந்தவிகடன்
43. அமுத சுரபி
44. கல்கி
45. கலைமகள்
46. தினமணி – ஞாயிறு சுடர்

1. Early Chola art ( Part-I )
2. South Indian Bronzes
3. Early Chola temple
4, Middle Chola temple
5. Later Chola temple
6. Elements of Hindu Iconography
7. Indian Architecture
8. Indian Culture
9. Indian History
10. South Indian Images

ௐ

SIVAMAYAM

# INTRODUCTION

Lord Siva was Worshiped by Saivates from time immemorial For the Common man, the nameless, formless God was presented with names and forms so that he Can easily Comprihend the Almighty and attain salvation. This idol worship dates back to Indus valley Civilization. The forms given Were of three types.

1. Veeka Vadivu
2. Bogha Vadivu
3. Yoga Vadivu

Kamari, Kalari, Kangalan and Veerabhadrar are Veeka Vadivu.

Umamaheswar and Chandrasekarar are Bogha Vadivu.

Dakshinamurthi and Sukasanamurthi are Yoga Vadivu,

Dakshinamurthi is also Called as "Aal Amar Selvan" and "Then Muga Peruman" (God facing the south) He is also Known as "Gurumurthi" Almost all Siva temples we Can see Him in the inner "Praharam" facing the south. His diciples Sanakathis, from whom in succession this famous Tiruvavaduthrai Adheenam Came into, existance to teach and practice Siddhanda are seated in the floor while the Lord - the Guru is seated in a raised platform under the sacred Kal Aal tree. There are sixteen different forms of Dakshina murthi. Viz Gnana Dakshinamurthi, Veera Dakshinamurthi, Sakthi Dakshinamurthi Yoga Dakshinamuthi etc.

The very figure of the lord depicts many principles of Saivisam. The ordinary man can learn about the lord from. the Asana, poisture pose of body, hands and head gear. The Agama and Silpa sastras Combine to enlighten the man Hastha lakshanam, Greeda lakshanam, Asana lakshanam etc. are explained with required pictures and drawings. From the days of Indus valley through early Chola's middle Chola's and later Chola's period the Idol of Dakshinamurthi Varied. Pictures of the lord of those period are also depicted here.

Tiruvavaduthurai Adheenam has already published books with pictures, drawings and discriptive notes on the various forms of Ganapathi, Murugan and Aadal Vallan ( Nataraja ). This book Comes fourth in that Series. This Venture is the first part on the forms of lord Dakshinamurthi.

Tiruvavaduthurai Adheenam was and is devoted to the worship of lord Siva in the form of Nataraja and Dakshina murthi The Adheenam also Worship Sri Namasivayamurthigal founder Guru of the Adheenam in the same form of Dakshinamurthi.

I express my thanks to Stapathiars, pandits and artists Who helped me in their own ways to Complete this noble task with information pictures and drawings.

My humble gratitude to Upaya Guru Maha Sannithanams of this Adeenam shallbe eternal. They, with great benevolence are leading the people in Siddantha Saivism. They are using my humble self in such a noble task as a tool.

Tiruvidaimaruthur }
15—3—90 }

**S. Narayanaswamy.**

உ
சிவமயம்

# முன்னுரை

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.

— திருமந்திரம்

உலகில் ஆன்மாக்களுக்கு உளவாகும் பிறப்புகளுள் மனிதப் பிறப்பே சிறப்புடையது. பிறந்து இறந்து உழலும் ஆன்மா, புண்ணிய மேலீட்டினுல் பெற்ற மனிதப் பிறப்பில்தான் உயிர்க்கு உயிராகிய கடவுள் உண்மையை உணர்ந்து, மனம், வாக்கு காயங்களினுல் கடவுளை வழிபட்டு மீண்டும் பிறவா நிலையாகிய முத்தியின்பத்தைப் பெற்றுய்ப முடியும். இதனுலேயே அப்பரடிகள், இறைவனை வழிபடும் பேறு பெற்றுல் இம்மாநிலத்து மனிதப் பிறவியும் வேண்டுவதே என்று அருளுகின்றுர்கள்.

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலாத இறைவன் நாம் உய்யும் பொருட்டுப் பல்வேறு வகையான திருமேனிகளைத் தாங்கி வந்து ஆட்கொள்கின்றுன். மக்களின் தகுதிக்கு ஏற்ப ஆட்கொள்ளும் பெருமானின் வடிவங்கள் மூன்று வகையின. அவை போகவடிவம் யோக வடிவம், வேகவடிவம் என்பன. உமாமகேசர், சோமாஸ்கந்தர் முதலான திருவடிவங்களைப் போக வடிவம் என்றும், தட்சிணு மூர்த்தியை யோக வடிவம் என்றும், காமாரி (மன்மதனை எரித்த திருமேனி) கால சங்காரமூர்த்தி, வீரபத்திரர் முதலான மூர்த்திகளை வேகவடிவம் என்றும் கூறுவர். போகமூர்த்தி நமது வாழ்வு இன்பம் நிறைந்து சிறப்படைய அருளுவர். யோகமூர்த்தி நாம் மனம் ஒன்றி உயர்ந்து ஞான வாழ்வு வாழச்செய்வார். வேகமூர்த்தி நாம் செய்யும் தீமைகளை அகற்றி ஆட்கொள்வார்.

மனம் ஒன்றி உயர் வாழ்வெய்தி இன்புற அருளும் தட்சிணுமூர்த்தி வழிபாடு சமய ஒழுக்கம் நிலவிய நாடுகள் எங்கணும் நிலவியது. சிந்து

சமவெளி அகழ்வு ஆய்வுகள், அக்கால மக்களின் வழிபாட்டு நிலைகளை விளக்கியுரைக்கின்ற போது, அவர்கள் இலிங்க வழிபாட்டொடு தட்சிணா மூர்த்தி வழிபாட்டினையும் மேற்கொண்டிருந்ததாக அறிவிக்கின்றன.

தட்சிணாமூர்த்தியின் திருஉருவ பேதங்கள் பல. அவைகளை ஞான தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, சக்தி தட்சிணாமூர்த்தி, வீணாதர தட்சிணாமூர்த்தி முதலியனவாகச் சிவாகமங்களும் சிற்பசாஸ்திரங்களும் அறிவிக்கின்றன.

வேதத்தில் பலபொருள்கள் பேசப்பட்டிருக்கின்றன. அதில் அருமையாகப் பேசப்படுகின்ற பொருள் எதுவோ அதுவே குருவாகத் தோன்றி நந்தியம் பெருமானுக்கு அருள அப்பெருமான், வழியில் வந்தது சிவஞானபோதம். அச்சிவஞான போதத்தைத் தமிழில் வழங்கியவர் 'மண்ணிடையில் மாக்கள் மலமகற்றும் வெண்ணெய் நல்லூர் மெய்கண்டார்'. இம்மெய்கண்டார் ஞானமரபில் சிறந்து திகழ்வது திருவாவடுதுறை ஆதீனம்.

சமய அறிவையும் சைவநல்லொழுக்கத்தையும் ஒல்லும் வகை யெல்லாம் பரப்ப ஆவன செய்து வரும் இவ்வாதீனத்தில் இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளி, செந்தமிழ்ப்பணி சிவநெறிப்பணிகளை ஆதீன குரவர்கள் செய்து வந்த செந்நெறிகளிற் பிறழாது செய்து வருதலுடன் சமுதாய நலவளர்ச்சிக்கான பல நல்லற அமைப்புகளையும் காலம் அறிந்து தோற்றுவித்துப் புரந்தருளும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள் தட்சிணாமூர்த்தி பற்றிச் சுருக்கமாகவேனும் ஒருநூல் வரவேண்டுமெனத் திருவுளங் கொண்டு அடியேனுக்கு ஆணையிட்டருளினார்கள். இவ்வுயரிய பணியினை மேற்கொள்ளுதற் கேற்ற தகுதி எளியேனுக்குச் சற்றும் இல்லை என்பதை நன்கு அறிவேன். குரு மகாசந்நிதானம் அவர்கள் திருவடி கமலங்களின் துணையே சிறியேனை இப்பணியினை மேற்கொள்ளச்செய்து இனிது நிறை வேறச் செய்தது.

இந்நூலில், பல திருக்கோயில்களிலுள்ள தட்சிணாமூர்த்தியின் திரு உருவப்படங்கள் இடம் பெற்றுள்ளன. சிற்பங்களைப் பற்றிய செய்திகளை அறிய முற்படுபவர்கள், முதலில் அறிந்து கொள்ள வேண்டிய சிற்பங்களில் காணப்படும் கரலட்சணம், கிரீடங்கள், பீடங்கள், ஆசனங்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள் முதலியவற்றைப் பற்றி அறிதல் வேண்டும். இவைகளைப் பற்றிய படங்களும் தட்சிணாமூர்த்தி வரைநோட்டுப்

படங்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. சம்ஸ்கிருதத்திலுள்ள தட்சிணாமூர்த்தி அஷ்டகம், சுலோகம், வர்ணமாலா, அஷ்டோத்தர நாமாவளி முதலியனவும் ஆலமர் செல்வனைப் பற்றிய பன்னிரு திருமுறைப் பாடல்களும் தல புராணப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. தட்சிணாமூர்த்தி பற்றி அறிய வேண்டியவைகளை யெல்லாங் கொண்டு விளங்கும் விரிவான தொரு நூலுக்கு முதற்பகுதியாகவே இந்நூலை ஏற்றருள அறிஞருலகை வேண்டுகின்றேன்.

இந்நூலை அடியேன் எழுத முற்படும் காலத்தில் உடனிருந்து பல்வேறு செய்திகளை அளித்தும், எளியேன் எழுதிய முதற்படியினைத் திருத்தியும் தலப்புராணங்களில் விளங்கும் துதிப்பாக்களைத் தொகுத்தும் எனக்கு உதவியவர்கள் முன்னுள் ஆதீன மெய்கண்டார் உதவி ஆசிரியர் ஆடுதுறை - புலவர். சு. வடிவேலனார் அவர்கள் ஆவார்கள். மேலும் இவ்வாராய்ச்சிக்குரிய குறிப்புக்களை நல்கிய திருப்பனந்தாள் பேராசிரியர், வித்துவான் மு. சுந்தரேசன் பிள்ளை, பேராசிரியர், வித்துவான் தா. ம. வெள்ளைவாரணம் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட மொழியில் காணப்பெறும் தட்சிணாமூர்த்தியின் அஷ்டகம், ஸ்தோத்ரம், வர்ணமாலா, அஷ்டோத்ரம் முதலியன தந்துதவிய ஆதீனச் சமயப்பிரசாரகர் சென்னை 'சிவபக்திப் பிரசாரமணி' ஆங்கிரஸ எஸ். வேங்கடேசசர்மா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலில் காணப்படும் பல்வேறு வரைகோட்டுப் படங்களை எழுதி உதவிய குடந்தை – அரசினர்கலை மற்றும் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் G. ஞானவேல் அவர்களுக்குக் குருநாதரின் நல்லாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

அச்சுப்பிரதிகளை ஒப்புநோக்கி வேண்டும் திருத்தங்கள் செய்து உதவிய ஆதீனம் நூலகர் திரு. பா. மகாலிங்கதேசிகர் அவர்கட்கும் அழகுடன் அச்சியேற்றித்தந்த ஆதீனம் ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகப் பணியாளர்கட்கும், இந்நூல் இயற்றுவது தொடர்பாக பல இடங்கட்குச் சென்று செய்திகளைச் சேகரிக்குங் காலங்களில் உடனிருந்து உதவிய அன்பர்கள் அனைவர்க்கும் திருவருளும் குருவருளும் சிறப்பாக அமைந்து இன்புறப் பிரார்த்திக்கின்றேன்.

22—3—90 பங்குனி – திருவோணம் – குருவாரத்தில் இவ்வாதீனத்து இருபத்திரண்டாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் ஏழாம் ஆண்டுக் குருபூசை விழாவில் இந்நூல் வெளிவர ஆணையிட்டருளி அடியேனையும் பணிகொண்டு நன்னெறிப் படுத்தி அருளும் உபய குருமகாசந்நிதானங்களின் திருவடித் தாமரைகளை மனம் மொழி மெய்களால் வணங்கி நிற்றலையன்றி அடியேன் யாது செய்ய வல்லேன்.

சிறியேன் அறியாமையால் இப்பதிப்பில் நேர்ந்துள்ள எல்லாப் பிழைகளையும் பொறுத்தருளி அடியேனை ஊக்கும் படி பெரியோர்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

வளர்க துறைசையாதீனம்

இங்ஙனம்,

**சு. நாராயணசுவாமி** எம். ஏ., பி. எட்.,

ஆசிரியர்

திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர்

நடுநிலைப்பள்ளி, திருவிடைமருதூர்.

15—3—90

# பொருளடக்கம்


| | | | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | சைவ சமயத்தின் தொன்மை | ... | 1 |
| 2. | கர லட்சணம் | ... | 9 |
| 3. | சிற்பங்களில் விளங்கும் ஆயுதங்களும் பிறபொருள்களும் | ... | 16A |
| 4. | மகுடமுடிகள் | ... | 22 |
| 5. | ஆசனங்கள் | ... | 25 |
| 6. | குரு | ... | 31 |
| 7. | தட்சிணாமூர்த்தி | ... | 35 |
| 8. | தர்மவியாக்யானமூர்த்தி | ... | 40 |
| 9. | யோக தட்சிணாமூர்த்தி | ... | 42 |
| 10. | வீணாதர தட்சிணாமூர்த்தி | ... | 51 |
| 11. | மேதா தட்சிணாமூர்த்தி | ... | 56 |
| 12. | இடபத்தின் அளவுமுறை (பொது) | ... | 57 |
| 13. | சக்தி தட்சிணாமூர்த்தி | ... | 58 |
| 14. | சாம்ப தட்சிணாமூர்த்தி | ... | 59 |
| 15. | ஹரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி | ... | 60 |
| 16. | ரிஷபாருட ஞானயோக சக்தி தட்சிணாமூர்த்தி | ... | 61 |
| 17. | குருமூர்த்தி | ... | 63 |
| 18. | திருக்கோயில்களில் விளங்கும் தட்சிணாமூர்த்தி – திருவுருவங்கள் | ... | 66 – 80 |
| 19. | முற்காலச் சோழர்களின் – தட்சிணாமூர்த்தி திருவுருவங்கள் | ... | 81 |
| 20. | இடைக்காலச் சோழர்களின் – தட்சிணாமூர்த்தி திருவுருவங்கள் | ... | 89 |
| 21. | பிற்காலச் சோழர்களின் தட்சிணாமூர்த்தி திருவுருவங்கள் | ... | 94 |
| 22. | தட்சிணாமூர்த்தி அஷ்டகம் | ... | 99 |
| 23. | தட்சிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்ரம் | ... | 103 |
| 24. | தட்சிணாமூர்த்தி ஸ்தோத்ரம் | ... | 110 |
| 25. | திருமுறைப்பாடல்கள் | ... | 116 |
| 26. | தலபுராணங்களில் தட்சிணாமூர்த்தி துதிப்பாடல்கள் | ... | 121 |
| 27. | தட்சிணாமூர்த்தி அஷ்டோத்தர சத நாமாவளி | ... | 135 |

# சிற்பக்கலை நூல்கள்

1. *விசுவ கர்மீயம்
2. விஸ்வம்
3. விஸ்வசாரம்
4. பிரபோதம்
5. விருத்தம்
6. *மயமதம்
7. துவஷ்டாதந்த்ரம்
8. *மனுசாரம்
9. நளம்
10. மானவிதி
11. மானகல்பம்
12. *மானசாரம்
13. பெகுஸ்ருதம்
14. சிருஷ்டம்
15. மான போதம்
16. விஸ்வ போதம்
17. ஆதிசாரம்
18. விசாலாக்ஷம்
19. விஸ்வ காஸ்யபம்
20. வாஸ்து போதம்
21. மகர்தந்த்ரம்
22. வாஸ்து வித்யாபதி
23. பாராசரீயகம்
24. காலயூபம்
25. சைத்யம்
26. சித்திரம்
27. ஆவர்யம்
28. சாதகசார சம்ஹிதை
29. பானுமதம்
30. *ஐந்திர-மதம்
31. லோகக்னம்
32. சௌரம்

(மேற்கண்ட 32 சிற்பநூல்கள் மான்சாரம் என்ற சிற்பக்கலை நூலில் குறிக்கப்பட்டுள்ளது. *இக்குறியிட்ட நூல்கள் மட்டும் கிடைத்துள்ளன ஏனைய கிடைத்தில. இவையாவும் வடமொழி நூல்களாகும்.

---

1. ஈசானம்
2. சித்ரகாஸ்யபம்
3. பிரயோகமஞ்சரி
4. பெருஹிதம்
5. பௌத்தமதம்
6. கௌதமம்
7. குலாலம்
8. வாசிஷ்டம்
9. மனோகல்பம்
10. பார்க்கவம்
11. மார்கண்டம்
12. கோபாலம்
13. நாரதீயம்
14. நாராயணீயம்
15. காஸ்யபம்
16. சித்ரயாமளம்
17. சித்ரபாகுல்யம்
18. தேசிகம்
19. சாரஸ்வதீயம்
20. பிராம்மீயம்
21. சகளாதிகாரம்
22. வாஸ்து வித்யை
23. மனுஷ்யாலயச் சந்திரிகை

(இதில் 21, 21 எண் உள்ள நூல்கள் மனை சாத்திர நூல்களாகும்.)

மேலும் சில்பரத்னம், காசியப சில்பரத்னம், ஸ்ரீ தத்துவ நிதி (மூன்று பாகம்), ஸ்ரரஸ்வதிய சித்ர கர்ம சாஸ்திரம், கணபதி, முருகன், ஆடல் வல்லான் முதலான பல நூல்கள் சிற்பச் செய்திகளை அறிய உதவுகின்றன.



### ஸ்ரீ விருஷபதேவர் அருளிச் செய்த

# ஸ்ரீ தட்சிணாமூர்த்தி தோத்திரம்

1. அகணித குணகண மப்ரமேயமாத்யம்
ஸகல ஜகத் ஸ்திதி ஸம்யமாதி ஹேதும் ।
உபரத மநோயோகி ஹ்ருந் மந்திரம்தம்
ஸதத மஹம் தட்சிணாமூர்த்தி மீடே ॥

2. நிரவதி ஸுகம் இஷ்ட தாதார மீட்யம்
நதஜந மநஸ்தாப பேதைக தக்ஷம் ।
பவ விபிந தவாக்னி நாம தேயம்
ஸதத மஹம் தட்சிணாமூர்த்தி மீடே ॥

3. த்ரி புவன குரும் ஆகமைகப்ரமாணம்
த்ரி ஜகத்காரண ஸூத்ரயோக மாயம் ।
ரவி சத பாஸ்வரம் ஈஹித ப்ரதானம்
ஸதத மஹம் தட்சிணாமூர்த்தி மீடே ॥

4. அவிரத பவ பாவனாதி தூரம்
பத பத்மத்வய பாவினா மதூரம் ।
பவ ஜலதி ஸுதாரணாங்க்ரி போதம்
ஸதத மஹம் தட்சிணாமூர்த்தி மீடே ॥

5. க்ருத நிலய மநிஸம் வடாக மூலே
நிகம சிகா வ்ராத போதிதைக ரூபம் I
த்ருத முத்ராங்குளி கம்ய சாரு போதம்
ஸதத மஹம் தட்சிணாமூர்த்தி மீடே II

6. த்ருஹிண ஸுத பூஜிதாங்க்ரி பத்மம்
பத பத்மாநத மோக்ஷ தாந தக்ஷம் I
க்ருத குருகுல வாஸ யோகி மித்ரம்
ஸதத மஹம் தட்சிணாமூர்த்தி மீடே II

7. யதி வர ஹ்ருதயே ஸதா விபாந்தம்
ரதி பதி சதகோடி ஸுந்தராங்க மாத்யம் I
பரஹித நிரதாத்மனும் ஸுஸேவ்யம்
ஸதத மஹம் தட்சிணாமூர்த்தி மீடே II

8. ஸ்மித தவள விகாஸிதாந நாப்ஜம்
ச்ருதி ஸுலபம் வ்ருஷபாதிருட காத்ரம் I
ஸித ஜலஜ ஸுஸோப தேஹ காந்திம்
ஸதத மஹம் தட்சிணாமூர்த்தி மீடே II

9. வ்ருஷப க்ருதமிதம் இஷ்ட ஸித்திதம்
குரு வர தேவ ஸந்நிதௌ படேத்ய: I
ஸகல துரித துக்க வர்க ஹாநிம்
வ்ரஜதி சிரம் க்ஞானவான் சம்புலோகம் II

உ

சிவமயம்

# தட்சிணாமூர்த்தி

## சைவ சமயத்தின் தொன்மை

உலகில் பல சமயங்கள் நிலவுகின்றன. இச்சமயங்களை இன்னார் இன்ன காலத்தில் தோற்றுவித்தார் என்று கூறிவிட முடியும். பௌத்த சமயம் புத்தராலும் சமணசமயம் ஜீனர் என்ற வர்த்தமானராலும் கிறித்தவம் ஏசுநாதராலும் தோற்றுவிக்கப்பட்டன என்பதைப் பெயர் அமைந்த முறையால் தெரிந்து கொள்ளலாம். சைவமும் வைணவமும் அச்சமயக் கடவுளராகிய சிவன், விஷ்ணு என்னும் பெயர்களால் குறிக்கப்படுகின்றன. எனவே இவற்றைத் தோற்றுவித்தவர் என ஒருவரில்லை என்பது வெளியாகிறது. சைவம், வைணவம் என்பவற்றில் சைவத்தின் தொன்மை அளவிடற்கரியது.

### சங்க காலம் :

மூன்று சங்க காலங்களில் கடைச்சங்க கால நூல்களே நமக்குக் கிடைத்துள்ளன. இதன் காலம் கி. மு. 100 முதல் கி. பி. 200 வரையாகும். இக்கால நூல்களில் சிவன், திருமால், பலதேவன், முருகன், இந்திரன், கொற்றவை முதலாகப் பல தெய்வங்கள் குறிக்கப்பெறுகின்றனர். இத்தெய்வங்களை ஒரு சேரக் சுறிக்க நேர்ந்த இடத்தில், "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" என்று சிவனுடைய பெயரே முதலில் குறிக்கப் படுவதாலும், சிவனைப்பெரியோன் என்று சுட்டுவதாலும் சைவசமயம் தலையாய சமயமாக இருந்தது என்பது புலனாகும், மற்றும் சிவபெருமான் முக்கண்ணன், மணிமிடற்றோன், கணிச்சியோன் என்று அடையாளமும், திரிபுரம் எரித்தான் (திரிபுராந்தகர்), ஆலின்கீழ் அமர்ந்தான் (தட்சிணாமூர்த்தி) காரி உண்டிக்கடவுள் எனப் புராணவரலாறும் கூறப்படுகின்றன. இதனால் சங்க காலத்தில் சைவசமயம் நிலவியதென்பது தெற்றனப் புலப்படும்.

### தொல்காப்பியர் காலம் :

தொல்காப்பியர் கி. மு. 400–ஐ ஒட்டி வாழ்ந்தவர். இவர் செய்த தொல்காப்பியத்தில் மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை என்ற தெய்வப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. சிவன் என்ற பெயர் காணப்படவில்லை என்றாலும் கொடிநிலை கந்தழி வள்ளி என்ற தொடர் தொல்காப்பியத்தில் உள்ளது. இத்தொடரில் குறிக்கப்பட்ட கந்தழி என்பது சிவலிங்கத் திருமேனியைக் குறிப்பதாகும். இதனால் தொல்காப்பியர் காலத்திலும் சைவ சமயம் இருந்தது என்பது உணரப்படுகிறது

**இதிகாச காலம் :**

வால்மீகி இராமாயணமும் வியாசபாரதமும் இதிகாசங்கள் எனப்படும். இவை கி. மு. 1400க்கும் 1000க்கும் இடைப்பட்ட காலத்தில் செய்யப் பட்டன என ஆய்வாளர்கள் கூறுவர். இராவணனைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக இராமன் சிவலிங்கத்தை வைத்து வழிபட்டான் என்று வால்மீகிராமாயணம் கூறுகிறது. அருச்சுனன் கண்ணனின் துணை யோடு கைலைக்குச் சென்று சிவபெருமானிடம் பாசுபதம் பெற்று வந்தான் என்று வியாச பாரதம் கூறுகிறது. எனவே இந்நூல் எழுந்த காலத்திலும் அதற்கு முன்பும் சைவ சமயம் நிலவியது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

**வேதகாலம் :**

சுமார் 4000 ஆண்டுகளுக்குமுன் ஆரியர்கள் வட இந்தியாவில் குடியேறினர். அங்ஙனம் குடியேறிய பின் தாம் வழிபட்ட தெய்வங்களின் மீது துதிகளையும், மந்திரங்களையும் இயற்றினர். இவைகள் திரட்டப்பட்டு இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு வேதங்களாகத் தொகுக்கப் பட்டன. இவற்றில் யசுர் வேதத்தில் நமசிவாய என்றும் சிவதராய என்றும் சிவன் என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

“नमः शिवाय च शिवतराय च
நம: சிவாய ச சிவதராய ச” (ஸ்ரீ ருத்ரம் 8-1)

எனவே வேத காலத்தில் சைவ சமயம் நிலவியது என்பது தெரியவருகிறது.

**சிந்துவெளிக்காலம் :**

சுமார் 6000 ஆண்டுகளுக்குமுன் அதாவது ஆரியர் இந்தியாவில் குடியேறுவதற்கு முன்பே சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் சிறந்த நாகரிகம் உடையவர்களாய்ச் சைவசமயச் சார்புடையவராய் வாழ்ந்தனர். ஆரியரின் தாக்குதலாலும் சிந்து நதியின் வெள்ளப் பெருக்காலும் சிந்துவெளி நகரங்கள் அழிந்து மண்ணில் புதையுண்டுபோயின. இவ்விடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பெற்றதால் அதன் பயனாக ஏராளமான புதைபொருள்கள் கிடைத்துள்ளன. அப்படிக்கிடைத்தவற்றில் 600 க்கும் மேற்பட்ட சிவலிங்கத் திருமேனிகளும், பெண்தெய்வச் சிலைகளும், முத்திரைகளில் உள்ள யோகநிலைச்சிவன், நந்தி சூலம் முதலியனவும் குறிப்பிடத்தக்கனவாகும். இதனால் 6000 ஆண்டுகளுக்கு முன்பே சைவ சமயம் நிலவியது என்பதை அறியமுடிகிறது.

தொடக்க காலத்திய மக்கள் ஞாயிறு, திங்கள், மரம் போன்ற இயற்கைகளைத் தெய்வமாக வழிபட்டனர். அவ்வாறு வணங்கப்பட்ட மரங்கள் முதிர்ந்து பட்டுப்போய் கிளைகள் எல்லாம் நீங்கி அடிமரம் மட்டும்

எஞ்சி நின்ற போதும் தெய்வமாகவே எண்ணி வழிபட்டனர். இத்தகைய அடிமரம் கந்தழி எனப்பட்டது. இங்ஙனமே மரத்தூணை நட்டுக் கந்தழி என்று வழிபட்டனர்.

இத்திருவுருவமே சிவலிங்கத் திருமேனியின் தோற்றத்துக்கு அடிப்படையாகும். மேலும் மாலை நேரத்தில் மலைச் சிகரத்தினின்று அருவி வழிந்தோட அதன் பின்னே செவ்வானம் மிளிர அதனிடை நின்ற பிறையைக் கண்டு தொழுதனர். இவ்வியற்கைக் காட்சிக்கு ஒரு உருவம் கொடுத்து மலைச்சிகரத்தைச் சிவனுடைய தலையாகவும், அருவியைத் தலைமேல் உள்ள கங்கையாகவும், செவ்வானப் பரப்பை அவிர்சடையாகவும், பிறையைச் சடைமேல் வைத்த பிறையாகவும் கொண்டு சிவனுக்கு வடிவம் காட்டினர். இவ்வாறு இயற்கைத் தோற்றத்திலிருந்துதான் சிவனது வடிவம் தோன்றியது என்ற கருத்தும் நிலவுகிறது.

**சிந்துவெளி அகழ்வாராய்ச்சியால் அறியப்படும் செய்திகள் :**

சிந்து நதி பாயும் நிலப்பரப்பு சிந்து வெளி எனப்படும். அதாவது சிந்து பலுஜிஸ்தானம், பஞ்சாப், இராஜபுதனம், சௌராட்டிரம் என்ற பகுதிகள் சிந்து வெளி எனப்படும். இப்பகுதிகள் இருக்கு வேதத்திலும் இதிகாசங்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இப்பகுதியில் இருந்த பழைய மாநகரங்கள் சிந்து வெள்ளத்தால் அழிந்து மண்ணில் புதையுண்டு போயின. இப்பகுதியில் உள்ள பல மண்மேடுகள் அகழப்பட்டு ஆராயப்பட்டன. சிந்துவில் உள்ள மொகஞ்சதாரோவிலும், பஞ்சாபில் உள்ள ஹரப்பாவிலும் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியால் பல உண்மைகள் வெளியாயின.

**அகழ்வாராய்ச்சியால் கிடைத்த பொருள்கள் :**

சிந்து வெளியினை அகழ்ந்தபோது பல கட்டடங்களின் சிதைவுகளும் அவற்றின் நடுவே அகன்று நீண்ட தெருக்களும் ஒவ்வொரு வீட்டிலும் கிணறுகளும், ஊரின் தொடக்கத்தில் நீராடுகுளமும் அதன் வாய்காலும் வடிகாலும் தெரியவந்தன. மேலும் பானை ஓடுகள், பாத்திரங்கள், கருவிகள், சிவலிங்க உருவங்கள், பெண்தெய்வ வடிவங்கள், நடனமாதின் வெண்கலச்சிலை. மரத்தாலும் களிமண்ணினாலும் ஆனமுத்திரைகள், (முத்திரைகளில் தெய்வ உருவங்கள்), மனித உருவங்கள், தாயத்துக்கள், நந்தி உருவங்கள் முதலியன கிடைத்துள்ளன, முத்திரைகளில் மனிதன், விலங்கு, பறவை, மரம் முதலிய உருவங்களும் காணப்படுகின்றன.

**காலம் :**

சிந்து வெளியில் புதையுண்ட இடத்தின் மண்படிவங்கள், கிடைத்த பொருள்களின் தன்மை, எழுத்துக்கள் ஆகியவற்றைக் கொண்டு சிந்து வெளிநாகரிகத்தின் காலம் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று

வரலாற்றுசிரியர்கள் கூறுகிறார்கள். இங்குக் கிடைத்துள்ள பொருள்கள் கல், மரம், செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பட்டனவாக இருப்பதால் இந்த நாகரிகம் உலோக காலத்தைச் சார்ந்தது என்று முடிவு செய்துள்ளனர்.

**சைவ சமயத் தொடர்பு :**

இங்குக் கிடைத்துள்ள பொருள்களில் சிவலிங்க உருக்கள், பெண் தெய்வச் சிலைகள்; நந்தி, சூலம், தாயத்துக்கள், முத்திரைகள் முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். தாயத்துக்களில் சிவலிங்கவடிவமும், முத்திரைகளில் யோகநிலைச் சிவனும், எழுத்துக்களில் சிவன் பெயரும் காணப்படுகின்றன. எனவே இங்கு வாழ்ந்த மக்கள் சிவவழிபாட்டினர் என்று தெரியவருகிறது.

**சிவலிங்கங்கள் :**

மாக்கல்லாலும் மரத்தாலும் செய்யப்பட்ட சிவலிங்கங்கள் 600 க்கு மேல் இங்குக் கிடைத்துள்ளன. இச்சிவலிங்கங்களில் சில பீடமில்லாமலும், பல பீடமுடையனவாகவும் இருக்கின்றன. சரியை, கிரியை, யோக ஞானமாகிய நன்கு நெறிகளில் சிவலிங்கம் கிரியை நெறிக்கு உரியதாகும். எனவே இங்கு வாழ்ந்தவர்கள் கிரியை நெறியால் சிவலிங்கத்தை வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மற்றும் இங்குக் கிடைத்துள்ள தாயத்துக்களில் சிவலிங்கவடிவம் காணப்படுகிறது. இதனால் இந்த தாயத்துக்களை அவர்கள் அணிந்து கொண்டார்கள் என்றும், இத்தாயத்துக்களை அணிந்தால் நோயும் பேயும் தம்மை அணுகா என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்றும் உய்த்துணர வேண்டியிருக்கிறது.

**யோக நிலைச் சிவன்**

மொகஞ்சதரோவில் சுண்ணாம்புக் கல்லால் ஆன யோகியின் சிலை ஒன்று கிடைத்துள்ளது. இவருடைய தலைமயிர் நன்றாகச் சீவப்பட்டு அணிகள் செருகப்பட்டுக் காணப்படுகிறது முகத்தில் மீசையில்லை. ஆனால் தாடிமட்டும் இருக்கிறது. உடம்பில் சித்திர வேலைப்பாடு கொண்ட போர்வை போர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் இச்சிலை அக்காலத்திய துறவியையோ அல்லது யோகநிலைச் சிவனையோ குறிப்பதாகக் கொள்ளலாம். மேலும் சிந்துவெளியில் மரத்தாலும் களிமண்ணாலும் செய்யப்பட்ட முத்திரைகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

இவைகளை சர்ஜான் மார்ஷல், மக்கே, வாட்ஸ் முதலிய அறிஞர்கள் ஆராய்ந்து பல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். எண் 420வது முத்திரையில் சிவன் பீடத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறார். கௌபீனம் மட்டும் அணிந்துள்ளார். ஆடை வேறு எதுவும் அணியவில்லை. மூன்று முகங்கள் இருக்கின்றன. இவருக்கு இடப்புறத்தில் யானை, புலி என்பன

வும், வலப்புறத்தில் காண்டாமிருகம், எருமை என்பனவும், பீடத்தின் கீழ் இரண்டு மான்களும் காணப்படுகின்றன. எண் 235-வது முத்திரையில் சிவன் நிலத்தில் வீற்றிருக்கிறார், கீழே பீடம் இல்லை. தலையில் இரண்டு கொம்புகள் உள்ளன. கொம்புகளுக்கு நடுவே பூங்கொத்து ஒன்று காணப் படுகிறது. தலைமயிர் பின்னால் தொங்குகிறது

" எண் 22-வது முத்திரையில் சிவன் பீடம் ஒன்றின் மேல் அட்டணக் காலிட்டு உட்கார்ந்து இருக்கிறார். மூன்று முகம் உள்ளன. தலைக்கு மேல் இலைகளுடன் கூடிய ஆலமரத்தின் கொம்புகள் ( கிளைகள் ) உள்ளன. மற்றொரு முத்திரையில் சிவன். பீடம் ஒன்றின் மேல் அட்டணக்காலிட்டு உட்கார்ந்திருக்கிறார். இரண்டு கைகளையும் நீட்டி முழங்காலின் மேல் வைத்திருக்கிறார். கைகளில் வளையல் போல பலவளையங்கள் உள்ளன. பக்கத்தில் சூலம், இடபம் என்பன உள்ளன. மற்றொரு முத்திரையில் சிவன் தமது கண்களால் தமது மூக்குநுனியைப் பார்ப்பது போல் இருக்கிறது ( இத்தகைய உருவம் சோழர்கால சிற்பங்களில் உள்ளன. இங்குக் கூறியவாறு யோகநிலைச் சிவனைப் பிற்பகுதியில் காணலாம்). இவை யாவற்றையும் ஒரு சேரவைத்து ஆராயும் போது ஆலமரத்தின் கீழிருந்து சடையைத் தொங்கவிட்டு யோக நிலையில் இருக்கும் தட்சிணாமூர்த்தியின் உருவமே அவைகள் என்று உய்த்துணர்ந்து கொள்ளலாம். மேலும் சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் யோக நெறியை அறிந்தவர்கள் என்றும், சிவலிங்கத்தோடு தட்சிணாமூர்த்தியையும் வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்றும் துணியலாம்.

**எழுத்துக்கள் :**

சிந்து வெளியில் கிடைத்துள்ள முத்திரைகளில் எழுத்துக்கள் காணப் படுகின்றன. இவைகள் ஆப்பிரிகா அரேபியா முதலிய இடங்களில் கிடைத்துள்ள பழங்கால எழுத்துக்களை ஒத்திருக்கின்றன. எனவே எழுத்தமைதியைக் கொண்டு சிந்துவெளி நாகரிகத்தின் காலம் சுமார் 6000 ஆண்டுக்கு முற்பட்டது என முடிவு செய்யலாம். இவைகளைப் படித்தறி வது கடினமாக இருக்கிறது. பெரும்பாலான எழுத்துக்கள் இன்னும் படித்தறியப்படவில்லை. ஒரு சிலவற்றை மட்டும் ஹீராஸ் பாதிரியார் படித் துள்ளார். அவர் படித்தறிந்தவற்றில் எண்மை என்ற சொல் சிவபெரு மானது எட்டு வடிவங்கள் அல்லது எட்டுக்குணங்களைக் குறிக்கக் கூடும்; தாண்டவன் என்ற சொல் நடனமாடும் சிவனைக் குறிக்கக் கூடும்; விடுகண் என்ற சொல் தீயைவிடும் நெற்றிக்கண்ணைக் குறிக்கக் கூடும். மற்ற எழுத்துக்களையும் படித்தறியும் போது இங்கு வாழ்ந்த மக்களின் சைவ சமய நிலை நன்கு விளக்கமுறலாம்.

**நந்தி :**

சிந்து வெளியில் நந்தி, பெண்தெய்வங்கள், பாம்புகள் முதலியவற்றின் உருவச் சிலைகள் கிடைத்துள்ளன. முத்திரைகளில் நந்தி சூலம் அரசமரம்,

வேப்பமரம் முதலிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவைகளில் நந்தி சிவனது வாகனமாகும்; சூலம் சிவனது ஆயுதமாகும். எனவே இவைகள் அக்கால மக்களின் சைவ சமய ஈடுபாட்டை உணர்த்தும் சான்றுகளாக உள்ளன.

**வழிபாடு :**

முத்திரையில் உள்ள யோகசிலைச் சிவனுடைய தலையில் இரு கொம்புகளும் அவற்றுக்கு நடுவே ஒரு பூங்கொத்தும் காணப்படுகின்றன. இப்பூங்கொத்து, இறைவனுக்குப் பூச்சூட்டி வழிபட்டு வந்ததைக் காட்டுகிறது. இங்குக் கிடைத்த வெண்கலத் தட்டுகளில் ஒன்றில் நந்தி ஒன்றை ஊர்வலமாக எடுத்துச் செல்வதைக்காட்டும் காட்சி வரையப்பட்டிருக்கிறது. இதனுல் அக்காலத்தில் திருவிழாக்கள் நடத்தியுள்ளனர் என்பதும் விழாக்காலத்தில் இறை உருவங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர் என்பதும் தெரிய வருகிறது.

மற்ருெரு தட்டில் ஒரு பெண் தெய்வத்தின் முன் சில பெண்கள் நிற்பது போலவும் அப்பெண்கள் உணவுப் பண்டங்களை ஏந்திக் கொண்டிருப்பது போலவும் ஒரு காட்சி வரையப்பட்டிருக்கிறது. இதனுல் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன் கொடுத்தனர். அல்லது உணவுப் பொருளை நிவேதனம் செய்து வழிபட்டனர் என்பது தெரியவருகிறது.

இது காறும் கூறப்பட்டவற்ருல் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பே சைவசமயம் வழக்கத்தில் இருந்தது என்பதும், சிவனை இலிங்க வடிவாகவும், தட்சிணுமூர்த்தி வடிவாகவும் வைத்து வழிபட்டனர் என்பதும், இறைவனுக்கு மூன்று முகம், முக்கண், சூலம், நந்திவாகனம், சடை என்பவற்றை அடையாளமாகக் குறித்திருந்தனர் என்பதும் இறைவனுக்குப் பூச்சூட்டி உணவுப் பண்டங்களைப் படைத்து வழிபட்டதோடு திருவிழாவும் ஊர்வலங்களும் நடத்தினர் என்பதும், சிவனுடைய உருவைப் பொறித்த தாயத்துக்களை கழுத்திலோ கையிலோ அணிந்து வந்தனர் என்பதும் புலப்படுகின்றன. மேலும் இச்சமய வாழ்வு ஆரியர் கலப்பற்றது என்பதும் தெளிவாகிறது.

**உலகில் சிவன்கோயில்கள் :**

பாரததேசத்தில் மட்டுமன்றிச் சிவன் கோயில்கள் உலகெங்கும் உள்ளன. உலகின் பல்வேறு இடங்களில் சிவலிங்கங்கள் காணப்படுகின்றன.

ஜாவாத் தீவில் பல சிவன் கோயில்கள் அழிவுற்ற நிலையில் உள்ளன. இங்குள்ள டெகால் என்ற ஆற்றிலிருந்து சிவபெருமானின் செப்புச்சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. ஜாவாவில் கபால கணபதி, துர்க்கை சிலைகள் கிடைத்துள்ளன.

ஜாவாவில் உள்ள கோயில்களில் இன்றும் திருவாசகம் ஓதப்படுகிறது. அங்கிருப்பவர்க்குத் தமிழ்மொழி தெரியாத படியால் ஏதோ மந்திரம்போல உச்சரித்து வருகிறார்கள். மேலும் ஜாவாவில் உள்ள பெரம்பானம் என்ற இடத்தில் உள்ள சிவன்கோயிலில் சிவதாண்டவத்தின் 32 முத்திரைகளைக் குறிக்கும் சிற்பங்கள் உள்ளன.

சுமத்திராவில் அழிபாடுற்ற சிவன்கோயில் உள்ளது. இங்கே அர்த்த நாரிவடிவம், கணபதி சிலை, நந்திசிலை உள்ளன.

போர்ணியோவில் ஒரு மலைக்குகையில் சிவன், விநாயகர் சிலைகள் உள்ளன.

சியாம் நாட்டிலும் கம்போடியாவிலும் சிவலிங்கத்தின் உருவங்கள் கிடைத்துள்ளன. சியாமில் பழைய சிவன் கோயில் இருக்கிறது. இக் கோயிலுள்ள இடத்தில் இப்போதும் பொங்கல் விழா கொண்டாடப் படுகிறது.

பாபிலோனியாவில் அகழ்வாராய்ச்சியால் 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவலிங்கங்களும் சிவாலயத்தின் வழிபாடுகளும் கிடைத்துள்ளன. இங்குக் கண்டெடுக்கப்பட்ட களிமண் ஏட்டில் சிவன் என்ற பெயர் காணப்படுகிறது. பாபிலோனியர் தம் கடவுளுக்கு இட்டு வழங்கும் பெயர்களில் எல்சடை என்று ஒரு பெயர் காணப்படுகிறது. இச் சொல் சூரியனைப் போன்ற சிவந்த சடையுடையவன் என்று பொருள் தருவதாக இருக்கலாம். இங்குக் கிடைத்த சிவபெருமான் சிலை - ஆனேற்றின் மீது நிற்பதாகவும், கையில் மழுவும் இருபுறமும் முத்தலை யுடைய சூலமும் ஏந்தியதாகவும் காட்சியளிக்கிறது. பாபிலோனியரின் மாதப் பெயர்களில் ஒன்று சிவன் பெயர் கொண்டிருக்கிறது.

சிரியா நாட்டில் சிவன் சிலையும், சிவன் உருவம் பொறித்த வெண்கலத்தட்டும் கிடைத்துள்ளன. இத்தட்டில் உள்ள உருவம் தந்தை கடவுளின் வடிவம் என்று கூறுகின்றனர். இவ்வுருவம் வலக்கையில் மழுவும் இடக்கையில் ஆறுமுனையுள்ள இடியேறும் தாங்கி இடபத்தின் மேல் நிற்பதாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது.

எகிப்தில் உள்ள பாலைவனம் ஒன்றுக்குச் சிவன் என்ற பெயர் வழங்கி வருகிறது. இங்கு வாழும் மக்கள் அமன்யூ என்ற கடவுளை வணங்கி வழிபடுகின்றனர். அக்கடவுளுக்கு இடபம் வாகனமாக இருக்கிறது.

கிரேக்க நாட்டில் சிவலிங்கங்களைப் பொது இடங்களில் எண்ணெயில் நீராட்டி வழிபட்டனர் என்று ஒரு கிரேக்க அறிஞர் எழுதி உள்ளார்.

அமெரிக்காவில் முதன் முதலாக ஐரோப்பியர் குடியேறிய போது அங்கு வாழ்ந்த பழங்குடியினர் சிவலிங்கங்களை வைத்து வழிபட்டதாக எழுதி வைத்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள கொலறடோ என்ற ஆற்றின் கரையில் மிக உயரமானதும் தட்டையானதும் ஆன ஒரு குன்று உள்ளது. இக்குன்றின் மேல் 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய சிவன் கோயில் ஒன்று இருக்கிறது.

மேற்கூறப்பட்ட சான்றுகளினுல் உலகின் பல்வேறு இடங்களிலும் சிவன் கோயில்களும், சிவ வழிபாடும், சிவனின் பல்வேறு நிலையில் அமைந்த உருவங்களும், விழாக்களும் நடந்து வந்தமையினை அறிகிறோம். சிவலிங்கத்தினை வழிபட்ட மக்கள் சிவபெருமானுக்குச் சிறப்புடைய திருமேனியாகத் தட்சிணுமூர்த்தி திருவுருவத்தினையும் அமைத்து வழி பட்டனர் என்பது தொல்பொருள் ஆய்வு மூலம் அறிகிறோம்.

சிவபெருமானின் 25 சிவமூர்த்தங்களில் சிறப்புடையதாகக் கூறப் படுவது தட்சிணுமூர்த்தி திருவுருவமாகும். சிவமூர்த்த சிறப்பினைக் கூறவந்த, ஆகமங்களும், புராணங்களும், சிற்பநூல்களும் பல்வேறு உருவ பேதங்களை எடுத்து இயம்புகின்றன. அத்தகைய உருவ பேதங்கள் இன்றும் நம் திருக்கோயில்களில் காட்சிதருகின்றன.

அத்தகைய திருவுருவங்களின் பல்வகைச் சிறப்புக்களை அடியார்கள் போற்றி வழிபடும் போது திருமுடித்தாமரை, திருமுகத்தாமரை, திருவுளத் தாமரை, திருக்கரத்தாமரை, திருவடித்தாமரை என உருவகிக்கின்றனர்கள். இத்தகைய திருக்கரங்கள், அக்கரங்களில் ஏந்திய ஆயுதங்கள், அக்கரங்களால் உணர்த்தப்படும் முத்திரைகள்; திருமுடியை அலங்கரிக்கும் மகுடங்கள் ஆசனங்கள் ஆகியவற்றைப் பற்றிய விரிவான விளக்கங்களை முதலில் அறிந்துகொண்டு பின்னர் சிவ மூர்த்தங்களின் சிறப்புடைய தட்சிணு மூர்த்தியின் பல்வேறு உருவ அமைப்பின் பேதங்களைக் காண்பது பயனுடையதாகும்.

# கரலட்சணம்

கையின் பல்வேறு செயல்நிலைகளைக் கூறுவது கரலட்சணம் எனப்படும். அதாவது மனத்தில் நிகழும் உணர்வு நிகழ்ச்சிகள் அங்கே எவ்வாறு நிகழ்கின்றனவோ அவ்வாறே கைவிரல்களின் அசைவினால் அல்லது குறிப்புச் சைகைகளினால் காண்போருக்குப் புலப்படுமாறு வெளிப்படுத்துவதாகும். இதனை முத்திரை அல்லது அடையாளம் என வழங்குவர் சான்றோர். முத்திரைகள் பலவகைப்படும். நாட்டியக் கலைக்கும் சிற்பக் கலைக்கும் தெய்வ பூசனை முறைக்கும் தனித்தனி முத்திரைகள் உள்ளன. இம்முத்திரைகளை 32 வகைகளாகப் பாகுபடுத்தியுள்ளனர் நாட்டியக்கலை வல்லுநர்கள். இக்கர லட்சணம் இருவகைப்படும். அவை செயல் நிலைகளைப் புலப்படுத்தும் கரம், அழகு நிலைகளைப் புலப்படுத்தும் கரம் என்பனவாம். இவற்றின் விரிவை இனிக்காண்போம்.

## 1. அபய கரம் :

கையின் சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் சிறுவிரல் ஆகிய நான்கு விரல்களையும் ஒரு சேர அமைத்து, கைக்குச் சம உயரத்தில் மேல் நோக்கிச் செங்குத்தாக நிறுத்தி, பெருவிரலைச் சுட்டு விரலோடு சேர்த்து மேல்நோக்குமாறு அமைத்துப் பிடிக்கும் கரலட்சணத்திற்கு 'அபயகரம்' என்று பெயர். இது 'அஞ்சாதே' என்ற குறிப்பை உணர்த்துவதாகும். இதனை உற்று நோக்கக் கொடிபோல் அமைந்திருத்தலினால் இது 'பதாகை முத்திரை' எனவும் வழங்கப்பெறும்.

## 2 வரத கரம்

முற்கூறிய அபயகரத்தைக் கீழ்நோக்கியவாறும் உள்ளங்கை வெளிநோக்கியவாறும் அமைத்துக் காட்டினால் அது 'வரத கர' மாகும். வரத கரம் – கொடுக்கும் கரம்

## 3 & 3அ. கடக கரம் :

பெருவிரலை உட்பக்கமாகச் சிறிது வளைத்து நடுவிரல் அணிவிரல் இரண்டையும் சேர்த்து முன்பக்கமாக வளைத்து, சுட்டு விரல் சிறு விரல் இரண்டையும் தத்தமது இடங்களிலே நிறுத்தி, மேற்கணுக்களைச் சற்று வளைவாகப் பிடிக்கும் கரம் 'கடக கரம்' எனப்படும். இதில் வேறு நிலையும் உண்டு.

இதில் நடுவிரல் நுனி அணிவிரல் நுனியிலிருந்து சிறிதளவு முன்னோக்கியவாறு அமைந்திருத்தல் வேண்டும். இதன் தோற்றம் நண்டுபோல் இருத்தலின் இது 'கடககரம்' என்ப்படும்.

இது பொருள்களைப்பற்றிப் பிடிக்கும் தன்மையைப் புலப்படுத்துவதாகும்.

**4 & 4 அ. சிம்ம கர்ண கரம் :**

மேலே கூறிய கடககரத்தில் நடுவிரல் உள்ளங்கை வரையில் படிமான மாக வளைந்து அணிவிரலும் அதைத் தொடர்ந்து வளைய, ஏனைய விரல்கள் கடக கரத்தின் தோற்றம் போல் வளைந்து தோன்றும். இது 'சிம்ம கர்ணம்' எனப்படும். அதாவது சிங்கத்தின் காதுபோல அமைந்திருத் தலினுல் இப்பெயர் பெற்றது. இந்த முத்திரை 'வருக' என்று அழைக்கும் தோற்றத்தை உணர்த்துவதாகும்.

**5-5 அ – 5 ஆ வியாக்கியான கரம் :**

பெருவிரலானது உள்ளங்கையை விட்டு விலகி முன்பக்கமாக நீண்டு வளைந்து நிற்க, சுட்டு விரலானது கீழ்நோக்கி வளைந்து பெருவிரலின் நுனியைத் தொட்டு நிற்கும்படி விளங்கும். மற்ற நடுவிரலும் அணிவிரலும் சிறு விரலும் அவ்விரண்டு விரல்களையும் விட்டு நீங்கித் தனியே மேல் நோக்கி நிமிர்ந்து விளங்கும். இந்த முத்திரை ஞாசிரியன் மாணவகனுக்கு மெய்ப் பொருளின் விளக்கத்தைக் குறிப்பினுல் உணர்த்துவதாகும். எனவே இது 'வியாக்கியான கரம்' என வழங்கப் பெறும். இதற்குச் 'சின்முத்திரை' என்ற மற்ருெரு பெயரும் உண்டு. இத்தகைய கர அமைப்பு தட்சிணு மூர்த்தியின் சில அமைப்புக்களில் காணப்படும்.

இச் சின்முத்திரையில் பெருவிரல் பதியாகிய சிவபிரானையும், சுட்டு விரல் பசுவாகிய ஆன்மாவையும், நடுவிரல் ஆணவ மலத்தையும், அணி விரல் கன்மமலத்தையும், சிறுவிரல் மாயாமலத்தையும் குறிக்கும்.


இயல்பாகக் கையை விரித்தால் பெருவிரல் தனியாகவும் மற்ற நான்கு விரல்களும் ஒன்ருகவும் சேர்ந்து விளங்குவதைக் காண்கிருேம். இது சுட்டுவிரலாகிய ஆன்மா பெருவிரலாகிய சிவபிரானைவிட்டு விலகியே நிற்பதை உணர்த்தும். அவ்வாறு விலகி நிற்பதோடல்லாமல் நடுவிரலாகிய ஆணவத்தோடும் அணிவிரலாகிய கன்மத்தோடும் சிறுவிரலாகிய மாயையோடும் சேர்ந்து அவற்ருேடு கட்டுண்டு நிற்கின்றது.

அவ்வாறு கட்டுண்டு கிடக்காமல் அம்மும்மலங்களின் துன்பத்தினின்றும் விலகி, பெருவிரலாகிய சிவத்தோடு ஒன்றியிருந்தால் பேரின்பப் பெருவாழ்வு பெற்று இன்புறலாம் என்பதைக் குறிப்பினுல் புலப்படுத்துவதே இச்சின்முத்திரையின் உட்பொருளாகும். இது ஞானமுத்திரை என்றும் பெயர் பெறும்.

இம் முத்திரையைக் கீழ்நோக்கியபடி உட்பக்கமாகப் பிடித்தால் இது யோக முத்திரை எனப்படும். இதில் சுட்டு விரல் பெரு விரல் அடியைப் பொருந்தி நிற்கும்.

இதே முத்திரையைப் பெருவிரல் நுனியும் சுட்டுவிரல் நுனியும் ஒன்றும்படி அமைப்பதொரு முறையும் உண்டு.

10 A



இவை ஆன்மாவானது மும்மலந் தொடர்பினின்றும் விலகி இறைவனேடு ஒன்றிப் பேரானந்தப் பெரு வாழ்வு வாழ்வதே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்பதை உணர்த்த எழுந்த முத்திரைகளாகும்.

**6. சூசிகரம் :**

சுட்டு விரலை மட்டும் செங்குத்தான நேர்நிலையில் வைத்து, கடக கரம் போல நிறுத்துவது 'சூசிகரம்' எனப்படும். இதன் தோற்றம் ஊசிபோல் அமைந்திருத்தலின் இப்பெயர் பெற்றது. ஏதாவது ஒன்றைச் சுட்டிக் காட்டுவது இதன் குறிப்பாகும்.

**7. தர்ஜனீகரம் :**

இது சூசிகரம் போன்றதுதான்; எனினும் சுட்டுவிரல் பின்பக்கமாகச் சாய்ந்து காணப்படும். இது அச்சுறுத்தும் தன்மையைப் புலப்படுத்தும்.

**8. கர்த்தரீமுக கரம் :**

சுட்டு விரலும் நடுவிரலும் நிமிர்ந்து நிற்க, பெருவிரலும் அணிவிரலும் முன்பக்கம் சிறிது வளைந்திருக்க, சிறுவிரல் சற்றே முன்புறம் வளைய அமைந்திருப்பது 'கர்த்தரீ' முககரம்' எனப்படும். இது தோற்றத்தில் கத்தரிக்கோல் போல அமைந்திருத்தலின் இப்பெயர் பெற்றது. நீண்ட அமைப்பில் உள்ள ஆயுதங்களைப் பற்றிப்பிடித்து எறிவதற்கு இம் முத்திரை பயன்படும்.

**9. அலபத்ம கரம் :**

ஐந்து விரல்களும் சற்றே மேல் நோக்கி விரிந்து அமைவது 'அலபத்ம கரம்' எனப்படும். இது மலர்ந்த தாமரை மலர் போல் தோற்றமளித்தலின் இப் பெயர் பெற்றது. இம்முத்திரை மகிழ்ச்சியைப் புலப்படுத்துவதாகும். பத்மம் – தாமரை.

**10. விஸ்மய கரம் :**

மேலே கூறிய அலபத்ம கரத்தை உள்ளங்கையை வெளியே காட்டாமல், உட்பக்கமாகப்புறங்கையைச் சாண்போருக்குத் தெரியுமாறு காட்டிப் பிடிப்பது விஸ்மயகரமாகும். இதுவியப்பு என்றும் மெய்ப்பாட்டை உணர்த்துவதாகும்.

**11. பல்லவ கரம் :**

மணிக்கட்டிலிருந்து சரிந்து கீழ்நோக்கி வளைந்து ஐந்து விரல்களும் புறங்கை வெளியே தோன்றுமாறு தொங்கவிடுவது 'பல்லவகரம்' என வழங்கப்பெறும். பல்லவம் என்பது தளிர். தளிர்க் கொத்து வளைந்து தொங்குவது போல இது அமைந்திருத்தலின் இப்பெயர் பெற்றது.

**12. நித்ரா கரம் :**

இடக்கை ஐவிரலும் அகங்கையும் ஆசனத்தில் ஊன்றியநிலையில் அமைந்து, சுட்டுவிரலும் சிறுவிரலும் சற்றே மேலெழுந்து வளைந்திருக்கத் தோற்றமளிப்பது நித்ரா முத்திரை எனப்படும். இது உறக்க நிலையைப் புலப்படுத்தும் எழில் முத்திரையாகும்.

**13. அர்த்த சந்திர கரம் :**

அகங்கையை மேல் நோக்கியமைத்து, பெருவிரல் நிமிர்ந்து நிற்க, ஏனைய நான்கு விரல்களும் இணைந்த அடுக்கடுக்காக' எதிர்ப்பக்கம் மேல் நோக்கி வளைந்து நிற்க, அரைவட்டம் போல்காட்சியளிப்பது 'அர்த்த சந்திரகரம்' எனப்படும். அரைவட்டமாக உள்ள எட்டாம் பிறைச்சந்திரனைப் போல் அமைந்திருப்பதனால் இப்பெயர் பெற்றது.

**14. அர்த்த பதாக கரம் :**

அகங்கையைப் புறத்தோற்றமாக அமைத்து, சுட்டுவிரலையும் நடுவிரலையும் இணைத்து மேல் நோக்கிச் செங்குத்தாக நீட்டி ஏனைய விரல்களையும் வளைத்து அழகுற அமைப்பது 'அர்த்த பதாககரம்' எனப்படும். இது ஆன்மாவும் இறைவனும் வேறானவை என்பதை உணர்த்தும் துவைதக் கொள்கைக்குரிய தாகும்.

இது பதாககர அமைப்பில் பாதியாக அதாவது நான்கு விரல்களுக்குப் பதில் இருவிரல்கள் மட்டும் தோன்றுவதால் அர்த்த (பாதி) பதாக (கொடி) கரம் எனப்பட்டது.

**15. திரி சூலகரம் :**


அகங்கை புறந்தே தோன்றுமாறு அமைந்து சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் ஆகிய மூன்றும் மேல் நோக்கி நிமிர்ந்து நிற்க பெருவிரலும் சிறுவிரலும் முனையோடு முனைபொருந்துமாறு நன்குக வளைத்து நிற்க அமையும்கரம் திரிசூலகரம் எனப்படும். திரிசூலம் போன்றிருத்தலின் இப்பெயர் பெற்றது.

இம் முத்திரை பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளின் தன்மையை உணர்த்துவதாகும்.

**16. முஷ்டிகரம் :**

சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் ஆகிய நான்கும் அகங்கையோடு நன்கு இறுகப் பொருந்துமாறு அமைத்து அவற்றின்மேல் பெருவிரலை வளைத்துப் பதியப் பிடிப்பது 'முஷ்டி கரம்' எனப்படும். இம்முத்திரை ஆயுதங்களை இறுக்கமாகப் பிடிப்பதற்கும், மல்யுத்தத்திற்கும் பயன்படுவதாகும்.

12-A



**17. சிகர கரம் :**

பெரு விரலை மேல்நோக்கி நேராக நிமிர்ந்து நிற்குமாறு அமைத்து, ஏனைய நான்கு விரல்களையும் ஒன்றாக வளைத்துப் பிடித்து நிற்கும் நிலை 'சிகர கரம்' எனப்படும். இது வில்லைப் பற்றிப் பிடிக்கப் பயன்படும்.

**18. பூ ஸ்பரிச கரம் :**

அமர்ந்திருக்கும் நிலையில் புறங்கை வெளிப்புறம் தோன்ற ஐந்து விரல்களும் இயல்பாக வளைந்து பூமியைத் தொட்டு நிற்க அமைந்த கரம் 'பூ ஸ்பரிச கரம்' எனப்படும்.

பூ-பூமி, ஸ்பரிசம்-தொடுதல். இம்முத்திரை ஞான நிலையினை உணர்த்துவதாகும்.

**19. கடி கரம் :**

இடுப்பில் பெருவிரல் தனியாகவும், மற்றவிரல்கள் நான்கும் சற்று வளைந்தநிலையில் நன்கு பதியுமாறு அழுந்தக் கையூன்றி சுட்டுவிரல் சிறுவிரல் இரண்டும் சற்று மேலெழுந்த நிலையில் அமைந்து விளங்கும் அழகுத்தோற்றத்திற்குக் 'கடிகரம்' என்றுபெயர்.

**20. ஊரு கரம் :**

கை மணிக்கட்டு இடுப்புக்குங் கீழே நன்கு வளைந்து தொங்குமாறு தொடைமீது பொருந்தவைத்து அமைக்கும் கரம் 'ஊருகரம்' என வழங்கப் பெறும். இதில் சுட்டு விரலும் சிறு விரலும் தொடையை விட்டு சற்றே விலகி மென்மையாக வளைந்தும், நடுவிரலும் அணிவிரலும் தொடை மீது பதிந்தும் அமைதல்வேண்டும்.

மேற் கூறிய இரு முத்திரைகளையும் நின்றகோலத் திருமேனிகளில் காணலாம்.

**21. ஆலிங்கன கரம் :**

சுட்டு விரல் முதலிய நான்கு விரல்களையும் நெருங்க வளைத்து அமைத்து சுட்டு விரல் சிறுவிரல்களைச் சிறிது மேலெழச் செய்து, பெருவிரலை விலக்கி உயர்த்தி, தேவியின் திருமேனியை வளைத்து அணைக்கும் கரம் ' ஆலிங்கன கரம் ' என்று பெயர் பெறும். ஆலிங்கனம் – தழுவுதல்.

**22. தனுர்க் கரம் :**

புறங்கை வெளியே தோன்றுமாறு அகங்கையை உட்பக்கமாக அமைத்து நடுவிரல் அணிவிரல்களை இணைத்து வில்லின்மேல் படியவைத்து, சுட்டுவிரல் சிறுவிரல்களைச் சற்று வளைத்து மேலெழச் செய்து பெருவிரலை உட்பக்கம் வளைத்து விரலின் நுனி வில்லின் மேல் பதிய வைத்திருக்கும் நிலைக்குத் ' தனுர்க்கரம் ' என்று பெயர்.

இத்தகைய தோற்றம் வில்லேந்திய தெய்வப்படிமங்களில் காணலாம். தனுர் – வில்.

**23. டமருக கரம் :**

பெருவிரல் தனித்தும் நடுவிரல் அணிவிரல் இரண்டும் தனித்தும் நிற்கும்படி இருபுறமும் வளைத்து உடுக்கையைப் பிடித்து நிற்க, சுட்டுவிரலும் சிறுவிரலும் மேலெழுந்து வளைந்து நிற்க அமைந்திருப்பது 'டமருக கரம்' எனப்படும்.

இது துடி என்னும் உடுக்கையை முழக்கும் நிலையைப் புலப்படுத்தும். டமருகம் – உடுக்கை.

**24. தாடன கரம் :**

சுட்டு விரல் முதலிய நான்கு விரல்களையும் ஒன்றாக இணைத்து மேல் நோக்கி அமைத்து, பெருவிரலைச் சற்றே பின்னோக்கி அகலச் செய்து அமைக்கும் நிலைக்குத் 'தாடன கரம்' என்று பெயர்.

தாடனம்–அடித்தல், தட்டுதல்

இது காறும் ஒற்றைக் கரங்களின் முத்திரைவகைகளைக் கண்டோம். இனி இரு கரங்களின் முத்திரை வகைகளைக் காண்போம்.

**25. அஞ்சலி கரம் :**

அபயகரத் தோற்றத்தோடு அமைந்த வலக்கரம் இடக்கரம் இரண்டையும் நெஞ்சுக்கு நேராகச் சேர்த்து அமைத்த தோற்றத்தை 'அஞ்சலிகரம்' என்பர்.

அஞ்சலி–வணக்கம்.

**26. தியான கரம் :**


அமர்ந்திருக்கும் நிலையில் இடக்கை ஐந்து விரல்களையும் வலப்பக்கம் நீட்டி ஒருசேர இணைத்து மடிமீது அங்கை மேல்நோக்கியவாறு படிய வைத்தும், இதேநிலையில் வலக்கையை அதன்மேல் படியவைத்து விரல்களை எல்லாம் இடப்பக்கம் நீட்டியும் அமைக்கும் கரம் 'தியானகரம்' எனப் பெயர் பெறும்.

இது யோக முத்திரையாகும்.

**27. புஷ்ப புட கரம் :**

வரதமுத்திரைபோல அமைந்த வலக்கரம் இடக்கரம் இரண்டையும் தனித்தனியே. நெஞ்சுக்கு நேரே அழகுற அமைத்து. விரல்களைச் சற்றே உள் நோக்கியவாறு வளைத்துக் காட்டும் நிலையில் அமைந்து இருப்பது, 'புஷ்ப புட கரம்' எனப்படும்.

இது மலர்களால் வணங்கும் தன்மையைப் புலப்படுத்துவதாகும்.


22
23
24
25
26
27
28
28 அ
29
29 அ
30
31
32

28. தர்ம சக்கர கரம் :

வலப்புறங்கையை மார்பின் அருகே வைத்து அபய முத்திரையாக விரல்களை வெளிப்பக்கமாகப் பிடித்து சுட்டுவிரலை மட்டும் முன்னே நீட்டி வளைத்து, பெருவிரலைத் தொடச்செய்து, இடக்கையை வலக்கைக் குப்பக்கத்தில் கொண்டுவந்து அகங்கையை உட்பக்கமாகப் பிடித்து, ஐந்து விரல்களையும் மேல்நோக்கி நீட்டிப் பிடித்து, இருகைகளும் நெருங்கி அமையுமாறு செய்து, வலச் சுட்டு விரலால் இடக்கை நடுவிரலை நெருங்க அமைத்துச் சின் முத்திரைபோல தருமவிளக்கம் கூறும் முத்திரைக்குத் 'தர்மசக்கர முத்திரை' என்று பெயர்.

இது தர்ம சக்கரத்தை இயங்கச்செய்யும்தோற்றம்போல் இருந்தலின் இப்பெயர் பெற்றது.

வலக்கையை நெஞ்சுடன் பொருந்த அமைத்து வெளிப்பக்கமாக விபாக்கியான முத்திரையைப் போலப் பிடித்து இடக்கையை வலக்கைக்குப் பக்கத்தில் கொண்டுவந்து உட்பக்கம் காட்டி, சுட்டு விரலும் பெருவிரலும் நெருங்கி அமையவும், மற்றவிரல்கள் பின்னேக் கியமைந்து நிற்கவும் ஞானமுத்திரையாகப் பிடித்த கையின் தோற்றம் 'தர்மசக்கர பிரவர்த்தன' முத்திரை எனப்பெயர் பெறும்.

இதுவும்முற்கூறியது போன்ற மற்றொரு வகை முத்திரையாகும்.

இனி மேற்கூறிய முத்திரைகளுடன் அழகுத்தோற்றத்தைப் புலப் படுத்தும் வகையில் அமைந்த நான்கு வகைக் கர லட்சணங்களையும் காண்போம்.

29-29 அ. கஜ கரம் :

மணிக்கட்டு கீழ்முகமாக வளைந்து புறங்கை வெளிப்பக்கமாகத் தொங்க, முற்கூறிய தளிர்க்கரம் போலவே விரல்கள் விளங்க அமைத்துக் காட்டும் நிலைக்கு 'கஜகரம்' என்று பெயர். மணிக்கட்டு மேலும்சற்று வளைய அமைப்பது மற்றொருவகைக் கஜகரம்.

இது யானையின் துதிக்கை போல விளங்குவதனால் இப் பெயர் பெற்றது.

30. தண்ட கரம் :

முற்கூறிய கஜகரத்தை முன்பக்கமாக நீட்டி அமைப்பது 'தண்ட கரம்' எனப்படும்.

இது அமர்ந்த நிலையில் மடக்கிய முழங்காலின் மீது மணிக்கட்டு அமைய விளங்கும் தோற்றமாகும். போக தண்டத்தில் மணிக்கட்டை

வைத்திருப்பதற்குப் பதிலாக முழங்காலின் மீது மணிக்கட்டினை வைத்துள்ள தன்மையைப் புலப்படுத்துவதாகும்

தண்டம் – யோகதண்டம், வளைதடி.

31. டோல கரம் :


ஒடிந்த மரக்கிளை கீழே விழாமல் மரத்தில் தொங்கி நிற்பது போல தோள் பகுதியிலிருந்து நீண்டு தொங்குமாறும் விரல்கள் பல்லவ முத்திரையைக் காட்டி நிற்கு மாறும் அமைந்து விளங்கும் கரம் ' டோல கரம் ' எனப்படும்.

32. பிரசாரித கரம் :

தோளினை நேராக நீட்டிப் பல்லவ முத்திரையைக் காட்டி நிற்கும் கரத்தோற்றத்திற்குப் ' பிரசாரித கரம் ' என்று பெயர்.

16-A

## சிற்பங்களில் விளங்கும் ஆயுதங்கள்




## ஆயுதங்களின் விபரம்

1. பாசம்
2. அங்குசம்
3. தந்தம்
4. வேதாளம்
5. சக்தி
6. அம்பு
7. வில்
8. சக்கரம்
9. கத்தி
10. கேடகம்
11. சம்மட்டி
12. கதை
13. நாகபாசம்
14. சூலம்

---

இவ் ஆயுதங்களின் விளக்கங்களை ஆதீன வெளியீடு எண் 100ல் காண்க.

## சிற்பங்களில் விளங்கும் ஆயுதங்கள்



## ஆயுதங்களின் விபரம்

15. குந்தாலி
16. மழு
17. கொடி
18. தண்டம்
19. கமண்டலம்
20. பரசு
21. கரும்பு வில்
22. சங்கம்
23. புஷ்பபாணம்
24. கோடரி
25. அக்ஷமாலை
26. சாமரம்
27. கட்டுவாங்கம்
28. தீ அகல்
29. வீணை

---

இவ் ஆயுதங்களின் விளக்கங்களை ஆதீன வெளியீடு எண் 100ல் காண்க.

# ஆயுதங்களும் பிறபொருள்களும்

**போர்க் கருவிகள் :**

சக்தி, சூலம், சங்கு, சக்கரம், வஜ்ரம், தண்டம், உடைவாள், சுரிகை, கேடயம், வில், அம்பு, மழு, கதை, சம்மட்டி, ஈட்டி, வேல்.

**தொழிற் கருவிகள் :**

கலப்பை, உலக்கை, கொட்டாபுளி, சிருக், சிருவம், தந்தம், கத்தரி, எழுத்தாணி, தாளம், உழவாரப்படை, அங்குசம், பரசு குந்தாளி, அரிவாள், சாட்டை, யோக தண்டம், முழக்கோல், உளி.

**இசைக் கருவிகள் :**

யாழ், ( பஞ்ச மரபு நூலில் கூறப்பட்டுள்ள யாழின் வகைகளாவன - பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், வில்யாழ், நாரதயாழ், கீசகயாழ், ஆயிரப் பேரியாழ் என்பன ), வீணை, குழல், முரசு, மத்தளம், பஞ்சமுக வாத்யம், உடுக்கை, எக்காளம், மிருதங்கம், தம்புரா.

**உயிரினங்கள் :**

இடபம் ( ரிஷபம் ), சிம்மம், குதிரை, ( அஸ்வம் ), மான், அஜம் ( ஆடு ), பசு, மூஷிகம், ஞமலி ( நாய் ), ஆமை, அன்னம், மயில், சேவல், கிளி, காகம், சர்பம் ( பாம்பு ), முயலகன், வேதாளம், பூதம், கற்பக விருக்ஷம், காமதேனு, புருஷாமிருகம், யாளி, யானை.

**பூக்கள் :**

செந்தாமரை, குவளை, அல்லி, வெண்தாமரை, ஊமத்தை, எருக்கம்பூ, செங்கழுநீர், கொன்றை.

**பொதுப் பொருள்கள் :**

மணி, கண்ணாடி, தீபம், கலசம், கமண்டலம், கெண்டி, அக்ஷமாலை, ஸ்படிகமாலை, ஏடு, கொடி, கபாலம், கட்வாங்கம், குடை, வீரக்கழல், சாமரம், சிலம்பு, செங்கோல், தலைக்கோல், தீச்சுடர், கரும்பு வில், மலர்க்கணை, மோதகம், கொக்கிறகு, கங்கை, நெற்கதிர், கும்பம், மாலை, பாசம், லிங்கம், பலிபீடம், திருவாசி இன்னும் எத்தனையோ பொருள்கள் உள்ளன.

## *காளிகா புராணத்தில் கூறப்பட்ட முத்திரைகள்


( 65-வது அத்தியாயம் )

1. தேனு
2. சம்புடம்
3. ப்ரான்ஜலி
4. பில்வ
5. பத்மக
6. நாராசம்
7. முண்டம்
8. தண்டம்
9. யோநி
10. அர்த்தயோநி
11. வந்தனி
12. மகாமுத்ரா
13. வைஷ்ணவி
14. மகாயோநி
15. பகம்
15. புடகம்
17. நிஸ்ஸங்கம்
18. அர்த்த சந்திரன்
19. அங்கம்
20. த்விமுகம்
21. சங்கம்
22. முஷ்டிகா
23. வஜ்ரம்
21. ஆபத்தம்
25. விமலம்
26. கடம்
27. துங்கம்
28. புண்ட்ரம்
29. சிகரிணி
30. அர்த்ததேனுக
31. சம்மீலினி
32. குண்டம்
33. சக்கரம்
34. சூலம்
35. சிம்மமுகி
36. கோமுகம்
37. ப்ரேங்நாம
38. உன்மைகம்
39. பிம்பம்
40. பாசுபதம்
41. சுத்தம்
42. த்யாகம்
43. சாதனீ
44. ப்ரசாதனீ
45. உக்ரமுத்திரை
46. குண்டலி
47. வ்யூகம்
48 த்ரிமுகம்
49. அளிவல்லி
50. யோகம்
51. ப்ரான்ஜலி
52. பேதம்
53. சம்மோகனம்
54. பாணம்
55. தனுஸ்
56. தூணிரம்


---

* ஆதீனத்தின் சரஸ்வதிமகால் கையெழுத்துப் பிரதிப்புலத்தில் காணப்பட்ட செய்தியாகும். இதனைத் தொகுத்து அளித்தோர் இவ்வாதீனத்தின் 17-வது குருமூர்த்திகள்.

## சிற்பங்களில் விளங்கும் பொருள்கள்



## சிற்பங்களில் விளங்கும் பொருள்களும் வாகனங்களும்



இவைகளின் விளக்கங்களை ஆதீன வெளியீடு எண் 123ல் காண்க.

## "தந்திரசாரம்" என்ற நூலில் காணப்படும் முத்திரைகள்

**சிவனுடைய முத்திரைகள் :**

1. லிங்கம்
2. யோனி
3. த்ரிசூலம்
4. அக்ஷமாலா
5. அபயம்
6. மிருகம்
7. கட்வாங்கம்
8. கபாலம்
9. டமரு

**விஷ்ணு முத்திரைகள் :**

1. சங்கம்
2. சக்கரம்
3. கதை
4. பத்மம்
5. வேணு
6. ஸ்ரீ வத்சம்
7. கௌஸ்துபம்
8. வனமாலா
9. ஞானமுத்ரா
10. பில்வா
11. காருடா
12. நாரசிம்ஹீ
13. வாராகி
14. ஹயக்ரீவி
15. தனுஸ்
16. பாணம்
17. பரசு
18. ஜகன்மோகினி
19. காமமுத்ரா

**கணேச முத்திரைகள் :**

1. சப்தமுத்திரை
2. தந்தம்
3. பாசம்
4. அங்குசம்
5. விக்னமுத்திரை
6. பரசு
7. வட்டுமுத்திரை
8. பீஜபூரமுத்திரை.

**அக்னிமுத்திரை :** 1. சப்தஜிஹ்வா

**சூர்யமுத்திரை :** 1. பத்மம்

**சக்தி முத்திரைகள் 31 :**

1. பாசம்
2. அங்குசம்
3. வரா
4. அபீதி
5. தனுஸ்
6. பாணம்
7. கட்கம்
8. கர்மமுத்திரை
9. முசலம்
10. துர்க்கை
11. சக்கரம்
12. லக்ஷ்மி
13. வீணு
14. புஸ்தகமுத்ரா
15. வ்யாக்யான்
16. காலினீ
17. கும்பமுத்ரா
18. தந்தம்
19. பிரார்த்தனு
20. அன்ஜலி
21. காலகர்ணிகா
22. விஸ்மயம்
23. நாதமுத்ரா
24. பிந்து
25. சம்ஹாரம்
26. மத்ஸ்யம்
27. கூர்மம்
28. முண்டம்
29. லேலிஹான்
30. மகாயோனி
31. தூமகேது

**ஆவாகன முதலிய முத்திரைகள் 9 ;**

1. ஆவாஹினீ
2. ஸ்தாபனீ
3. சந்நிதாபினீ
4. சம்போதினீ
5. சம்முகீகரணீ
6. சகலாக்ருதி
7. அவகுண்டனம்
8. தேனு
9. மகாமுத்ரா

**சக்தி சம்பந்தமான சில் முத்திரைகள் 12 :**

1. திரிகண்டா
2. சம்ரோக்ஷபகாரணீ
3. வித்ராவிணீ
4. ஆகர்ஷணீ
5. வச்யகரி
6. உன்மாதினீ
7. மகாங்குசா
8. கேசரி
9. பீஜம்
10. யோனிமுத்ரா
11. சௌபாக்யதாயினீ
12. பூதினீ

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | காளிகாபுராணம் | | | — 56 |
| 2. | தந்திரசாரம் விஷ்ணு | முத்திரைகள் | | — 19 |
| | சிவன் | ,, | ,, | — 9 |
| | கணேசர் | ,, | ,, | — 8 |
| | அக்னி | ,, | ,, | — 1 |
| | சூர்யன் | ,, | ,, | — 1 |
| | சக்தி | ,, | ,, | — 31 |
| | ஆவாஹனுதி | ,, | ,, | — 9 |
| | சக்தி சம்பந்தம் | ,, | ,, | — 12 |
| | | | | 146 |

# மகுட முடிகள்


மகுட முடிகள் என்பன மகுடமாகிய முடிகள் என்றும், மகுடம் போன்றமுடிகள் என்றும் பொருள்படும். தலைமுடியைப் பல்வேறு வகையாக முகத் தோற்றத்திற்கு ஏற்றவாறு அழகுத் தோற்றத்தை அதிகரிக்கச் செய்வதற்கு உரியதொரு கலை தமிழ் மக்களிடையே தோன்றிப் பண்டைக்காலந் தொட்டுப் பரவி இருந்தது. சங்க இலக்கியங் களில் துஞ்சுகழல், பனிச்சை, கொன்டை, போன்ற பலவகைக் கூந்தல் அலங்காரங்கள் கூறப்பட்டுள்ளன.

கூந்தலை இரண்டு பகுதியாகவும் மூன்று பகுதியாகவும் பகுத்துக் கொண்டு அழகுறப் பின்னித் தொங்க விடுதல், ஐந்தாகப் பகுத்துக் கொண்டு பின்னித்தெங்க விடுதல் போன்ற பலவகைக் கூந்தல் அலங் காரங்கள் உள்ளன.

மிகப் பழங்காலத்தில் மகளிர் கூந்தலைச் சீவி முடிப்பதற்குச் சீப்புக்கள் இல்லை. இதனை "கழற்கனி வகுத்த குழற்சில் ஓதி" எனவரும் சங்க இலக் கியப் பாடலால் உணரலாம். அதாவது (ஊமத்தங்காய் போன்று) முட்களை அடர்த்தியாக உடைய கழற்சிக்காய் கொண்டு கூந்தலைச் சீவி முடித்தனர் என அறியக்கிடக்கின்றது. பின்னர் யானைத் தந்தம், மாட்டுக் கொம்பு, மரம், போன்றவற்றால் சீப்புக்கள் செய்து பயன்படுத்தித் தலையை எழில் தோன்ற அலங்கரித்தனர்.

நன்கு எழிலுடன் அலங்கரிக்கப்பட்ட தலையின் மீது பொன்னால் செய்யப்பட்டு மணிகள் இழைத்த மகுடத்தைச் சூட்டி அம்முடிக்குப் பின்னும் சிறந்த முறையில் அழகூட்டுவர். பெரும்பாலும் மகளிர்க்குக் கூந்தல் அலங்காரம் செய்து மகுடம் அணிவிப்பர். ஆடவர்க்குப் பொன்னால் செய்யப்பட்ட மகுடம் சூட்டிப் பொலிவூட்டுவர்.

இத்தகைய தலையழகுக் கோலங்கள் தெய்வங்கட்கும், அரசர்க்கும், அரசியர்க்கும் குழந்தைகட்கும் அலங்கரிக்கப்பட்டன. இவ்வாறு எழிலூட்டப்பட்ட மகுடமுடிகள் பதின்மூன்று வகைப்படும். இவைகளை எல்லாம் நமது திருக்கோயில்களில் உள்ள சிற்பங்களில் கண்டு மகிழலாம். அவையாவன;-ஜடாமகுடம், ஜடாபாரம். ஜடாமண்டலம், ஜடாபந்தம், விரிசடை, சுடர்முடி, கேசபந்தம், சிரஸ்திரகம். குந்தளம்,




1. ஜடாமகுடம்
௨. ஜடாபாரம்
3. ஜடாபாரம் (வேறுவகை)
4. ஜடாபாரம் (வேறுவகை)



ஜடாபந்தம்



ஜடாபந்தம்



சுடர்முடி



விரிசடை

தம்மில்லம், அளகசூடம், கிரீடமகுடம் கரண்டமகுடம் என்பனவாம். இவற்றின் உட்பிரிவுகளும் பலவுள்ளன. இவற்றுள் இன்றியமையாச் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

**ஜடாமண்டலம் :**

முகத்திற்கு ஏற்றவாறு முக அகலத்தைப் போல மும்மடங்கு குறுக்களவுடையதாக அமைத்து தலையின் பின்னே பிடர்க்கண் திரிசடைகளாக வகுத்துப் பின்னப்பட்ட சடைகளை வட்டமாக அமைத்த கோலத்திற்கு ஜடாமண்டலம் என்று பெயர்.

இந்த எழிற்கோலம் தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர், மாணிக்கவாசகர், புத்தர், திருவானைக்கா பைரவர்செப்புச்சிலை போன்ற படிவங்களில் காணலாம்.

**ஜடாபாரம் :**

தலையின் இரண்டு பக்கங்களிலும் திரிசடையாக அமைக்கப்பட்ட தொகுதியும் சுருள்சடையாக முறுக்கி அமைக்கப்பட்ட தொகுதியும் பொருந்த மிகவும் அடர்த்தியாகத் தொங்கவிட்டு அமைந்த எழிற்கோலம் ஜடாபாரம் எனப்படும்.

இத்தகைய எழிற்கோலத்தினை தட்சிணாமூர்த்தி, ஐயனார், இவ்வாதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலினுள் அருள் வழங்கும் ஸ்ரீ முகாம்பிகை முதலிய திருவுருவங்களில் காணலாம்.

**விரிசடை**

திரி சடைகளாக வகுக்கப்பட்டு தலையின் இருபக்கமும் வீசிப்பறந்து விளைந்து நிற்கும் சடைக்கோலம் விரிசடை எனப்படும். இந்த அழகுத் திருக்கோலம் நடராஜப் பெருமானின் திருவுருவங்களில் கண்டு மகிழலாம். ஆனந்தக் கூத்தன் ஆடிக் கொண்டே இருப்பதனால் சடைகளும் விரிந்து பறந்து தொழிற்படுவது போல் காணப்படுகிறன. சிலசிற்பங்களில் விரிசடைகள் இல்லாமல் தலை உச்சியில் சடைகள் எல்லாம் ஒரு சேரக்கட்டி, மேல் நோக்கியவாறு (உச்சிக்கொண்டைபோல) அமைந்துள்ளன. சிதம்பரம் தலத்தில் வளங்கும் ஆடல் வல்லானின் சடைகள் விரிசடையாக அமையாமல், பின்தாழ்சடைகளாக உள்ளதை அபிஷேக காலங்களில் காணலாம். இது தனிச்சிறப்புடையதாகும். மேலும் அறிய நடராஜப் பெருமானின் விரிசடை அழகினை இவ்வாதீன வெளியீடான "ஆடல்வல்லான்" எனும் புத்தகத்தில் காணலாம்.


**சுடர்முடி :**

கொழுந்து விட்டெரியும் தீச்சுடர் போலக் கூந்தலை மேல் நோக்கிய நிலையில் அடுக்கடுக்காக உச்சி கூர்மையுடையதாக (வேம்பிலைபோல வெளித்தோற்றம்) அமைந்தகோலம் சுடர்முடி எனப்படும். இக் கோலத்தைக் காளியம்மன், மாரியம்மன், பிடாரி, அகோரவீரபத்திரர் போன்ற உக்ர முடைய தெய்வத் திருவுருவங்களில் காணலாம்


**கேசபந்தம் :**

உச்சந் தலையிலிருந்து ஒருமுக அளவு, ஒன்றரைமுக அளவு அல்லது இரண்டு முக அளவுடைய உயரங்கொண்டதாகவும் செங்குத்தாகவும் தூக்கி முடிக்கப்பட்ட கோலத்திற்கு கேசபந்தம் என்று பெயர். இதன் அடிப்பகுதியில் அதாவது நெற்றிக்குமேல் மணி வடங்களை வட்டமாக அமைத்து முகத்திற்கு மேலும் எழிலூட்டுவதாக அமைப்பதுண்டு.

இத்தகைய திருக்கோலம் சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், சோமாஸ்கந்தர், கங்காவிசர்ஜனர், உமாதேவியார், கலைமகள், சாவித்திரி போன்ற திருவுருங்களில் காணப்படும்.



ஜடாமண்டலம்



கேசபந்தம்



சர்ப்ப மௌலி



ஜடாமண்டலம்

# ஆசனங்கள்

ஆசனம் என்பது இருக்கை என்றும் பீடம் என்றும் பொருள் படும். ஒருபடிவம் அமர்ந்துள்ள நிலையையும் ஆசனம் எனலாம். அப்படிவம் அமர்ந்துள்ள பீடத்தையும் ஆசனம் எனலாம். எனவே ஆசனம் என்னும் சொல்லுக்கு இடத்திற்கு ஏற்பப் பொருள் கொள்ளவேண்டும். ஆசனம் என்பது பொதுவாக எழிலூட்டுவதற்கும் சிறப்பாக யோகத்திற்கும் மனஅடக்கத்திற்கும் பயன்படும். இத்தகைய ஆசனம் ஐந்துவகைப்படும். அவை ஸ்தானகம், ஆசனம், சயனம், ஸ்தானுசனம், சயனுசனம் என்பனவாம்.

ஸ்தானகம் என்பது நின்றகோலத்தையும், ஆசனம் என்பது அமர்ந்த கோலத்தையும், சயனம் என்பது கிடந்த கோலத்தையும், ஸ்தானுசனம் என்பது நின்றகோலத்தைச் சார்ந்த நிலைகளையும், சயனுசனம் என்பது கிடந்த கோலத்தைச் சார்ந்த நிலைகளையும் உணர்த்துவனவாகும்.

இனி இவ்வாசன நிலைகளின் தன்மைகளைச் சற்று விரிவாகக் காண்போம்.

## 1. ஸ்தானகம்

நின்ற கோலத்தை உணர்த்தும் ஸ்தானகம் நான்கு வகைப்படும்.

**1. சமபாத ஸ்தானகம் :**

இது நின்ற கோலத்தில் பாதங்களைச் சமமாக வைத்து நிற்கும் நிலையாகும். அதாவது உடலைவளைக்காமல் நேராக நிமிர்ந்து நின்று கை கால்களைநெருக்கமாக வைத்துநிற்கும் நிலையாகும். இதற்குச் சமபாத ஸ்தானகம் என்று பெயர்.

**2. வைதஸ்திக ஸ்தானகம் :**

மேற் கூறிய ஆசனத்தைப்போலப் பாதத்தின் பெருவிரல்கள் இரண்டும் இரண்டுசாண் அளவு இடை வெளியுள்ளதாக அகல விரித்து நிற்கும் நிலைக்கு வைதஸ்திக ஸ்தானகம் என்று பெயர்.

**3. அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் :**

முற்கூறிய வைதஸ்திக ஸ்தானகத்தில் வலக்கால் மட்டும் முன்போல் ஒருசாண் அளவு இடைவெளியுள்ளதாக அகலவிரித்து, இடக்கால் இருந்த நிலையிலேயே அமைத்து நிற்கும் நிலைக்கு 'அர்த்த வைதஸ்திக ஸ்தானகம்' என்று பெயர். அதாவது வைதஸ்திக ஸ்தானத்தில் பாதி என்பது பொருள்.

**4. காயோத் சர்க்கம் :**

நேரான நிலையில் தலைநிமிர்ந்து நின்று பாதங்களைச் சமமாக வைத்து கைகள் தொடைகளைப் பொருந்தி இருக்குமாறு தொங்கவிட்டு நிற்கும் நிலைக்குக் 'காயோத் சர்க்கம்' என்று பெயர். இதற்கு 'ஆஜானு லம்ப பாகு' என்று மற்றொரு பெயரும் உண்டு.

இது சமண சமயத்தில் நின்றகோலப் படிமங்களுக்கு அமைக்கப்படும்.

## உ. ஆசனம்

ஒரு பீடத்தில் அமர்ந்து கால்களை வெவ்வேறு வகையாக வைத்திருக்கும் நிலைக்கு ஆசனம் என்று பெயர். இது ஒன்பது வகைப்படும்.

**1. சுகாசனம் :**

ஓர் ஆசனத்தின் மீது சாய்வின்றி நேராக அமர்ந்து ஒருகாலை ஆசனத்தின்மீது நேராக மடித்து வைத்து மற்றொரு காலை நேராகத் தொங்கவிட்டிருக்கும் நிலைக்குச் "சுகாசனம்" என்று பெயர்.

**2. பத்மாசனம் :**

உடலை நேராக அமைத்து இரண்டு பாதங்களையும் குறுக்காக இடக்கணுக்கால் கீழேயும் வலக்கணுக்கால் மேலேயும் பொருந்துமாறு பதிய வைத்து உள்ளங்கால் இரண்டும் மேல்நோக்கியதாக அமைந்த நிலைக்குப் 'பத்மாசனம்' என்று பெயர்.

இது மலர்ந்ததாமரை போல அமைந்திருப்பதனால் இப் பெயர் பெற்றது. இதற்குக் கமலாசனம் என்று மற்றொரு பெயரும் உண்டு.


பத்மாசனத்திற்குக் கூறியபடி பாதங்களை அமைக்க வேண்டும். ஆனால் ஒருபாதம் (இடப்பாதம்) கீழும் மற்றொரு பாதம் மேலுமாக ஒன்றன் மீது ஒன்று பொருந்துமாறு அமைக்கும் நிலைக்கு அர்த்தபத்மாசனம் என்று பெயர். பத்மாசன அமைப்பில் பாதி அமைப்பு உடையதாக அதாவது இரு பாதங்களும் மேல் நோக்கியதாக இல்லாமல் ஒன்று மட்டும் (பாதிமட்டும்) மேல் நோக்கியதாக அமைந்திருப்பதனால் அர்த்த பத்மாசனம் எனப்பட்டது.

இது பத்மாசனத்தின் மற்றொரு வகையாகும்.

**3. லளிதாசனம் :**

இருகால்களையும் பீடத்தின்மீது வைத்து அமர்ந்து, ஒருகாலைப் பீடத்தின் மீது மடக்கிப் படுக்கையாக வைத்து, மற்றொருகாலை மடக்கி நிறுத்திய நிலைக்கு 'லளிதாசனம்' என்று பெயர்.


இது விநாயகர், பூதகணங்கள் ஆகிய படிமங்களில் காணப்படும்.



சுகாசனம்



வீராசனம்




இராஜலிங்காசனம்




பத்மாசனம்



உத்குடிகாசனம்



அர்த்த பத்மாசனம்



யோகாசனம்



மகாராஜ லீலாசனம்



ஸ்வஸ்திகாசனம்

**4. மகாராஜ லீலாசனம் :**

மேலே கூறிய நிலையில் வலக்கையை மடித்து, தூக்கி நிறுத்திய வலமுழங்காலின் மீது மடித்த வல முழங்கையை வைத்து நீட்டி, இடக் கையைப் பக்கத்தில் ஊன்றி உடலைச் சற்றுவளைத்து இடக்காலைப் படிய வைத்து மடக்கி அமர்ந்திருக்கும் நிலைக்கு மகாராஜலீலாசனம் என்று பெயர்.

இதனைப் பௌத்த படிமங்களில் காணலாம்.

**5. வீராசனம் :**

பீடத்தின்மீது அமர்ந்த நிலையில் வலக்காலைத் தொங்கவிட்டு ஊன்றி, இடக்காலை வலமுழங்காலின் மீது படியவைத்து நீட்டி, உடலைநேராக நிமிர்த்தி அமர்ந்திருக்கும் நிலைக்கு வீராசனம், என்று பெயர். இதற்கு 'இராஜலிங்காசனம்' என்று மற்றொரு பெயரும் உண்டு.

இது பெருமிதத்தையும் தலைமைத் தன்மையையும் ஆற்றலையும் புலப்படுத்தும் ஆசனமாகும். தட்சிணாமூர்த்தி படிவத்துக்கு இது சிறப்பாக அமைந்ததாகும்.

பீடத்தில் இரு கால்களையும் நெருங்கவைத்து அமர்ந்து வல முழங் காலின் மீது இடக்கால் பரடு பொருந்துமாறும், இட முழங்காலின் கீழே வலக்கால் பரடும் பெருவிரலும் படுமாறும் அமர்ந்திருக்கும் நிலை 'வீராசனத்தின்' மற்றொரு வகையாகும்.

இதனை வள்ளுவர், கம்பர் படிமங்களில் காணலாம்.

**6. உத்குடிகாசனம் :**

ஆசனத்தில் அமர்ந்த நிலையில் ஒருகாலைக் கீழே படியுமாறு தொங்கவிட்டு, மற்றொரு காலை மடக்கி அமர்ந்துள்ள ஆசனத்தின்மீதே ஊன்றிய நிலையில் அமர்ந்துள்ள அமைதிக்கு 'உத்குடிகாசனம்' என்று பெயர்.

இது சிறப்பாக யோகதட்சிணாமூர்த்தி, ஐயனார் படிமங்களில் காணப்படும்.

**7. யோகாசனம் :**

மனத்தை ஒருமுகப்படுத்திப் பத்மாசன நிலையில் அமர்ந்திருக்கும் நிலைக்குப் பொதுவாக யோகாசனம் என்றுபெயர்.

ஆசனத்தில் அமர்ந்து இரு கால்களையும் சுவஸ்திகம்போல் குறுக்காக மடித்து, முழங்கால் இரண்டையும் யோக பட்டத்தால் பிணித்துச் சுற்று

மேலெழச்செய்து, வலமுழங்கால் மீது வலக்கரத்தை வைத்துச் சின்முத்திரை காட்டி. இட முழங்காலின்மீது இடமுழங்கை அமையுமாறு (யோகதண்டத்தில் வைத்திருப்பது போல) நீட்டி, நிமிர்ந்திருந்து மூக்கின் நுனியைக் கண்கள் நோக்கியவாறு அமைந்த நிலைக்கு 'யோகாசனம்'என்று பெயர்.

**8. ஸ்வஸ்திகாசனம் :**

அமர்ந்த நிலையில் கால்கள் இரண்டும் ஒன்றற்கொன்று குறுக்காக வைத்திருக்கும் நிலைக்கு 'ஸ்வஸ்திகாசனம்' என்று பெயர். ஞான முத்திரையும் மூக்கின் நுனியை நோக்கிய கண்கள் அமைதியும் இதற்கு உண்டு.

**9. கருடா சனம் :**

வல முழங்காலைக் கீழே ஊன்றி, பாதத்தைப் பின்னே நீட்டி, இடக் காலை மடக்கிக் கீழே ஊன்றி அமர்ந்திருக்கும் நிலைக்குக் 'கருடாசனம்' என்றுபெயர்.

திருமால் வாகனமாகிய கருடனுக்கு உரிய ஆசனம்.

## 3. சயனம் :

ஆசனத்தின் மீது படுத்துள்ள நிலையில் கைகளையும் கால்களையும் உடலையொட்டி நீட்டிக் கிடக்குமாறு அமைந்த கோலத்திற்குச் 'சயனம்' என்று பெயர்.

## 4. ஸ்தானசனம் :

இது நின்ற கோலத்தைச் சார்ந்த நிலைகளை உணர்த்துவதாகும். இது ஏழுவகைப்படும்.

**1. வைசாக ஸ்தானகம் :**

நின்ற கோலத்தில் ஒரு காலைப் பதிய ஊன்றி, மற்றொருகாலை இரண்டரை சாண் அளவாக முன்வைத்து நிமிர்ந்து நிற்கும் நிலை 'வைசாக ஸ்தானகம்' என்று பெயர் பெறும்.

வில் ஏந்திநிற்கும் படிவங்களில் இந்தக் கோலத்தைக் காணலாம்.

**2, வைஷ்ணவம் :**

நின்ற கோலத்தில் ஒரு காலைப் பதிய ஊன்றி மற்றொருகாலைச் சிறிது மடக்கி உடல் வளைவோடு நிற்கும் நிலை வைணவம் எனப்படும்.

இது விஷ்ணுவுக்கு உரியதாகும். இந்த நிலையில் ஒரு கால் சற்று வளைந்த நிலையில் அமைந்திருப்பதனால் இதற்கு 'ஸ்தித குஞ்சிதம்' என்ற மற்றொருபெயரும் உண்டு.

**3. ஸ்வஸ்திகாசனம் :**

முற்கூறிய ஸ்வஸ்திகாசனம் அமர்ந்த நிலையில் உள்ளது. ஆனால் இது நின்ற நிலையில் ஒரு காலைப்பதிய ஊன்றியும் ஒரு காலைக் குறுக்கே வளைத்து விரல்களை மட்டும் ஊன்றியும் நிற்கும் நிலையில் உள்ளது. எனவே இதுவும் 'ஸ்வஸ்திகாசனம்' எனப்பட்டது.

**4. ஆலீடாசனம் :**

நின்ற கோலத்தில் இடக்காலை முன்னே சிறிதுமடக்கி எட்டி வைத்து வலக்காலைப் பின்னோக்கி வைத்து நிற்கும் நிலைக்கு 'ஆலீடாசனம்' என்று பெயர்.

இது வில்லை வளைத்து அம்பு தொடுத்து எய்யும் பாங்கில் அமைந்து விளங்குவதாகும்.

**5. பிரத்யா வீடாசனம் :**

இது வில்லிலிருந்து அம்பை எய்தபின் உடலின் முறுக்கிய விசை குறைந்து சமநிலையில் அமைந்த வீரனின் நிலையை விளக்குவதாகும். இதற்குப் 'பிரத்தியா வீடாசனம்' என்று பெயர்.

**6. ஊர்த்துவ ஜானு :**

ஒரு காலைப்பதிய ஊன்றி, மற்றொருகாலை முழங்கால் மடியுமாறு வளைத்துப் பீடத்தின் மீது தூக்கிவைத்து ஊன்றி நிற்கும் கோலம் 'ஊர்த்துவஜானு' எனப்படும்.

**7. ஏகபாதஸ்தானகம் :**

நின்றநிலையில்ஒரு காலை ஊன்றி மற்றொரு காலைமடக்கி ஊன்றி நிற்கும் காலின் முழங்காலின் மீது மடக்கிய காலின் பாதம் படியுமாறு வைத்து நிற்கும் நிலைக்கு 'ஏகபாதஸ்தானகம்' என்று பெயர்.

இது தவக்கோலத்திற்கு உரியது.

ஏகபாத ஸ்தானகம் போலவே ஒரு காலைப் பதிய ஊன்றிநின்று, மற்றொருகாலை உள்ளங்கால் வானோக்கிய தாக அமைத்துக் குய்யத்தைப்

பொருந்துமாறு வைத்து நிற்கும் கோலம் ஏகபாதஸ்தானகத்தின் மற்றொரு வகையாகும்.

இது தவநிலைக்கு உரியதாகும்.

## 5. சயனாசனம் :

ஆசனத்தின் மீது தலையையும் கைகால்களையும் நீட்டியமைத்து மல்லாந்து படுத்த நிலைக்குச் 'சயனாசனம்' என்று பெயர்.

இதே நிலையில் ஒருக்கணித்துப் படுத்து வலக்கை தலையைத் தொட்டுக் கொண்டிருக்கவும், இடக்கை இடத்தொடையின் மீது நீட்டி அமைத்துக் கிடக்கும் நிலைக்கு அர்த்த சயனம் என்று பெயர்.

இவை இரண்டும் விஷ்ணுமூர்த்தத்திற்கு உரியவையாகும்.

# குரு

குரு என்னும் வடசொல் பெரிது எனவும் பிதா எனவும் அரசன் எனவும் பொருள்படும். ஆகவே எல்லாவற்றிலும் பெரிய பொருளாகவும், மேலான தந்தையாகவும், சிறந்த அரசனாகவும் உள்ளவன் குரு எனப்படுவான். "கு" என்றால் இருள். அந்தகாரம், அறியாமை என்று பொருள் "ரு" என்றால் போக்குகின்றவன். நிரோதித்து அருள் செய்கிறவன் என்று பொருள். எனவே உயிர்களிடத்திலுள்ள அஞ்ஞானம் என்னும் அறியாமையாகிய இருளைப் போக்குகின்றவன் குரு எனவும் குரவன் எனவும் உபாத்தியாயன் எனவும் கூறப்படுவான். குருவானவன் அறியாமையைப் போக்கி அறிவுகொடுப்பவன் என்றும், மன இருளைப் போக்கி ஒளியைத் தருகின்றவன் என்றும் பொருள் கொள்ளல் வேண்டும்.

ஆசிரியன் என்ற தமிழ்ச்சொல் அறியாமையாகிய குற்றத்தைப் போக்குகின்றவன் என்று பொருள்படும். ஆசான் என்ற சொல்லும் இதே பொருளைத் தருவதாகும்.

ஏதும் தெரியாத ஒருவனுக்கு எல்லாம் தெரிந்த ஒருவன் நன்றாகத் தெரியும்படி கூறி விளங்க வைப்பது என்பதுதான் இச்சொற்களுக்கு உரிய பொருள் என்று கூறலாம்.

எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், அந்தத் தொழிலை நன்றாக அறிந்தவன் அறிய விரும்புவோனுக்கு. அவன் விளங்கிக் கொள்ளும் வண்ணம் கற்றுக்கொடுப்பவனைக் குருவெனக் கொள்ளல் வேண்டும்.

சமுதாயத் தொழில்களாகிய மண்டாண்டம் செய்தல், மரவேலை செய்தல், நெசவுவேலை, இரும்பு பொன் வேலைகளைச் செய்தல் போன்ற தொழில்களையும், போர்த் தொழிலுக்குரியவைகளாகிய வில், வேல், வாள் பயிற்சிகள், சிலம்பம், குத்துச்சண்டை, இக்காலத்தே கராத்தே போன்ற பயிற்சிகள், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் போன்ற பயிற்சிகள் ஆகிய வற்றையும், கலைத்தொழில்களாகிய மருத்துவம், சோதிடம், ஓவியம், இயல், இசை, நாடகம், நாட்டியம் ஆகியவற்றையும் கற்றுக் கொடுப்பவன் குருவெனப்படுவான்.

மாதா பிதா, குரு, தெய்வம், என்ற இந்நான்கும் நாம் அறிந்ததே யாகும். தாயானவள் தந்தையைக் காட்ட தந்தையானவன் குருவைக் காட்ட, குருவானவன் இறைவனைக் காட்டுகிறான் என்பதே இந்நான்கின் கருத்தாகும். எனவே குருவின் அருள் உபதேசங் கொண்டு இறைவனை அறிந்து இன்புறுவது ஆறறிவு படைத்த ஒவ்வொருவரின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

குரு என்பவர் வித்யர்குரு, தீட்சாகுரு, ஞானகுரு, லோககுரு எனப் பலவகைப்படுவர். வித்யாகுரு பலவகை வித்தைகளைச் சீடனுக்குக் கற்பிப்பார். தீட்சாகுரு பஞ்சாட்சரம், ஷடாட்சரம், அஷ்டாட்சரம் போன்றவற்றைச் சீடனின் பரிபக்குவம் அறிந்து விதிப்படி போதிப்பார். ஞான குரு தெளிவான உயர்ந்த ஞானம் எது என்பதை விளங்கக் கற்பிப்பார். லோககுரு அனைத்துக் குருக்களின் மேலானவராதலால் தெளிந்த ஞானத்தைப் போதித்து உயிர்களின் மல இருளைப் போக்கி ஞான ஒளி விளக்கேற்றி என்றும் அழியாத பேரின்ப வாழ்வளிப்பார். லோககுரு ஸ்ரீ கண்ட பரமேசுரனுவார்.

**தீட்சை :**

தீட்சை என்பது வடமொழியில் "தீக்ஷா" எனவும், தமிழில் "தீக்கை" எனவும் கூறப்பெறும். வடமொழி "தீக்ஷா" என்ற சொல்லிலுள்ள 'தீ' என்பது தானம் என்று பொருள்படும். "க்ஷா" என்பது போக்கு வது என்று பொருள்படும். தானம் என்பது உயிர்களுக்கு முத்தி முதலிய வற்றைத் தருவதாகும். 'க்ஷா' ஆவது உயிர்களைத் தொடக்கமில் காலம் தொட்டுப் பொருந்தி நின்ற பாசங்களைப் போக்கு வதாகும். எனவே தீக்ஷை என்பது உயிர்களுக்கு, இம்மைக்கு வேண்டுவனவாகிய போக நுகர்ச்சிகளை அருளி, மறுமையில் நீங்கரிய பாசத் தொடர்களை அறுத்துப் பேரானந்த வாழ்வைத் தருவதாகும்.

தீட்சை பௌதிகி எனவும் நைஷ்டிகம் எனவும் இருவகைப்படும். பௌதிகி என்பது பூத சம்பந்தம் உடையது. உயிர்கள் விரும்பிய இன்பப் பேறுகளை அளித்து, முடிவில் வீடு பேற்றைக் கொடுப்பது. நைஷ்டிகி என்பது நிஷ்டை சம்பந்தம் உடையது. அதாவது அணிமாதி சித்திகளைக் கொடுத்துப் பின்னர் பேரானந்தத்தை அளிப்பது.

இனி தீட்சை சபீஜை, நிரபீஜை என இருவகைப்படும். சபீக்ஷயாவது சமயம், ஆசாரம், அநுட்டானம் முதலியவற்றை விரும்பு கின்றவர்களுக்குச் செய்யப் பெறுவது. நிரபீஜையாவது, சமயம் ஆசாரம் அநுட்டானம் முதலியவற்றைச் செய்ய இயலாத குழந் தைகள் முதியவர்கள், அறிவில்லாதவர், நோயாளர் முதலியோர்க் குச் செய்யப்பெறுவது. முற்கூறிய பௌதிகியானது லௌகிகி, அலௌகிகி என இருவகைப்படும். லௌகிகி என்பது உலகியலறத்தோடு சிவதருமம் உடையது. இதனை அனுசரிக்க வேண்டியவர்கள் இல்லறத்தவர்கள் ஆவர். அலௌகிகி என்பது சிவதர்மிணி என்ற பெயருடையது. இத்தீக்கை பெற்றவர் இலௌகிகம் வைதிகம் ஆகிய இரண்டும் நீங்கப்பெற்று சிவபரம் பொருளை எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்.

அன்றியும் தீட்சையானது சபீஜை, நிர்பீஜை என இருவகைப்படும். சபீஜை என்பது பீஜாட்சரங்களுடன் கூடியது. நிர்பீஜை என்பது பீஜாட் சரங்கள் இல்லாதது. சபீஜை — இத்தீட்சை பெற்றோர் மற்றவர்களுக்கு தீட்சை முதலியன செய்து வைப்பதற்கு உரிபவராவர். நிர்பீஜைக்கு உரியவர் விசேடதீட்சை பெற்றவர்.

அன்றியும் தீட்சையாவது மேலும் இருவகைப்படும். அவை சத்தியோ நிர்வாணம், அசத்தியோ நிர்வாணம் என்பனவாம். சத்தியோ நிர்வாணம் என்பது தீட்சை பெற்றவுடன் முத்தி பெறுவது. பெற்ருன் சாம்பான் பெற்ற முத்தி இந்த இயல்புடையதாகும். அசத்தியோ நிர்வாணம் என்பது பிராப்தம் முதலியவை நீங்கப் பெற்ற பின்னர் முத்தி பெறுவ தாகும்.

மேலும் தீட்சையானது சாதாரம், நிராதரம் என இருவகைப்படும். சாதாரம் என்பது சிவபரம் பொருள் குருவை அதிட்டித்து நின்று அக்குரு வின் மூலமாக உயிர்களுக்குச் செய்யும் தீட்சையாகும். நிராதரம் என்பது விஞ்ஞானகலர், பிரளயாகலர் ஆகியோருக்குச் சிவபெருமான் ஆசிரியஞய் திருமேனி தாங்கிச் செய்யும் தீட்சையாகும்.

மேலும் தீட்சையானது திருநோக்கம், ஸ்பரிசம், வாக்கு, மானம், நூல் உபதேசம், யோகம், ஔத்திரி எனப் பலவகைப்படும்.

நயன தீட்சை என்னும் திருநோக்கம் என்பது மீன்தனது முட்டையைக் கண்ணுலே நோக்கி நின்று குஞ்சாக்குவது போல, ஆசாரியன் திருவருள் நோக்கத்தால் மாணுக்கனைத் தன்னைப்போல் சிவம் ஆம்தன்மை உடையவனுக ஆக்குதலாம்.

*" கண்ணுல் நோக்கி கண்ணப்பர் பணியும்*
*கொள் காபாலி "*

— *திருநாவுக்கரசர்.*

ஸ்பரிச தீட்சை என்பது கோழியானது முட்டையின் மேல் அடைகிடந்து தொட்டுக் குஞ்சைவெளிப் படுத்துதல் போல, ஆசான் மாணுக்கனைத் தொட்டுச் சிவம் ஆம் தன்மை உடையவனுக ஆக்குதலாம்.

வாக்கு தீட்சை என்பது மாணுக்கனுடைய தகுதிக்கு ஏற்பத் திருவைந்தெழுத்தை உபதேசித்தலாகும்.

மானத தீட்சை என்பது ஆமை தன் முட்டையைத் தான் நினைத்துக் குஞ்சாக்குவது போல, ஆசான் தன்மாணவனுக்குச் சிவஞானம் உண்டாக வேண்டும் என்று சிந்திப்பதாகும். இது பாவனை எனவும் படும்.

சாத்திர தீட்சை என்னும் நூலுபதேசம் பதி, பசு, பாச உண்மை களையும் அவற்றின் இலக்கணங்களையும், பசுவானது பாசத்தை விட்டு நீங்கிப்பதியை அடையும் முறைமையையும் நூல்களின் வழியாக ஆசாரியன் போதிப்பதாகும்.

யோக தீட்சையாவது நிராதார சிவயோகத்தை அப்பியாசம் பண்ணும்படி ஆசான் உபதேசித்தலாகும்.

ஔத்திரி தீட்சையாவது ஓமத்தோடு செய்வதாகும். ஔத்திரி தீட்சை தொகையால் ஒன்றாகவும் கிரியாவதி, ஞானவதி என வகையால் இரண்டாகவும் பேசப்பெறும். இவ்விரண்டும் சமயம் விசேடம் நிர்வாணம் எனத்தனித்தனி மூன்று வகைப்படும். விரிப்பின் பெருகும்.

இவ்வாறு பலவகைப்பட்ட தீட்சை முறைகளைச் சைவமடாலயங்கள் சீடர்களுக்கு உபதேசித்தருளிய காரணத்தால் சைவம் தழைத்தது. திருவாவடுதுறை ஆதீனம் போன்ற சைவமடங்கள் தமிழகத்தில் பல உள. அவைகளும் பக்குவ ஆன்மாக்களுக்குப் பஞ்சாட்சரத்தை உபதேசித்தன. திருமடங்களுக்குச் சீடர்களின் தொகை பெருகியது. திருமடங்களின் முனிபுங்கவர்களாகிய தவஞான சீலர்கள் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருளுபதேசம் வழங்கி யருளியதோடன்றித் தமிழ் நூல்கள் செய்து தமிழ்த்தொண்டும் செய்தருளினார்கள். அத்துடன் தமிழ்வல்ல கவிஞர்களையும் வித்துவான்களையும் ஆதரித்தார்கள். இசை வல்ல சான்றோர்களுக்கும் ஆதரவு தந்தார்கள்; நாடகமும் நாட்டியமும் வல்ல அறிஞர்களுக்கும் நல்லாதரவு தந்தார்கள், வடமொழி வாணர் களையும் வளர்த்து வந்தார்கள்,

ஆகவே தமிழகத்தில் சைவமும் தமிழும் சிறந்தோங்கித் திகழ்ந்தன. அதனால் சமுதாயப்பணியும் சமயப்பணியும் செய்து வரும் மடாலயங் களுக்கு மன்னர்களின் பேராதரவும் இருந்தன. பொதுமக்களின் ஆதரவும் இருந்தது. இன்றும் அப்பணிகள் தொடர்ந்து வளர்ந்து வருவதனால் அறிஞர்கள் பலர் மடாலயங்களைச் சார்ந்து மன அமைதிபெற்று இன்புறுகின்றார்கள்.

ஐம்முகச் சிவனார் ஆன்மகோடிகள் உய்ய அருளுபதேசம் செய்தது போலவே, ஆறுமுகச் சிவனாரும் செந்தமிழ் முனிவராகிய அகத்தியருக்கும் அருணகிரி நாதருக்கும் பிற அருளாளர்களுக்கும் அருளுபதேசமாகச் சடாக்கரத்தை உபதேசித்தருளினார்.

ஐம்முகச் சிவனாரின் மூத்த பிள்ளையாகிய விநாயகப் பெருமானும் நம்பியாண்டார் நம்பிக்கு உபதேசம் செய்தருளினார்கள் என்பது இங்கு சிந்திப்பதற்கு உரியவையாகும்.

ஆலமுண்ட ஸ்ரீ கண்ட பரமேசுரன் தட்சிணாமூர்த்தி வடிவம் தாங்கி ஆலமர நிழலிலே அமர்ந்து சனகாதி முனிவர் நால்வருக்கும் மலத்தைக் கெடுத்து மாணடி சேரும் மார்க்கத்தைச் சின்முத்திரையாலே காட்டி யருளினார்கள். எவ்வகையில் காட்டியாட்கொண்டார் என்பதை இனிக் காண்போம்.

# காமிகாகமம்

[ பிரதிஷ்டா தந்திரம் — கிரியா பாதம் — 18-ஆம் படலத்தின்படி எண் வகைத் தட்சிணாமூர்த்தித் திருவுருவங்கள் ]

## 1, யோகதட்சிணாமூர்த்தி

| | |
|---|---|
| கைலாசாதிரி ஸமாபஞ்ச | சசாங்க தவளம் ப்ரபம் |
| ஸ்பூர்ஜர்ஜடா மண்டிதஞ்ச | நாசாலோகந தத்பரம் |
| வீராஸநேஸ்திதம் சைவ | த்ரிணேத்ரஞ்சைக வக்தரகம் |
| ஜாநூச விலஸத்பாணிம் | பிரஸன்ன வதனான்விதம் |
| கட்யாம் புஜங்கபத்தஞ்ச | முனிபிச்ச ஸமாவ்ருதம் |
| * யோககுரு ஸ்வரூபஞ்ச | பாவயேச்ச விசேஷத:1 |

கைலாய மலையைப் போன்ற சந்திரனுடைய வெண்மையானவர்ணம் நிமிர்த்து கட்டியஜடை, மூக்கின் நுனியில் பார்வையுடன் வீராசனத்தில் அமர்ந்து முக்கண், முழந்தாளில் வைத்திருக்கும் கை, பிரசன்னமுகம், பாம்பணிந்த இடையுடன் முனிகளால் சூழப்பட்டவராய் யோக தக்ஷிணாமூர்த்தியைச் சிறப்பாக பாவிக்க.

## ஆசாரிய லக்ஷணபடலம் - காமிகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | சர்வசாதகாச் சாரியார் | — | யாகசாலை முழுப்பொறுப்பு உள்ளவர் |
| 2. | ஆசாரியார் | — | ஹோமம் செய்பவர் |
| 3. | சாதகாச்சாரியார் | — | மந்திரங்களைச் சொல்பவர் |
| 4. | போதகாச்சாரியார் | — | ஆசாரியருக்கு சாதகர் சொல்லும் மந்திரங்களை கிரிசை பாவனை முத்திரைகளுடன் உதவுபவர். |
| 5. | பாசகாச்சாரியார் | — | மந்திரபூர்வமாக நைவேத்தியம் தயாரித்துக் கொடுப்பவர். |

மேற்சொன்ன ஐவரும் ஆதிசைவராக தீட்சை பெற்று இருக்க வேண்டும் என்பது நியதி,

---

* தட்சிணாமூர்த்தியை பஞ்சாவரண பூஜையில் இரண்டாவது ஆவரணத்தில் தெற்குமுதல் அக்கினி திக்குவரை எட்டு மூர்த்திகளைப் பூசிக்க என்று காமிகாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

## 2. வீணதரதட்சிணமூர்த்தி

தவளாபஞ்ச ருசிரம் ஸர்ப்ப யக்ஞோப வீதகம்
அநலம் ஸாக்ஷமாலாஞ்ச ஸ்புரத்கநக வீணகம்
பாலநேத்ரம் கிரேர்ரூர்த்வம் தக்ஷிணமூர்த்தி மீடே !

வெண்மையான நிறம், மநோக்ஞமான பாம்புபூணூல் அக்னி அக்ஷமாலை, சுவர்ணவீணை, நெற்றிக்கண்ணுடையவராய், (கைலாய) மலையின் மேல் விளங்கும் வீணதட்சிணமூர்த்தியை வணங்குக.

## 3. மேதா தட்சிணமூர்த்தி

மேதா ஸ்படிக வர்ணாபம் முத்ரா புஸ்தக வஹ்னிகம்
நாகைச்ச விலஸத் ப்ராணிம் பிரசன்ன வதனான்விதம்
முக்தாஹார ஸமாயுக்தம் கிரீட மகுடான் விதம்
அக்ஞான மோசனார்த்தஞ்ச ப்யாகமார்த்தம் பிரகாசகம்
வடமூலே ஸமாஸீநம் த்யாயேத் மேதாஸ்வருபகம்.

ஸ்படிகவர்ணம், ஞானமுத்திரை, புத்தகம், அக்னி, நாகம் இவற்றால் கூடிய கைகளும், பிரசன்னமுகம், முத்துமாலை, கிரீடத்துடன் விளங்கி, அக்ஞானத்தை போக்க, சிவாகமப்பொருளை விளக்கும் பொருட்டு ஆலமரத்தின் அடியில் அமர்ந்துள்ளவராய் மேதா தட்சிணமூர்த்தியைத் தியானிக்க.

## 4. ஆஸீந தட்சிணமூர்த்தி

சுக்லவர்ணம் திரிணேத்ரஞ்ச டங்கம் பாணஞ்ச தக்ஷிணே
வாமே கிருஷ்ண மிருகம்சைவ தனுஹீம்ச லஸத்கரை:
வ்யாக்யாபீடே ஸமாஸீநம் வியாக்ராஜி நாப்யலங்க்ருதம்
ஜடாமகுட சோபாட்யம் நாக யக்ஞோப வீதிநம்.

வெண்மைநிறம், முக்கண், வலதுகைகளில்(உளி) டங்கமும் பாணமும் கொண்டு இடக்கைகளில் மான், வில்லுடன்கூடி வியாக்யர பீடத்தில் அமர்ந்து, புலித்தோலாடையால் அலங்கரித்து, ஜடாமகுடம், பாம்புப் பூணூலணிந்துள்ளவராய் ஆஸீன தக்ஷிணமூர்த்தியைத் தியானிக்க,

## 5. வரதட்சிணாமூர்த்தி

ஜான்வக்ரைகோர்த்வ பாதஞ்ச ப்யபஸ்மாரோ ர்த்வகேததா
இதரஞ்ச நிதாயாத ந்யக்ரோத மூலகேபிச ।
முனினாம் வேத வேதாந்தம் வ்யாக்யாதத்வாஸ ஸம்யுதம்
ஞான முத்ராக்ஷ மாலாஞ்ச வஹ்நனிம் ஸ்வேதம் திரிநேத்ரம்
ஜடாகூட வரம்சைவ தக்ஷிணாமூர்த்தி ரூபகம்.

முழந்தாளின்மேல் போட்டிருக்கும் பாதமுடையவராயும், அபஸ்மாரனை மிதித்துள்ள மற்றொருபாத முடையவராயும், ஆலமரத்தின் கீழ் முனிகளுக்கு வேத, வேத முடிவுத் தத்துவங்களை உணர்த்தியும், ஞான முத்ரை, அக்ஷமாலை, அக்னி, வேதம் கைகளில் தாங்கி முக்கண்ணராய், ஜடையுடன் கூடியவராய் உள்ள வர தக்ஷிணாமூர்த்தியைத் தியானிக்க.

## 6. யோகபட்டாபிராம தட்சிணாமூர்த்தி

ஏகவக்திரம் த்ரிநேத்ரஞ்ச ஜடாகூட ஸமன்விதம்
வீணா வர்த்ய ஸமாயுக்தம் வ்யாக்யாபீடேச ஸம்ஸ்திதம்
முனிபிஸ்ஸேவிதம் சைவ பிரஸன்ன வதனான்விதம்
வியாள யக்ஞோபவீதஞ்ச யோக பட்டாபிராமகம்

ஒருமுகம், முன்றுகண், ஜடையுடன் கூடியவராயும், வீணா வாத்யத்துடன் வியாக்யா பீடத்தில் அமர்ந்து, முனிவர்களால் சேவிக்க பிரசன்ன முகத்துடனும், பாம்பினையே பூணூலாக அணிந்து யோக பட்டாபிராமராகிய விளங்கும் குருவைத் தியானிக்க.

## 7. ஞானதட்சிணாமூர்த்தி

ஏகவக்திரம் திரிநேத்ரஞ்ச ஸ்படிகாபம் சதுர்புஜம்
சூலம் கபாலகம் சைவ நாகம் வீணா ஸமாயுதம்
ஸநகாதிமுனி ப்ருந்த ஞானம் சாபி ப்ரபோதகம்
ஞானதக்ஷிணாமூர்த்திச்ச பாவயேச்ச விசேஷத :

ஒருமுகம், மூன்றுகண், ஸ்படிகம்போன்ற காந்தியுடன் நான்கு கைகளில், சூலம், கபாலம், வீணையுடன். கொண்டு, சனகாதி முனிர்களுக்கு ஞானத்தை உணரபோதிக்கும். ஞானதக்ஷிணாமூர்த்தியைச் சிறப்பாக பாவிக்க.

## 8. சக்தி தட்சிணாமூர்த்தி

ஸ்படிகம் ரஜதவர்ணம் மௌக்திகை ரக்ஷமாலிகம்
அமிருத கலச பூர்ணம் ஞான முத்ராம் கராக்ரை :
ஸர்ப்ப ஹஸ்தம் சந்திரசூடம் யக்ஞசூத்ர விராஜிதம்
சக்திபிர் தக்ஷிணாமூர்த்தே தியாயேத் தேவ விசேஷத :

ஸ்படிகம்போலும் வெள்ளி நிறமுடையவராய், முத்துக்களால் ஆகிய அக்ஷமாலே, நிறைவுடன் ஆகிய அமிர்தகலசம், ஞானமுத்ரை பாம்புடன் கூடிய கைகளைக் கொண்டு சந்திரனை சூடி, பூணூலுடன் விளங்கும், சக்தி தக்ஷிணாமூர்த்தியை தெய்வத்தன்மைபெறச் சிறப்புடன் தியானிக்க,





தட்சிணாமூர்த்தி

# தட்சிணாமூர்த்தி

**திருக்கயிலையில் :**

திருக்கயிலாயமலையில் பொன்னும் மணியும் இழைத்துக் கட்டப் பெற்ற அழகிய மண்டபத்தின் நடுவில் சிங்கம் சுமந்த ஆசனத்தில் பார்வதியும் பரமசிவனும் எழுந்தருளி இருந்தனர். அப்போது முனிவர்கள் எல்லோரும் தாம் தாம் விரும்பிய வரங்களைப் பெறும் பொருட்டுச் சிவபிரானைப் பலவாறு போற்றித் துதித்துக் கூடியிருந்தனர். அத்தருணம் பார்வதி தேவி எழுந்து நின்று பெருமானை வணங்கி அருட்கடலாக விளங்கும் அண்ணலே! சிவத்துரோகியாகிய தக்கனிடம் அடியேன் வளர்ந்த காரணத்தால் தாட்சாயணி என்ற பெயர் பெற்றுள்ளேன். அதனை மாற்றி அருள் புரிய வேண்டும்! என்று பிரார்த்தித்தாள். ஒண்ணுதற்கடவுள் உவப்பெய்தி உமையே! இமய பர்வதராசன் நின்னைப் புதல்வியாக அடைய வேண்டும் என்று நம்மை நோக்கித் தவம் புரிகின்றான். நீ அவன் பாற்சென்று வளர்வாயாக, யாம் அங்குவந்து நினக்கு மணமாலை சூட்டுவோம்! என்றருளிச் செய்தார்.

அன்னையும் அண்ணலின் அடிகளை வணங்கிச் சென்று தவம்புரியும் மலையரசனை அடைந்து குழவி வடிவாய் அமர்ந்து அவனாலும் அவன் மனைவி மேனையாலும் வளர்க்கப்பெற்று ஐந்து வயது முதலே தவச்சாலையில் இருந்து தவஞ்செய்து, சிவபிரானை மணஞ்செய்து கொண்டு இன்புற்று இருந்தாள்.

**பெருமானைக்காணுதல் :**

அங்கே அன்னையானவள் தவத்திலிருக்கும்போது பிரமதேவனின் புதல்வர்களாகிய சனகன், சனந்தனன், சனாதனன், சனற்குமாரன் ஆகிய நான்கு முனிவர்களும் அவ்வன்னையை வணங்கி விட்டுக் கயிலாயத்திற்குச் சென்று திருநந்திதேவர் அனுமதியைப் பெற்றுச் சிவபெருமான் திருமுன்பு சென்று, அவனடி விழுந்து வணங்கி எழுந்து நின்று 'பரம்பொருளே! யாங்கள் வேதங்கள், ஆகமங்கள் யாவும் கற்றும் மனம் தெளிவடையாமலும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மல இருள் நீங்கப்பெறாமலும் வருந்துகின்றோம். ஆதலினால் தேவரீர் எங்களுக்கு வேதத்தின் உண்மைப் பொருளை யாங்கள் கடைத்தேறும் வண்ணம் உபதேசித்தருள வேண்டும்!' என்று வேண்டிக் கொண்டனர். சிவபிரான் அம்முனிவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கி அவர்களைக் கையமர்த்தி அமரச்செய்து அவர்களுக்கு உபதேசிக்கும் குரு பீடமாகிய தட்சிணாமூர்த்தி வடிவம் தாங்கியருளினார். அவ்வடிவத்தைப் பற்றிய திருவிளையாடற்புராணச் செய்யுள்,

"மானமுனி வோரதிசயிப்பவட நீழல்
மோனவடி வாகய முதற்குரவன் எண்ணுன்கு
ஊனமில் இலக்கண உறுப்புஅகவை நானுன்கு
ஆனஒரு காளைமறை யோன்வடிவ மாகி"

என்று கூறுகிறது.

முனிவர்கள் ஆச்சரியப்படும்படி வடஆலின் நிகழற்கண் மோன வடிவமாகிய முதற் குருநாதன், முப்பத்திரண்டு சாமுத்திரிகா லட்சணங்களும் பொருந்திய, பதினுறு வயது நிரம்பிய காளை போன்ற அந்தணன் வடிவமாகிக் காட்சி தந்தான் என்பது இதன் பொருள்.

திரிபுண்டரமாக இடப்பட்ட திருநீறு நெற்றிக் கண்ணை மறைக்கவும், அழகிய மார்பில் கண்டிகை அணிசெய்யவும், காதில் அணிந்த குண்டலத்தில் பதித்த மணியானது சூரியனைப்போல ஒளிவீசவும் வெள்ளிய உத்தரீயம் வலப்பக்கம் ஒதுங்கவும், வெண்மையான உபவீதமும் இடைஇடையே முத்துக்கள் கோத்த உருத்திரர்க்க மணிமாலை ஒளிபரப்பவும், இடையில் வெண்பட்டாடை விளங்கவும், பாதத்தில் அணிந்துள்ள சிலம்பு வண்டின் இசைபோல ஒலிக்கவும், வலப்பாதத்தில் வீரகண்டை முழங்கவும் தென் முகக் கடவுள் வீராசனத்தில் வீற்றிருந்தார். இவ்வாறு வீற்றிருந்த பெருமானை முனிபுங்கவர்கள் கண்டு போற்றினுர்கள். இந்நிகழ்ச்சியினைப் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆ
நங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்"

பரஞ்சோதிமுனிவர் அருளிய திருவிளையாடற்புராணம்

**பாடலில் விளக்கம் :**

சிவபெருமான் கல்லால மரநிழலின்கண் தென்முகமாக எழுந்தருளி இருந்து, நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும். வேதாந்தங்களையும் நன்ருக அறிந்த, வல்லவர்களாகிய சனகாதியர் நால்வருக்கும் வேதவேதாந்தங்களினுல் தம்மையும் தம் தலைவனையும் சந்தேக விபரீதமற உணர மாட்டாமல் மயங்கின மயக்கம் நீங்குவதற் பொருட்டு, வாக்கினுலே இத் தன்மையை உடையது என்று சொல்ல முடியாத நிலையில் நிறைவாயும், வேதங்களினுல் அறுதியிட்டுக் கூறமுடியாததாயும், உயிருள்ள பொருள் உயிரில்லாத பொருள் ஆகிய எல்லாம் தன்னையின்றித் தனித்து நில்லாமை யால் அவையாவும் தானுகியும், ஆயினும் அவற்றுள்உயிர் போலப்பிறந்து

இறந்துஉழலுதலும், உயிரில் பொருள் போலத் தோன்றி நின்று அழிதலும் இல்லாமையால், அப்பொருளுக்கு வேறுயும் இருந்த தனது சொரூபத்தை இருந்தவாறே திருமேனி கொண்டருளிய முறைமையில் வைத்துக் காட்டி, அவ்வுண்மையை வாக்கினாலே சொல்லாமல் அறிவுக்கு அறிவாய் நின்று அருளால் அறுவித்தனர். இப்பேரருள் புரிந்த தட்சிணாமூர்த்தியை, நாம் ஆராய்ச்சி அறிவாகிய மனத்தால் நினையாமல் அநுபவ அறிவால் அறிந்து பிறந்து இறந்து உழலும் துன்பத்தை வெல்லுவோமாக" என்பது இப்பாடலின் பொருளாகும்.

"இருந்து காட்டி" என்று இப்பாடலில் பொதுவாகக் கூறிய பரஞ்சோதி முனிவர் எவ்வாறு இருந்து காட்டினார் என்பதை வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த படலத்தில் விளக்கியுள்ளார். அந்தத் திருவிளையாடற் புராணச் செய்யுள்.

> "சீதளப்பளிக்கு மேனியும் பளிக்குச்
>     செழுமலை பதித்த துப்பன்ன
> பாதமும் செவ்வாய் மலரும் முக்கண்ணும்
>     பங்கயச் செங்கரம் நான்கும்
> வேதபுத் தகமும் அமுதகும்பமும் தன்
>     விழி மணி வடமுமெய்ஞ் ஞான
> போத முத்திரையும் தரித்ததோர் தனிமைப்
>     போதன்முன் தாழ்ந்தெழுந் தேத்தா"

என்பதாகும்.

இதனால் முயலகனை மிதித்த திருவடி ஒன்றும், வீராசனமான மற்றொரு திருவடியும் வலப்பக்கத்தில் உள்ள ஒரு திருக்கரத்தில் சின்முத்திரையும் மற்றொரு திருக்கரத்தில் உருத்திராக்க மணிவடமும், இடப்பக்கத்திலுள்ள ஒரு திருக்கரத்தில் அமுதகும்பமும், மற்றொரு திருக்கரத்தில் சிவஞான போத புத்தகமும் விளங்கும்படி எழுந்தருளிஇருந்தார் என்பது புலனாகிறது.

**தத்துவம் :**

*சின்முத்திரை என்பது கையிலுள்ள ஐந்து விரல்களுள் நடுவிரல் முதலாகப் பின் மூன்று விரல்களை வேறு பிரித்து சுட்டு விரலைப் பெருவிரல் அடிப்பாகத்தில் அடங்கும்படி மடக்கி வைத்தலாகும். பெருவிரல் ஏனைய நான்கு விரல்களோடும். கூடித் தனித்தனி ஒவ்வொரு விரலையும் பொருந்துவதற்கு உரிமையுடையதாயும் அவற்றின் வேறுமாயும் இருத்தலால் அது எல்லாமாயும் அல்லதுமாயும் நிற்கும் இறைவனைக், குறிக்கும்.

சுட்டுவிரல் பெருவிரலை உள்ளடக்கியும் நடுவிரலுக்கு உள்ளடங்கியும். இருத்தலால் அது ஆணவ மலத்தினுள் அடங்கிப் பதியைக் கீழ்படுத்திப் பசுபோதமாய் நிற்கும் ஆன்மாவைக் குறிக்கும்.

---

* பல்வேறு நிலையில் அமைந்த கரமுத்திரைகளைப் படத்தில் காண்க.

நடுவிரல் பெருவிரலோடு பிரிப்பின்றி நிற்கும் சுட்டுவிரலைத் தன்னுள் அடக்கி நிற்றலால் அது பதியோடு பிரிப்பின்றி நிற்கும் உயிரைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் ஆணவ மலத்தைத் குறிக்கும்.

அணிவிரல் நடுவிரலுக்குட்பட்டு இருத்தலால் அது ஆணவமலச் சேட்டையால் அநாதியே உண்டான விருப்பு வெறுப்பென்னும் மூல கன்மத்தைக் குறிக்கும்.

கடைவிரல் ( சிறுவிரல் ) அணிவிரலுக்கு உட்பட்டும் முற்பட்டும் இருத்தலால் அது விருப்பு வெறுப்புக்கு உட்பட்டும் முற்பட்டும் விளங்கும் மாயா காரியங்களைக் குறிக்கும்.

ஆக ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்க, உயிர் சிவபரம் பொருளின் திருவடிவியாபகத்துள் இரண்டறக் கலத்தலை உணர்த்துவது " சின்முத்திரை " என அறிய வேண்டும்.

**உருத்திராக்கமணிவடம் :**

பாசஞான பசு ஞானங்களினின்றும் நீங்கிச் சிவஞானத்தில் பயிலும் காலத்திலும் பழைய பழக்க வாசனையால் பாசக் கூட்டங்களைப் பற்ற நேரிடும். அவ்வாறு நேரிடும் போது அவற்றில் செல்லாமல் சிவஞானத்தில் நிலைத்திருக்கும் பொருட்டுத் திருவைந்தெழுத்தைக் கணிக்க வேண்டும் என்பதை உணர்த்தும்.

**அமுதகும்பம்**

மலநீக்கமும், திருவடி அடைதலாகிய சிவப்பேறும் என்னும் பயன் இரண்டும் வாய்ப்பதற்குச்சாதனம் சிவஞானம் என்பதை உணர்த்தும்.

**முயலகனை மிதித்ததிருவடி :**

சிவப்பேறு பெற்ற சிவஞானிகள் உடல் உள்ள அளவும் சீவன் முத்தராய் வாழ்வர். அப்படி வாழும் காலத்தில் சமயம் பார்த்து ஆணவ மலம் தலை எடுக்கா வண்ணம் அதனை அமிழ்த்துவதற்குரிய சாதனம் செய்து வரல் வேண்டும் என்பதை உணர்த்தும்.

**வீராசனம் :**

சிவன் முத்தர் மலநீக்கத்திற்கு உரிய சாதனம் செய்து வருதலோடு மலம் நீங்கிய சிவனடியார்களோடு நட்பு கொள்ள வேண்டும் என்பதையும் சிவபக்தர் அல்லாதாரோடு இணங்காமல் வீரமாய் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கும்.

**சிவஞான போதம் :**

பரஞ்சோதி முனிவர் வேதபுத்தகம் என்றார். அவ்வேத புத்தகம் சிவஞான போதமே யாகும். என்னையெனில் சிவஞான போதம் வேதத்தின் சாரம் என்க. சனகாதியரின் ஐயத்தைத் தீர்த்தற்குரிய நூல் வேறு எதுவாகவும் இருக்க இயலாது. நான்கு திருக்கரங்களினாலும் இரண்டு திருவடிகளினாலும் உணர்த்து வதற்குரிய நூலாக அமையும் தகுதியுடையது "சிவஞான போதம்" ஒன்றே யாகும். அது பன்னிரண்டு செய்யுட்களை உடையது. முன் ஆறு செய்யுட்கள் பொது அதிகாரம், பின் ஆறு செய்யுட்கள் சிறப்பு அதிகாரம். இது சாதனம், பயன் என இரண்டு இயல்களை உடையது.

**கல்லால் நிழல் :**

சாதனம் செய்யும் காலத்தும் சிவானுபவம் கைவரப்பெற்று சீவன் முத்தராய்வாழும் காலத்தும் மனத்திற்கும் உடலுக்கும் விருப்பு வெறுப்பு முதலிய வெப்பம் தருகின்ற இராசத தாமத குணங்களைச் சாராது, சாந்தத்தைத்தரும் சத்துவகுணத்தைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்தும்.

**தென்முகம் :**

தென்முகம் அகோரமுகமாகும். அகோரமுகமாவது கோரம் இன்மையைக் குறிக்கும். கல்லாலின் கீழ் அமர்ந்து சனகாதி முனிவர் நால்வருக்கும் அவர்கள் விரும்பிய வண்ணம் சின்முத்திரையால் சொல்லாமல் சொல்லி உணர்த்தி அருளினார். அருளுபதேசம் பெற்ற சனகாதியர் பேரின்பம் பெற்றனர் என்பதைப் பின்வரும் செய்யுளால் அறியலாம்.

"இனையதோர் தன்மைகாட்டி எம்பிரான் உணர்த்தக்கண்டு
சனகனே முதலாவுள்ளோர் தவலரு ஞானபோதம்
பனுவலின் அளவன் றென்னும் பான்மையைத் தெரிந்து முக்கண்
புனிதன தருளால் தத்தம் புந்தியின் ஒடுக்கம் பெற்றார்"

— கந்தபுராணம்.

# ஸ்ரீ தர்ம வியாக்யான மூர்த்தி

"ஆஸனாத சுகாஸினோ பக்திமான் ஸ்வர்ணஸன்னிப :।

தக்ஷிணாமூர்த்தி மீசானம் குர்யாத் வடதோரத :।

லம்பயேத் தக்ஷிணம்பாதம் வாமாங்கரேர் நலகாகிரகம் ।

ஸமமேவம் விதாதவ்யம் வாமபாதந்து சாபயேத் ।

தக்ஷிணே பூர்வஹஸ்தேது ஞானமுத்ராந்து தாரயேத் ।

தக்ஷிணே பரஹஸ்தேது தாரயேதக்ஷமாலிகாம் ।

வரதம் வாமஹஸ்தேது தண்டம் வா பரிகீர்த்திதம் ।

வாமஜாநு பரிஷ்டாத்து தண்டச்சேத் கோர்பரம் நியஸேத் ।

வாமே பரகரே தத்ர வஹ்னிம் வா மிருகமேசவா ।

விகீர்ண மூர்த்தஜம் வாபி ஜடாமண்டல ஸம்யுதம் ।

சுத்தஸ்படிக ஸங்காசம் ............... ।

வாமே துர்தூரபுஷ்பஞ்ச நாகஸ்ச சிரஸிஸ்மிருதம் ।

தக்ஷிணேந்து கலாயுக்தம் ஸர்வாபரண பூஷிதம் ।

ஸித வஸ்த்திரோத்தரீயஞ்ச ஸிதயக்ஞோப வீதினம் ।

வ்யாக்ர சர்மாம்பரோபேதம் த்ரிநேத்ரம் க்லேசவர்ஜிதம் ।

ருத்ராக்ஷம் கண்டமாலாஞ்ச ஹிருன்மாலாஞ்ச விதாபயேத் ।

நாரதோ ஜமதக்னிச்ச வசிஷ்டோ தக்ஷபார்சுவகே ।


பாரத்வாஜச்ச சுநக ஸ்வகத்யோ வாமபார்சுவகே ।

வந்திதை : கின்னராத்யைஸ்து ஸேவிதம்பக்தி ஸம்யுதை :।

அபஸ்மாரோ பரிஷ்டாத்து லம்ப பாத தலம் நியஸேத் ।

தர்மவியாக்யான மூர்த்திஸ்யாத் தேவம் ஸர்வசுபாவஹம் ॥"

(— சில்பரத்தினம்)


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30
31
32
33
34

# பட விளக்கம்

1. கல்லாலமரம்
2. ஜாபந்தம்
3. பத்ரபூரிமம்
4. ஜடாபாரம்
5. பிறைச்சந்திரன்
6. லலாடம்
7. அக்னி
8. காதோலை
9. ஏகருத்ராக்ஷம்
10. கண்டாபரணம்
11. ருத்ராக்ஷமாலை
12. தோள்வளை
13. உதரபந்தம்
14. உரஸ்சூத்திரம்
15. யக்ஞோபவீதம்
16. காப்பு
17. சுவடி
18. சுரோணிப்பட்டை
19. நந்தி
20. வீரகண்டாமணி
21. முயலகன்
22. சிலம்பு
23. தண்டை
24. வியாக்ர சர்மம்
25. உள்ளங்காலில் பத்மரேகை
26. வஸ்திரக்கட்டு
27. பத்மரேகை
28. சின்முத்திரை
29. பாகுமாலை
30. பாதுதாமம்
31. டமருகம்
32. கங்கை
33. மகரகுண்டலம்
34. ஸ்தனசூத்திரம்

சனகாதி முனிவர்கள் (நால்வர்) வீராசனம் (பெருமான் அமர்ந் திருக்கும் அமைப்பு).

**விளக்கம் :**

இப்பெருமானைக் கல்லால மரத்தின் அடியில் அமைத்தல் வேண்டும். இவர் வீற்றிருந்து அருட்காட்சி வழங்குகின்றார். இவரது வலதுகால் தொங்கவிடப்பட்டும் பாதமானது அபஸ்மாரத்தின் மேல் பொருந்துமாறு அமைக்கப்படவேண்டும். இடது கால் மடங்கிக் கிடக்கப்பட வேண்டும். இடது காலின் நலகத்தின் நுனி (வலது முழங்காலிற்சச்) சமமாக அமைக்கப் படவேண்டும். ('நலகம்" என்பது முழங்காலிலிருந்து பாதம் வரையில் கீழ்நோக்கிவரும் நீண்ட எலும்பு. இது கணைக்காலில் முடிவடையும். இந்த எலும்பின் நுனி வலது முழங்காலின் மேல் பொருந்துமாறு ஒன்றன்மேலொன்றாக அமைத்தல் என்பதாகும்) இம்மூர்த்திக்கு நான்கு கரங்கள் அமைக்க வேண்டும். வலது புறம் முன்கையில் ஞான முத்திரையினை அமைக்க வேண்டும். வலது புறத்திலேயே பின் மேல்கையில் அக்ஷமாலையை (ஜபமாலை) அமைத்தல் வேண்டும். இடது புறம் முன்கையில் வரதமுத்திரை அல்லது தண்டத்தை அமைத்தல் வேண்டும். தண்டத்தை அமைப்பதாக இருப்பின் இடது முழங்கால்மேல் இடது முழங்கையை வைக்க வேண்டும். இடது புறம் மேல்கையில் அக்னி (தீச்சுடர்) அல்லது மானை அமைக்க வேண்டும்.

தலையில் உள்ள கேசங்கள் (முடிகள்) நாற்புறமும் சிதறினவாறும் அல்லது ஜடாமண்டலமாகவும் ஜடைகள் கட்டப் பட்டதாகவும் அல்லது மகுடம் உடையவராகவும் அமைக்கலாம். சுத்தமான பளிங்குக்கல் போன்ற நிறம் உடையவராக கருதப்படுவர். ஜடைகளின் இடதுபுறம் ஊமத்த மலரும், பாம்பும் இருக்கும், வலது புறம் பிறைச்சந்திரனையும் எடுப்பாக இருக்கச் செய்யவேண்டும், ஆபரணங்களையும், வெண்மையான ஆடையின் மீது வேஷ்டியையும் அணிவிக்க வேண்டும். அல்லது புலித்தோலை ஆடையாக அணிந்திருக்க வேண்டும். மூன்றுகண்கள் அவரது திருமுகத்தில் திகழவேண்டும். கிலேசங்கள் இல்லாமல் (மனக்கவலைகள் இல்லாமல்) சிறிதும் இல்லாதவராய் முகமானது பிரகாசமும் அமைதியும், சாந்தமுமாய் இருக்கச்செய்தல் வேண்டும். கண்டமாலை (கழுத்தையொட்டி அமைந்தது), ஹ்ருன்மாலை (இதயத்தின் இடம் வரையில் தொங்கும் மாலை) அமைக்க வேண்டும்.

இவருடைய வலதுபுறம் நாரத மகரிஷியும் ஜமதக்நி முனிவரும், வசிஷ்ட முனிவர் பாரத்வாஜநும், சுனகரும்; அகத்திய முனிவரும் இருப்பர். கின்னரர்கள். கிம்புருஷர்கள் முதலிய தேவயோனி விசேஷங்களால் பக்தியுடன் வணங்கி வழிபடப் பெற்றவராயிருப்பர். தொங்க விடப் பட்டிருக்கும் வலது காலின் பாதமானது அபஸ்மாரத்தின் மேல் பொருந்துமாறு அமைக்கப்பட வேண்டும். இவ்வாறாக அமைக்கப்படும் தட்சிணாமூர்த்தியே எல்லோருக்கும் சுபத்தைக் கொடுக்கின்ற "தர்ம வியாக்கியான மூர்த்தி" (தர்மத்தை விரித்துரைக்கும் மூர்த்தி என்பதனால்) எனப்படுவர்.

# யோக தட்சிணாமூர்த்தி

சனகாதி முனிபுங்கவர் நால்வர்க்கும் சிவபிரான் தட்சிணாமூர்த்தமாக எழுந்தருளி மெய்ப்பொருளைச் சொல்லாமல் சொல்லிச் சின்முத்திரையால் விளக்கியருளினார். சிவஞான போதத்தை உணர்ந்த அம்முனிவர்கள் அக் குருநாதரின் திருவருளை எண்ணி இன்புற்றுப் புலனடக்கமும் மன அமைதியும் பெற்றனர். அவர்கள் மேன்மேலும் சிவபோதம் பெறவேண்டு மென்று பெருவிருப்பம் கொண்டு குருநாதரை நோக்கி 'எம் பெருமானே! தேவரீர் எங்கள் ஐயத்தைப் போக்கியருளினீர்கள். மேலும் எங்கள் மனம் ஒரே நிலையில் நிற்பதற்குரிய யோகமார்க்கத்தையும் போதித்தருள வேண்டும்' என்று பணிந்து வேண்டிக் கொண்டனர்.

அதனைக்கேட்ட பரமசிவனார் அவர்களை நோக்கி அன்பான 'பிரமபுத் திரர்களே! ஆன்மாவாகிய அரசன் வாழ்ந்துவரும் தூலசரீரம் ஐம்பூதங்களாலாகிய ஒரு தேராகும். அத்தேர் மனம் என்ற குதிரையால் கட்டப்பட்டிருக்கிறது. அக்குதிரையின் கடிவாளத்தை அறியாமை என்னும் சாரதியிடம் கொடுத்தால் அவன் அந்தத்தேரையும் அதில் அமர்ந்திருக்கும் ஆன்மா என்னும் அரசனையும் ஐம்புலன்களாகிய ஆழ்ந்த குழிகளில் தள்ளித் துன்பமடையச் செய்வான். ஆனால் அறிவு என்னும் நல்ல சாரதியிடம் கொடுத்தால் தேர் இனிமையாகவும் மேடுபள்ளங்களில் துயரப்படாமலும் அமைதியாகச்செல்லும். மன அரசனும் இன்புறுவான். அதுபோல மனத்தைத் தீயவழிகளில் செலுத்தாமல் நல்லவழியில் செலுத்தினால் ஆன்மா பேரின்பப்பெருவாழ்வில் திளைத்து மகிழும். அந்த மனத்தை ஒருநிலைப் படுத்துவதற்கு யோகமார்க்கம் சிறந்ததாகும். அம்மார்க்கத்தால் நம்மை அடைந்து நம்மோடு இரண்டறக்கலந்து என்றும் அழியா இன்பமடையலாம். அந்தயோக நியமங்களை உணர்த்துவோம். கேட்பீராக. உலக விஷயங்களில் ஈடுபடுகிற மனத்தை வலிய இழுத்துத் தனக்கு விருப்பமுடைய ஒருபொருளில் நிலையாக நிறுத்துவது யோகம் எனப்படும். அந்தயோகம் பயிற்சியின் முதிர்ச்சியால் மேன்மை அடையும் அந்தயோகம் எட்டு உறுப்புகளையுடையது. அவை, இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம்.

## 1. இயமம்

ஐம்பொறிகளையும் மனத்தையும் தீயவழியில் செல்ல வொட்டாமல் தடுத்து நல்லவழியில் செலுத்துவது. அது பத்துவகைப்படும். அவை கொல்லாமை, உண்மை, கள்ளாமை, காமம்இன்மை, பொறுமை, உறுதியுடைமை, தயை, நேர்மை, அளவறிந்து உண்ணல், தூய்மை என்பனவாகும்.



யோக தட்சிணமூர்த்தி

# தட்சிணாமூர்த்தி சுலோகம்

குரவே ஸர்வ லோகநாம் பிஷஜே பவரோகிணாம்।
நிதயே ஸர்வ வித்யாநாம் தட்சி ணாமூர்த்தயேநம:॥
அப்ர மேய்த்வயாதீத நிர்மல ஜ்ஞான மூர்த்தயே।
மநோகிராம் விதூராய தட்சிணாமூர்த்தயே நம:॥

## தட்சிணாமூர்த்தி காயத்ரி :

ஓம் தட்சிணாமூர்த்தயே ச வித்மஹே
த்யா நஸ்த்தாய தீமஹி।
தந்நோ தீஸ: ப்ரசோதயாத்॥

## தட்சிணாமூர்த்தி தியான சுலோகம்

"பாதேநாக்ரம்ய பூதம் ததுபரிகுணிதம்
பாதமேகம் நிதாய
வ்யாகுர்வன் ஸர்வசப்தாந் நிஜகடக
மஹீபாகபாஜாம் ம்ருகக்ஷீணாம்
வ்யாளம் வ்யாக்யாந முத்ராம் ஹுதவஹகலிகாம்
புஸ்தகம் சாக்ஷமாலாம்
பிப்ரத் தோர்பிஸ்சதுர்பிஸ் ஸ்புரது
மமபுரோ தட்சிணாமூர்த்திரீச:"

**பொழிப்புரை :**

வலது திருவடியால் முயலகனை மிதித்துக் கொண்டு இடது திருவடியை மடித்து வலது முழங்காலின் மேல் வைத்துக் கொண்டும் தன் திருவடி சமீபம் அமர்ந்திருக்கின்ற ஸனகாதி முனிபுங்கவர்களுக்கு வேதாகமங்களின் கருத்தை விளக்கிக் கொண்டும் நான்கு திருக்கரங்களால் அக்ஷமாலை, ஜ்வலிக்கின்ற அக்னி, சின்முத்திரை புஸ்தகம் முதலியவை களைத் தாங்கிக் கொண்டு மிருக்கிற ஸ்ரீ தட்சிணாமூர்த்திப் பெருமான் எப்போழுதும் என் முன்னிருந்து அருள்வாராக.

**கொல்லாமை :**

உயிர்களை மனம் வாக்கு காயம் என்பனவற்றால் துன்புறுத்தாமல் இருத்தல்.

**உண்மை :**

மனம் வாக்கு காயத்தால் உண்மையாக இருத்தல்.

**கள்ளாமை :**

பிறர் பொருளை மனத்தினாலும் கவர நினையாமல் இருத்தல்.

**காமம் இன்மை :**

காமவிகாரத்தைத் தடுத்து பிரம சரியம் காத்தல்.

**பொறுமை :**

பிறர்தன்னைத் துன்புறுத்தினாலும் அவர்மீது வெகுளாமல் இருத்தல்.

**உறுதியுடைமை :**

தனக்கு எத்தகைய துன்பம் வந்தாலும் வருவதுதெரிந்தாலும் அவற்றால் சிறிதும் அஞ்சாதிருத்தல்.

**தயை :**

எல்லா உயிர்களிடத்திலும் அன்புடன் இருத்தல்.

**நேர்மை :**

எல்லாரிடத்திலும் வஞ்சகமில்லாமல் இருத்தல்.

**அளவறிந்து உண்ணல் :**

தன் உடம்பில் உயிர் நிலைபெறுவதற்கு வேண்டிய உணவை மட்டும் அளவொடு உண்ணுதல்.

**தூய்மை :**

இது உடல் தூய்மை மனத்தூய்மை என இருவகைப்படும். உடலை நீரினால் தூய்மைப்படுத்தலாம். மைத்திரி கருணை முதிதை உபேட்சை என்பனவற்றால் மன அழுக்கைப் போக்கி மனத்தைத் தூய்மைப் படுத்தலாம். மைத்திரியாவது புண்ணியம் செய்பவர்களிடம் நட்பு கொள்ளுவதாகும். கருணையாவது துன்பப்படுகின்றவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவி செய்யவேண்டும் என்கிற இரக்கமாகும். முதிதையாவது இன்பம் அனுபவிக்கின்றவர்களைப் பார்த்தும் கேட்டும் தான் இன்பம் அனுபவிப்பது போல இன்பமாய் இருத்தலாகும். உபேட்சையாவது தீமை செய்கின்றவர்களைப் பார்த்து அவர்களை நல்வழிப்படுத்த முயன்றும் அம் முயற்சி பலிக்காத போது அவர்களை நிந்தனை செய்யாமல் இருப்பதாகும்.

## உ. நியமம்

இயமத்தினால் ஏற்படும் நற்செயல்களைச் செய்து கொண்டு அவற்றிற்குக் கட்டுப்பட்டிருத்தல் நியமம் எனப்படும். அது பத்துவகைப் படும். அவை தவம், மகிழ்ச்சி, ஆஸ்திக்யம், தானம், சிவபூசை, சித்தாந்த சிரவணம், வெட்கம், நற்புத்தி, ஜபம், விரதம் என்பனவாகும்.

**தவம் :**

விரதங்கள் இருந்து விரதகாலத்தில் சிவத்தியானம் செய்து கொண்டிருத்தல்.

**மகிழ்ச்சி :**

'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பது போலக் கிடைத்ததைக் கொண்டு எப்போதும் இன்பமுற்றிருத்தல்.

**ஆஸ்திக்யம் :**

இறைவன் ஒருவன் உளன் என்ற நம்பிக்கையும் வேதாகம புராண இதிகாசங்களில் நம்பிக்கையும் இருத்தல்.

**தானம் :**

வறுமை உடையவர்களுக்குத் தம்மால் இயன்ற பொருளைக் கொடுத்தல்.

**சிவபூசை :**

எல்லாச் செயல்களையும் பயனை எதிர்பாராமல் சிவபிரானுக்கே அர்ப்பணம் செய்துவிடல்.

**சித்தாந்த சிரவணம் :**

குருவினிடமிருந்து சமயம் பற்றிய உண்மைகளைக் கேட்டுச்சிந்திப்பது

**வெட்கம் :**

செய்யத்தகாத செயல்களைச் செய்ய நினைக்கும் போது நாணமடைதல்.

**நற்புத்தி :**

வீடுபேற்றுக்கு வேண்டியனவற்றைத் தேடவேண்டும் என்ற நல்லறிவு.

**ஜபம் :**

இட்ட தெய்வத்திற்கு உரிய மந்திரங்களைச் செபித்தல்.

**விரதம் :**

பிரமசரியம், இல்லறம், வானப்பிரத்தம், துறவறம் என்ற ஆசிரமங்களுக்குரிய விரதங்களை மேற்கொள்ளுதல்.

## 3. ஆசனம்

இறைவனைத் தியானிக்கும்போது உடல் வளையாமலும் அசையாமலும் இருப்பதற்கு அதனைக் கட்டுப்படுத்திக் கொண்டு வீற்றிருப்பது ஆசனம் எனப்படும். அதுயோக நூலில் 108 வகையாகக் கூறப்பட்டிருப்பினும் மிகச்சிறந்த 8 வகை ஆசனங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாத தாகும்.

**1 சுகாசனம் :**

எந்தவகை ஆசனங்களிலும் பழக இயலாதவர்கள் ஏதாவது ஒரு வகையாகத் துணிவுடன் அசையாமல் வீற்றிருப்பது.

**2. வீராசனம் :**

ஏதாவது ஒரு தொடையின் மீது மற்றொரு பாதத்தை ஏற்றி வைத்துக் கொண்டு நிமிர்ந்து அசையாமல் இருப்பது. இது எல்லாப் பாவங்களையும் போக்கும்.

**3. பத்மாசனம் :**

வலது தொடையின் மீது இடது பாதத்தையும், இடது தொடையின் மீது வலது பாதத்தையும் ஏற்றி வைத்துக் கொண்டு பாதங்களின் கட்டை விரல்களை மாறின கைகளால் இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பது.

**4. வீரபத்மாசனம் :**

வல இடத்தொடைகளின் மீது இடவலப்பாதங்களை ஏற்றி வைத்துக் கொண்டு முதுகின் வழியே பின்னால் மாறிவிடப்பட்ட வல இடக்கைகளால் வல இடப்பாதங்களின் கட்டை விரல்களை இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பது. இது எல்லா நோய்களையும் விடங்களையும் போக்கும்.

**5. சிம்மாசனம் :**

அண்டகோசத்திற்குக் கீழே உள்ள சீவனி நாடியினது இருபக்கங் களிலும் குதிகால்களை மாற்றி அழுத்தி வைத்துக் கொண்டும் இரண்டு கைவிரல்களைப் பரப்பி முழந்தாள்களின் மீது வைத்துக்கொண்டும் மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டிருப்பது.

**6. குக்குடாசனம் :**

பத்மாசனத்தில் அமர்ந்துகொண்டு முழங்கால்களுக்கும் தொடை களுக்கும் இடையிலுள்ள வெளியில் நேராக இரண்டு கைகளையும் உள்ளே விட்டு உள்ளங்கைகளைப் பூமியில் பதியவைத்துக் கொண்டு உந்தி மற்ற உடற்பகுதியை பூமியிற்படாமல் உயர்த்திக் கொண்டு மேலே அசையாமல் இருப்பது.

7. **மயூராசனம் :**

முழங்கை இரண்டும் உந்திப்புறத்தில் அழுந்தப் பூமியில் கையூன்றிக் காலைப்பின்னே நீட்டித் தலைநிமிர்ந்திருப்பது.

8. **சுவஸ்திகம் :**

தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டு உள்ளங் கால்களையும் செலுத்தி இறுமாந்திருப்பதாகும்.

## 4. பிராணுயாமம்

இயன்ற ஆசனத்தை அமைத்துக்கொண்டு முறைப்படி சுவாசத்தின் இயற்கையான போக்கு வரத்துக்களைத் தடுத்தல் பிராணுயாமம் எனப்படும். தடுத்தலாவது பிராணவாயுவை அடக்குதல் என்பதாகும். அது ரேசக பூரக கும்பகம் என மூவகைப்படும். நாசியின் துவாரத்திலிருந்து 16 மாத்திரை யளவுள்ள காலம் வரை சுவாசத்தை வெளியே விடுதல் ரேசகம் எனப்படும். 32 மாத்திரையளவுள்ள காலம் வரை நாசித் துவாரத்தின் வழியே சுவாசத்தை உள்ளே இழுத்தல் பூரகம் எனப்படும். 64 மாத்திரை யளவுள்ள காலம் வரை சுவாசத்தை விடாமல் உள்ளேயே தடுத்துவைத்தல் கும்பகம் எனப்படும். ஒருமாத்திரை என்பது இயல்பாகக் கண் இமைக்கும் நேரம். இம்மூன்றையும் சேர்த்து ஒருமுறை செய்வது ஒரு பிராணுயாமமாகும். இப்பிராணுயாமத்தின் அளவாகிய 16; 32; 64 என்பதை 8: 16; 32 என்ற அளவிலும் செய்யலாம். அவரவர் உடல் நிலைக்கு ஏற்பக் கூட்டியும் குறைத்தும் செய்யலாம். இப்பயிற்சியைக் குருவின் உதவி கொண்டு செய்தல் வேண்டும். இப்பிராணுயாமத்தை மந்திரத்துடனும் செய்யலாம், மந்திர மின்றி எண்ணிக்கையுடனும் செய்யலாம். இப்பயிற்சி யால் மன ஒருமைப்பாடு உண்டாகும். ஆயுள் நீட்டிக்கும்.

## 5. பிரத்தியாகாரம்

மெய் வாய் கண் மூக்கு செவி முதலிய ஐம்பொறிகள் : அவற்றின் செயல்களாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய வற்றில் செல்லும் அறிவை அவ்வாறு செல்ல வொட்டாமல் இருக்கும்படி தடுத்துத் திருப்பி மனத்திடம் சேர்த்து, இவற்றையும் முன்பு அடக்கப்பட்ட பிராணவாயுவையும் அசையாமல் இருக்கும்படி பயிற்சி செய்தல் பிரத்தியாகாரம் ( திருப்புதல் ) எனப்படும்.

## 6. தாரணை

மனத்தில் உள்ள எண்ணங்களை எல்லாம் விலக்கி, அதனை உடம்பில் சக்திவடிவமாக விளங்குகின்ற சக்கரம் என்றுசொல்லக்கூடிய சில இடங்களில் நிலை பெறச் செய்து அவற்றில் இறை வடிவத்தைத் தோன்றும்படி செய்வது தாரணை எனப்படும்.

அச்சக்கரம், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவாகும். இந்தச் சக்கரம் உள்ள இடங்களில் மனதை நிலைபெறச் செய்து தியானித்து ஆனந்த மடைதல் தாரணையாகும்.

## 7. தியானம்

புலன்களை வெளியில் செல்ல விடாமல் மனத்துடன் சேர்த்து அந்தமனத்தினால் இதயதாமரையில் வீற்றிருக்கும் இறை வடிவத்தைத் தைல தாரைபோல இடைவிடாமல் சிந்திப்பது தியானம் எனப்படும்.

## 8. சமாதி

இறைவனிடம் அன்பைச் செலுத்தி, புறப்பொருள்களின்மேலுள்ள ஆசைகளை ஒடுக்கி, சுழுமுனை நாடி வழியே சென்று கும்பகம் செய்து, அங்கே சிவத்துடன் இரண்டறக்கலத்தலே சமாதி ஆகும். இத்தகைய சமாதி கைகூடப்பெற்றால் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை.

முனிபுங்கவர்களே! இவ்வுலகிலுள்ள இயங்கியற் பொருள் நிலையியற் பொருள் ஆகிய எல்லாவற்றிலும், எல்லாப் புவனங்களிலும் யாம் வியாபித்திருக்கின்றோம் என்பதை நன்றாக உணர்ந்துகொண்டு யோக சாதனைகளைப் புரிந்து அவற்றால் அறிவானந்தமயமாக விளங்குவீர்களாக என்று பரமேஸ்வரன் திருவாய் மலர்ந்தருளினார். அப்பரம் பொருளாகிய யோக குருவைப் பலமுறையும் வணங்கித் துதித்து அம்முனிவர் நால்வரும் விடைபெற்றுச் சென்றனர்.

# ஸ்ரீ யோக தட்சிணாமூர்த்தி

அன்யோன்னியாங்கிரிதலம் ஸம்யக்ஸ்பிக் பிண்டாதப் பிரகல்பயேத்।
ஞானமுத்ராம் ஹிருதிஸ்தானேத் வயப்பியந்தர முகம்கரம்।
வரதம் வாமஹஸ்தந்து மேட்ர பீடோபரிந்நியஸேத்।
அபரே சோத்பலஞ் சாக்ஷ மாலாம் பூர்வவதாசரேத்।
நாஸாக்ரம் ஸ்வம் ஸமீக்ஷ்யஸ்வ மார்ஜவம் தேஹமாசரேத்।
ஸாவிகீர்ண ஜடாயுக்தம் யோகமூர்த்தி ரிதிஸ்மிருதம்॥

— "சில்பரத்னம்"

**விளக்கம் :**

இத் திருவுருவத்தினை அமைக்கும் போது இரண்டு உள்ளங்கால்களையும் மாற்றி ஆசனத் துவாரத்தின் முன்புறத்தில் ஸ்பிக்பிண்டத்தின் கீழ் (காச்யப நூலில் "ஸ்பிக்பிண்டம்" என்பது ஆசனத் துவாரத்தின் இருபுறத்திலுமுள்ள வட்டமான உடற்பகுதியே ஆகும் எனக் கூறுகின்றது) அமைக்க வேண்டும். ஞான முத்திரையுள்ள வலதுகையை உள் நோக்கியவாறு இதயத்திற்குச் சரியாக அமைக்க வேண்டும். வரத முத்திரையுடன் கூடிய இடது கையையோவெனில் மேட்ர பீடத்தின்

( ஆண்குறிச்கு மேட்ரம் எனப்பெயர் ) மேல் வைக்கவேண்டும். இவ்வாறு முன் கைகளிரண்டுக்கும் உரியதனைக் கூறப்பட்டது. பின் கைகளிரண்டிலும் அக்ஷமாலையும், குவளைமலரையும் அமைக்க வேண்டும். தனது மூக்கின் நுனியைப் பார்த்தவாறுகவும் நேர்மையான உடம்பு உள்ளவராகவும் இருப்பர். இவரது சடைகள் எல்லாம் சிதறிக்கிடந்தாலும் அழகாக அமைத்தல் வேண்டும். இந்நிலையில் விளங்குபவர் யோக தட்சிண மூர்த்தி எனப்பெறுவார்.

## இதிலே சிறப்பான மற்ெறாரு வகை

லம்பயேத் தக்ஷிணம்பாதம் வாமமுத்குடிகாஸநம் ।
ஸம்பத்தயோக பட்டேன ......... தேஹோத்குடி காங்கிரிசௌ ।
ப்ரஸார்ய வாமஹஸ்தந்து வாமஜாநூபரிஸ்திதம் ।
ஏதச்ச யோக மூர்த்திஸ்யாத் சேஷம் பூர்வவதாசரேத் ।

**விளக்கம் :**

வலது காலைத் தொங்கவிட வேண்டும். இடது காலில் முன்போல் உத்குடிகாஸனம் அமைக்க வேண்டும். தனது உடம்பையும் உத்குடி காஸனத்திலுள்ள இடது பாதத்தையும், யோக பட்டத்தினல் நன்ருகக் கட்டப்படவேண்டும். இடது கை விரித்தவாறு இடது முழங்கால் மேல் பொருத்தப்பட்டிருக்கும். மற்ற அடையாளங்களெல்லாம் ( பின் கரங்களில் திகழும் முத்திரைகளுடன் ) முன் போலவே இவருக்கும் அமைத்தல் வேண்டும்.

## யோக தட்சிணமூர்த்தி (மற்றொரு வகை)

ஊரு மூலம் ஸமாச்ருத்ய அன்யோன்னியா பத்த பார்ஷ்ணிகம் !
யோக பட்டிகயோபேதம் ஜங்காமத்யே விசேஷத : !
ப்ரஸார்ய பூர்வஹஸ்தௌ த்வௌ ஞானூபரி நிதாபிதௌ !
அபரே தக்ஷிணே சாக்ஷமாலாம் வாமே கமண்டலம் !
ஜடாமண்டல ஸமாயுக்தம் கரோட்யர்தேந்து சேகரம் !
நீலக்கிரீவா ஸமாயுக்தம். சங்ககுந்தேந்து சன்னிபம் !
யோகமூர்த்தி விசேஷாக்யம் சேஷம் ப்ராகிவ காரயேத் !

**விளக்கம்**

இவரது இரண்டு பாதங்களின் குதிகால்களும் இரண்டு துடைகளின் அடிப்புறங்களிலும் மாற்றி வைக்கப்பட்டு நன்ருகப் பதிந்திருக்க வேண்டும். முழங்காலுக்கும். கணைக்காலுக்கும் மத்தியிலுள்ள நீளமான காலின் மத்திம பகுதியில் (ஜங்கை) யோகப்பட்டம் சிறப்புற்று விளங்கும். முன் கைகளிரண்டும் விரிக்கப்பட்டு முழங்காலின் மேல் வைக்கப் பட்டிருக்கும் மேலுள்ள இரண்டு கைகளுள் வலது கையில் அக்ஷமாலையும், இடதுகையில் கமண்டலத்தையும் வைத்திருப்பார். சடைகள் மண்டலா



திருக்கழுக்குன்றம்
ஸ்ரீ பக்தவத்ஸலேஸ்வரர் திருக்கோயில்
யோக தட்சிணாமூர்த்தி

( பக்கம் 48-ல் இம்மூர்த்தியின் விளக்கம் )

திருவிடைமருதூர்
ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில்
அம்மன் கோயில் தென்பிரகாரத்தில்
உள்ள ஞான தட்சிணாமூர்த்தி

( பக்கம் 48-ல் இம்மூர்த்தியின் விளக்கம் )





தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில்
வீணாதர தட்சிணாமூர்த்தி
( காலம் - கி. பி. 11-ஆம் நூற்றாண்டு )

( பக்கம் 54-ல் இம்மூர்த்தியின் விளக்கம் )

தஞ்சை மாவட்டம்
சோழகம் பட்டியைச் சேர்ந்த
பொன்விளைந்தான்பட்டி வீணாதர
தட்சிணாமூர்த்தி
( காலம் - கி. பி. 7-ஆம் நூற்றாண்டு )

( பக்கம் 54-ல் இம்மூர்த்தியின் விளக்கம் )



காரமாய்த் (ஜடாமண்டலமாக) திகழும், மண்டை ஓடு, பிறைச்சந்திரன் இவற்றை அணிந்திருப்பார். கருநிறமான கழுத்துள்ளவர், சங்கு குருக்கத் திப்பூ, சந்திரன் இவைகளைப் போன்ற வெண்மையான நிறத்தை உடையவர் என்றும் கூறப்படுகிறது (சுதையிலும், ஓவியத்திலும் அமைக்கலாம்) இவருக்கும் முன்போலவே மற்ற அங்க அடையாளங்கள் எல்லாம் அமைக்கப்படவேண்டும். தனியாகச் சொன்ன சில மட்டுமே சிறப்பாக அமையும்.

## யோக தட்சிணாமூர்த்தி

நாயன்மார்களால் போற்றித் துதிக்கப் பெற்ற திருத்தலம் திருக் கழுக்குன்றம் ஆகும்.

மலையின் உச்சியில் வேதகிரீஸ்வரர் மலைக்கோயிலும் மகேந்திர பல்லவனால் ஆக்கப் பெற்ற குடைவரைக் கோயிலும் உள்ளன.

திருக்கழுக்குன்றம் அடிவாரத்தில் பக்தவத்ஸலேஸ்வரர் திருக்கோயில் உள்ளது. இது முற்காலச் சோழர்களால் திருப்பணி செய்யப் பட்டதாகும். கோஷ்டத்தில் பிரமன், துர்க்கை, தட்சிணாமூர்த்தி முதலான திருவுரு வங்கள் காணப்படுகின்றன. இக்கோஷ்டம் அரைவட்ட வடிவமாக அமைந்துள்ளது. கோஷ்டம் முழுவதும் பல கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. கோஷ்டத்தில் சதுரமாக அமைக்கப்பட்ட பீடத்தின் மீது யோக தட்சிணாமூர்த்தியின் எழில் உருவத் திருமேனி சிரசும், சற்று வலப்பக்கம் நளினமாகச் சாய்ந்து மேல் நோக்கிய விரிந்து பார்வையுடன் காட்சி தருகின்றது. இத் திருவுருவம் 3-அடி உயரத்தில் அமைந்துள்ளது.

இப் பெருமானின் கேசங்கள் ஜடாபார அமைப்புடையனவாகவும். பின்தோன்றும் வலக்கரத்தில் நாகமும், இடக்கரத்தில் ஜபமாலையும் விளங்கு கின்றன. முன் விளங்கும் வலக்கரம் சின்முத்திரையோடும் இடக்கரம் ஊரு ஹஸ்தமாகத் தொடையின் மீது பொருந்தியும் காணப்படுகின்றன. இடப்பாதம் கீழே தொங்க விட்ட நிலையிலும் வலப்பாதம் பீடத்தில் குத்திட்டு வைத்து இடுப்போடு சேர்த்துக் கட்டிய யோக பட்டிகை யுடனும் விளங்குகின்றன. யோக பட்டிகையோடு பெருமான் விளங்கு வதனால் யோகதட்சிணாமூர்த்தி என வழங்கப்படுகின்றார். இங்கு சனகாதி முனிவர்களின் திருவுருவங்கள் காணப்படவில்லை.

## ஞான தட்சிணாமூர்த்தி
### (வேறு வகை)

இந்த ஞான தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் விளங்குகிறது. சோழர்காலக் கற்றளிக்கு ஓர் சிறப்பான எழிற்கோலமாகும். இத்திருவுருவம் சிதல

மடைந்து விட்டதால் 1917 ஆம் ஆண்டு நிகழ்ந்த திருப்பணியின் போது கோஷ்டத்திலிருந்து எடுத்து அம்மன்கோயில் தெற்குப் பிரகாரத்தில் பிரதிட்டை செய்யப் பெற்று விளங்குகின்றது.

இத் திருவுருவத்தின் உயரம் 4 அடி ஆகும். ஆறு பெருங்கிளைகள் உடையதும் இலைகள் நிறைந்ததுமான கல்லால மரத்தின் கீழ் இப்பெருமான் வீற்றிருக்கின்றார். ஆறு கிளைகளும் ஆறு ஆதாரங்களை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. இந்த அமைப்பு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். பெருமானின் சிரசிலே காணப்படும் ஜடைகள் ஜடாபார மாக அமைந்துள்ளது. ஜடாபாரத்தில் காணப்படும் பூரிமம் தனியான தோற்றத்துடன் எடுப்பாக அமைந்துள்ளது. நெற்றியில் லலாடமும் இடக்காதில் ஓலையும் வலக்காதில் குழையும் விளங்குகின்றன.

கரங்களில் காப்புகளும், சின் முத்திரையும் எடுப்பாக விளங்குகின்றன. இச் சின் முத்திரையினைக் காட்டும் கரம் யோக தண்டத்தில் இருப்பது போல் இருப்பினும், உண்மையில் யோக தண்டம் இல்லை. கரத்தைத் தாங்குவதற்குச் சிற்பியால் வடிக்கப்பட்ட கற்சட்டமே அப்படி நமக்குத் தெரிகின்றது,

பின் கரங்களில் தீச்சுடரும், ஜபமாலையும் விளங்கு கின்றன. கழுத்தில் கண்டா பரண மும், ருத்திராட்சமாலையும், மார்பில் பட்டையாக உள்ள யக்ஞோபவீதமும் (பூணூல்) காணப்படுகின்றன, யக்ஞோபவீதம் இழைகளாக அமையாமல் பட்டையாக உள்ளது. யோக நிலையில் அமர்ந்துள்ள இப்பெருமான் புன்முறுவல் பூத்தவண்ணம் இடப்பக்கம் திருக்கண் சாத்திய நிலையில் வீராசனத்தில் எழிலுடன் இடப்பக்கம் சற்று வளைந்தபடி வீற்றிருக்கின்றார். வலக்கால் பூமியில் படியவும் இடக்காலின் தொடை மேலே நன்றாக தூக்கியபடி வலத் தொடையின் மீது மடக்கிய நிலையில் அமைந்துள்ளது. இடக்கால் முட்டியின் மீது வேதச்சுவடி தாங்கிய கரத்தை வைத்துள்ளார். வலத்தே அமைந்த இடுப்புப் பக்கம் வஸ்திரக்கட்டும் வியாக்கிரசர்மம் எனப்படும் புலித்தோலாடையும் உள்ளது.

பாதத்தின் கீழ் ஆசன பீடத்தின் முகப்பில் வலப்பக்கம் இரண்டு மான்களும் படமெடுத்தாடும் பாம்பும் உள்ளன. தென்முகக் கடவுளின் திருமுன்பு மானும் பாம்பும் பகைமை நீங்கிய இயல்புடன் விளங்குகின்றன இத்தகைய சிறந்த சிற்ப வேலைப்பாடமைந்த தோற்றம் கண்டு களிப்பதற்கு உரியதாகும்.

---

திருவிடைமருதூரில் கோயில் கொண்டுள்ள மூகாம்பிகை ஜடாபார அமைப்பு தட்சிணாமூர்த்திக்கு அமைந்திருப்பது போன்றதாகும். ஏனெனில் அம்பிகை தவக்கோலத்தில் வீற்றிருக்கின்றாள். ஸ்ரீ யோகபீடேஸ்வரி என்று கல்வெட்டுகளில் மூகாம்பிகை குறிப்பிடப் பெறுவது கருதத் தக்கது.

# ஸ்ரீ ஞான தட்சிணாமூர்த்தி

வாமம் ப்ராஸாரிதஞ்சாத ஞானூர்த்துவ கோர்ப்பரே|
அபரே தக்ஷிணேத்துவ க்ஷமாலா முத்பல மன்யத;|
ஞானமூர்த்திரிதிக்யாதம் ஸர்வகாரண காரணம்|

இப்பெருமானின் இரண்டு முன்கரங்களிலும் முறையே ஞான முத்திரையும் (வியாக்யான முத்திரையான சின்முத்திரை) அபய முத்திரையும் தரித்திருப்பர். அல்லது இடதுகை இடது முழங்காலின் மேற்புறத்தில் விரிந்தவாறு அமைக்கப்படுவதும் உண்டு. பின்கைகளிரண்டில் வலது கரத்தில் அக்ஷமாலையும், இடது கரத்தில் குவளைமலரையும் ஏந்தியிருப்பார். காரணமான பொருள்கள் எல்லா வற்றுக்கும் ஆதிகாரணமான இவரை ஞான தட்சிணாமூர்த்தி என அழைப்பர்.

# வீணாதர தட்சிணாமூர்த்தி

பண்ணிசையால் பாடிப் பரவுகின்ற மெய்யன்பர்களுக்கு அருள் பாலிக்கும் அண்ணலாகிய சிவபிரான் திருக்கயிலாய மலையில் தட்சிணா மூர்த்தியாக எழுந்தருளி இருக்கும்போது, யாழிசையில் வல்லவர்களாகிய தும்புரு நாரதர் சுகர் முதலிய முனிவர்கள் திருக்கயிலைக்குச் சென்று நந்திபெம் பெருமானின் அனுமதி பெற்று சிவசந்நிதியை அடைந்து பல முறையும் பணிந்து வணங்கி எழுந்து துதித்து நின்றனர். சிவபெருமான் அம்முனிவர்களை அருளுடன் நோக்கினர். அப்போது அந்த முனிவர்கள் பெருமானை நோக்கி 'அருட்கடலே! தேவரீருடைய பெருமைகளைக் கூறும் சாமவேதத்தைத் வீணையில் இயைத்து வாசிக்கவும் பாடவும், இன்னிசை ஞானத்தின் உண்மைகளை அடியேங்களுக்குத் தெளிவுற விளக்கியருள வேண்டும். அதன் பொருட்டே தேவரீரைத் தரிசிக்க வந்தோம் எப்போதும் சிவத்தொண்டில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு அதுமிகவும் இன்றியமையாததாகும். தேவரீர் கருணை பாலிக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டனர். வேண்டுவனவற்றை ஈயும் கருணைக் கடலாகிய பரமன் அருளுடன் வீணை இசையின் இலக்கணங்களை எல்லாம் திருவாய் மலர்ந்தருளினர். அவற்றின் முடிந்த கருத்துக்களைக் கீழே காண்போம்.

வில்லேந்திய வீரன் அவ்வில்லில் இழுத்துக் கட்டப்பட்ட நாணினைச் சுண்டிக் குணத்தொனி எழுப்பினன். அதிலிருந்து தோன்றிய ஓசை இனிமையாக இருந்தது. பின்னர் பெரிதும் சிறிதுமான விற்களை நாணேற்றி மீட்டினன். பலவகை இன்னோசைகள் உண்டாயின. படிப்படியாக வேறுவேறு அமைத்து யாழாக்கினன். யாழே பழங்காலத்து இசைக் கருவி. யாழின் முதிர்ந்த நாகரிகம் வீணையாயிற்று. யாழ் நான்கு வகைப் படும்.

128021.
008.
Q23

"பேரியாழ் பின்னும் மகரம் சகோடமுடன்
சீர்பொலி செங்கோடு செப்பினரால் – தார்பொலிந்த
மன்ன திருமாற வண்கூடற் கோமானே
இன்னம் உளவே சில"

எனவரும் செய்யுளால் அறியலாம்.

இசைக்குப் பிறப்பிடமாகிய யாழ்க்கருவிகள் பேரியாழ் மகரயாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ் என நான்கு வகைப்படும்.

பேரியாழிற்கு இருப்பத்தொரு நரம்பும், மகரயாழ்க்குப் பத்தொன்பது நரம்பும், சகோடயாழ்க்குப் பதினன்கு நரம்பும் செங்கோட்டியாழ்க்கு ஏழு நரம்பும் கொள்ளவேண்டும்.

"சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழே தணக்குடனே – மெல்லியலாய்
உத்தம மான மரங்கள் இவைஎன்றார்
வித்தகமா மானே விதி"

எனவரும் வெண்பாவால், யாழின் உறுப்பாகிய கோட்டுக்குக் கருங்காலியும், கொன்றையும் சிறந்த மரங்கள் என்றும்; மற்றொரு யாழ் உறுப்பாகிய பத்தர்க்குக் குமிழ், தணக்கு, முருக்கு ஆகிய மரங்கள் சிறந்தன என்றும் அறியலாம்.

இம்மரங்களைத் தேர்ந்தெடுக்கும்போது நீர்நிலை அருகில் இருந்த மரமானல் அது மந்தசுரத்தையும், மிகவும் மேட்டுப்பாங்கான பாலைபோன்ற இடங்களில் இருந்த மரமானல் அது மேல்ஸ்தாயியில் ஏறிய சுரத்தையும், கொடுக்கும், ஆகவே மருதநிலம் குறிஞ்சிநிலம் போன்ற இடங்களில் கொண்ட மரமாக இருத்தல் வேண்டும்.

யாழ் நரம்புகளும் தூய்மை புடையனவாகவும் மயிர்த் தொகுதிகள் இல்லாதனவாகவும் இருத்தல் வேண்டும். மயிர்த்தொகுதிகள் இருந்தால் அது மந்த சுரத்தைக் கொடுக்கும். எனவே நல்ல நரம்புகளைக்கொள்ள வேண்டும்.

மேலும் 1000 நரம்புகளையுடைய பேரியாழ் என்ற யாழும் பண்டைக் காலத்தில் வழக்காற்றில் இருந்தது அதனை ஆதியாழ் என்று கூறுவர்.

"ஆயிரம் நரம்பிற்று ஆதியா ழாகும்"

எனவரும் பிங்கலந்தையால் அறியலாம்.

தட்சிணாமூர்த்தியின் கரத்தில் உள்ளது வீணையாகும். நாரதர் ஏந்திய வீணை மகதியாகும், சரசுவதி ஏந்திய வீணை கச்சபியாகும்.

இவ்வீணையில் ஏழிசையைக் கூட்டி எழுப்புவதே பண்ணிசையாகும். பண்கள் 17. பண்ணியல் திறங்கள் 70, திறங்கள் 12, திறத்திறங்கள் 4, ஆசப்பண்கள் 103 ஆகும். இவை தமிழிசைப்பண்கள் ஆகும். இனி 72

மேளகர்த்தா ராகங்களும் அவற்றினின்றும் பிறந்த ஜன்னிய ராகங்களும் பலவாகும். இவை அனைத்தும் கர்நாடக இசைப்பாணியைச் சார்ந்தவை யாகும் என அறிக.

" ஏழிசையாய் இசைப்பயனாய் "

என்றார் சுந்தரர் பெருமான்.

ஏழிசையாவன குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இவை முறையே சங்கு, குயில், யானை, மயில், புரவி, அன்னம், காடை முதலியவற்றால் எழுப்பப்படும் ஓசையை ஒத்தனவாகும். இவற்றிற்கு உரிய தெய்வம் முறையே பிரமன், ஆசிரையான், பாரத்து வர்சன், முருகன், அங்காரகன், பாற்கரன், காசிபன் என்பவர்.

இவ்வாறெல்லாம் தோன்றும் இசையைப் பண்ணில் அமைத்து யாழிலும் வீணையிலும் இசைத்தால் கல்லும் உருகும். பசுவும் மானும் பாம்பும் யானையும் மெய்மறக்கும். எனவே, ஏழிசை இறைவனோடு இசைவிப்பதற்கு உரியதாகின்றது. இறைவன் இசைமயமானவன்.

இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன்று அவ்வயின் அறிந்தோன்காண்க

—மணிவாசகர்

வேயுறு தோளி பங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி

—திருஞானசம்பந்தர்

" வரும் பயனை எழுநரம்பின் ஓசையானை "

" தம் கையின் யாழும் வைத்தார்
தாமரை மலரும் வைத்தார் "

" உலகமெல்லாம் ஒடுங்கியபின் வேதத்தொலி கொண்டு
வீணை கேட்பார் "

" பெருங்கடல் மூடிப் பிரளயம்கொண்டு
பிரமனும் போய் ..................
வருங்கடல் மீளநின்று எம் இறைநல்
வீணை வாசிக்குமே "

— திருநாவுக்கரசர்

" வித்தக வீணையோடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவல் மங்கையொ டும்முடனே
கொத்த வரும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அத்தன்இவ் வழிப்போந்த அதிசயம் அறியேனே. "

— சுந்தரர்

இவ்வாறெல்லாம் நாயன்மார்கள் பாடிப்பரவ நின்ற பரம்பொருள் தமது திருக்கரத்திலே வீணையை ஏந்தி, புயத்தில் அணைத்து, திருவிரல்களால்

நாதகீதம் இசைத்தருளினர். அந்த இசை அடியார்கள் இதயத்தில் தேனமுத வெள்ளமாகப் பாய்ந்தது. அவர்கள் மெய்ம்மறந்து இறை இன்பத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

வீணை ஏந்தி இன்னிசை பரப்பியருளிய வித்தகனை வீணுதர தட்சிணு மூர்த்தி என வழங்கலாயினர்.

கயிலைநாதர் குருநாதராகி உணர்த்தியருளிய பண்ணிசைகளின் இலக்கணத்தின்படி நாரதர் முதலிய முனிவர்கள் வீணுகானத்தினல சாமவேதம் பாடி மகிழ்ச்சி கொண்டனர்.

## வீணுதர தட்சிணுமூர்த்தி

**ததேவ வாமபாதேநோத் குடிகாஸந ஸம்யுதம் ।**
**பூர்வ ஹஸ்த த்வயே வீணுஞ்சேத் வீணுதரம் ஸ்மிருதம் ।**
**அதவா பூர்வ ஹஸ்தாப்யாம் ஞானமுத்ராப யௌத்ருஹா ।**

*( — சில்பரத்தினம் )*

" தர்ம வியாக்யானமூர்த்தி " போலவே பெரும்பாலும் இருக்கும். சிறிது மாறுதலும் உண்டு. இடது காலினுல் உத்குடிகாஸனத்தில் அமர்ந்திருப்பார். இவரது முன்கைகளிரண்டிலும் வீணையை ஏந்தியிருப்பார். இவருக்கு வீணுதர தட்சிணுமூர்த்தி என்று பெயர்.

**நிலைகள் :**

கற்சிலைகளில், வீணுதர தட்சிணுமூர்த்தியினை உருவாக்கும் போது அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் அமைக்கப்படும். உலோகச் சிலைகளில் மட்டும் நின்ற நிலையில் வீணையை ஏந்தி மீட்டும் பாவனை இருக்குமே தவிர, வீணை அவரது கையில் இருக்காது என்பதை நேரிலே காணலாம். சுதைச் சிற்பத்திலும், கற்சிற்பத்திலும், வீணை ஏந்தி மீட்டும் பாவனை இருக்கும். மேலும் இம்மூர்த்தி நந்தியின் பின்னுலோ அல்லது அமர்ந்தோ காணப்படுவார். வீணுதர தட்சிணுமூர்த்தியின் பலநிலைகளை பிற்பகுதியில் இப்புத்தகத்திலே காணலாம்.

## வீணுதர தட்சிணுமூர்த்தி

### ( வேறு வகை )

இந்த வீணுதர தட்சிணு மூர்த்தியின் திருவுருவம் தஞ்சை அரண்மனைச் கலைக் கூடத்தில் உள்ளது. இந்த உலோகச் சிலையின் காலம் கி. பி 11-ஆம் நூற்றுண்டாகும். சோழ மன்னர் கால செப்புச் சிலைகளின் வரிசையில் இதுவும் ஒன்றுகும். (கி. பி. 16 ஆம் நூற்றுண்டில் நாயக்க மன்னரால் கட்டப்பட்ட கொலுமண்டபத்தில் இந்த வீணுதர தட்சிணுமூர்த்தி விளங்குகின்றுர். இம்மூர்த்தி தஞ்சைப் பெரியகோயிலினுள் விளங்கியவ

ராவர். பின்னப் பட்டுவிட்டதால் அங்கிருந்து இந்தக் கலைக் கூடத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இக்கலைக் கூடத்தில் இரண்டு வீணாதரதட்சிணா மூர்த்தி உலோகச்சிலைகள் உள்ளன. மேலும் கற்சிலையால் அமைந்த சோழர்கால தட்சிணாமூர்த்தியும் விளங்குகின்றது.

இக் குருமூர்த்தி பதும பீடத்தில் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார். திருமுகம் புன் முறுவல் பூத்து விளங்குகின்றது. இம் மூர்த்தியின் ஜடைகள் நன்கு அலங்கரிக்கப்பெற்ற கேச பந்தமும் அதில் எடுப்பான பூரிமமும் விளங்குகின்றன. மூன் இரு கரங்கள் வீணையை ஏந்தி மீட்டும் பாவனையில் அமைந்துள்ளன. திருவடியில் சிலம்பு காணப்படுகிறது. வலப்பாதம் சற்று வலப்பக்கம் ... சாய்ந்த வாறும் இடப்பாதம் சற்று வளைந்தபடி முயலகன் (அபஸ்மாரம்) தலைமீது பொருந்த வைத்த வாறும் விளங்கு கின்றது. முயலகன் பெருமானின் ஆற்றலைத் தாங்கமுடியாமல் அஞ்சித்தன் இடக்கையால் பெருமானின் பாத விரல்களைத் தாங்கிப் பிடித்துக் கெஞ்சுவதுபோல் தோற்றமளிக்கிறது. ஏனைய அமைப்புகள் எல்லாம் முன் கூறப்பட்ட வீணாதட்சிணாமூர்த்தியின் திருவுருவத்தில் காணப்படுவது போன்றே அமைந்து விளங்குகின்றது.

## வீணாதர தட்சிணாமூர்த்தி

இங்குக் காணப்படும் வீணாதர தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் தஞ்சைக் கலைக்கூடத்தில் இருக்கின்றது. இது தஞ்சை மாவட்டம் சோழகம் பட்டியைச் சார்ந்த பொன் விளைந்தான் (பொன் விளைஞ்சான்) பட்டியிலிருந்து கிடைக்கப்பெற்ற செப்புத் திருவுருவமாகும். இதன் காலம் கி. பி. 7 ஆம் நூற்றாண்டாகும். இது பிற்காலச் சோழருக்கு முந்திய முத்திரையர் காலத்தைச் சார்ந்ததாகும் எனத்தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த வீணாதர தட்சிணாமூர்த்தி செவ்வகமான பீடத்தில் நின்ற கோலத்தில் கம்பீர மாகக் காட்சி தருகின்றார். ஜடாமுடிகளே கிரீடமாகக் (மகுடமாக) காணப்படுவதால் இதனைக் கேசபந்தம் எனக்கூறுவர். மகுடத்தின் பின்புறம் சிரச்சக்கரமும் காணப்படுகிறது. சிரசில் சந்திரனும், நெற்றிப்பட்டையும் விளங்க, காதுகளில் காதோலையும், குழையும் விளங்க, பின் வலக்கரத்தில் மழுவும் இடக்கரத்தில் மானும் விளங்கக் காட்சி தருகின்றார். (மழுவேந்திய கரமும் விரல்களும் சிதலமாகி உள்ளன). முன்னே உள்ள வல இடக்கரங்கள் வீணையேந்திய நிலையில் அதாவது வீணையை மீட்டும் பாவனையில் அமைந்துள்ளன. பெருமான் தமது வலப்பாதத்தை நேராக ஊன்றியும் இடப்பாதத்தை முன்னோக்கி வளைத்து நிறுத்திய நிலையில் முயலகனின் முதுகின் மீது ஊன்றியும் காட்சி தருகின்றார். முயலகனது அங்கம் முழுவதும் பூமியில் அமுங்கியவாறு கண்கள் பிதுங்க அசைவின்றிச் செயலற்றுக் கிடக்கின்றான், இத்தகு அழகுடன் விளங்கும் வீணாதர தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் யாவராலும் கண்டு மகிழ்வு கொள்ளத்தக்கதாகும்.

# மேதா தட்சிணாமூர்த்தி

வள்ளலார் கோயில் என்பது மயிலாடுதுறையில் காவிரியின் வட கரையில் அமைந்துள்ள சிவத்தலமாகும். இத்திருக்கோயில் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி மேதா தட்சிணாமூர்த்தியாவார், ரிஷபதேவர் பின்னால் இடப்பக்கம் விளங்க, சின்முத்திரை காட்டி உபதேச நிலையில் காட்சி தருகின்றார், ஏனைய சிவத்தலங்களில் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளிக் காட்சிதருவது போலன்றி இத்தலத்தில் கல்லாலமரம் காணப்படவில்லை. சுவாமிக்கு முன்நந்தி விளங்குகின்றது. பெருமானின் பின்புறம் உள்ள வலக்கரத்தில் அக்கமாலையும் இடக்கரத்தில் அக்கினிச்சுடரும் உள்ளன, முன்னே உள்ள வலக்கரம் சின்முத்திரையினையும் இடக்கரம் சுவடியையும் கொண்டுள்ளன. திருப்பாதம் முயலகன் மீது ஊன்றிய நிலையில் காட்சி தருகின்றது.

**புராணவரலாறு :**

சிவபெருமான் திருக்கயிலாய மலையின்கண் எழுந்தருளிக் காட்சி தருகின்றபோது, ரிஷபதேவர் முக்கண் பெருமானைத் தாங்கும் ஆற்றலை நாம் பெற்றிருக்கின்றோம் என்று சற்று முனைப்பெய்தினார். இதனை உயிர் தொறும் விரவிநிற்கும் உமாமகேஸ்வரர் உணர்ந்தார், தமது ஜடாமகுடத் தினின்றும் ஒரு முடியை மட்டும் எடுத்து ரிஷபதேவர் மீது வைத்துத் தாம் மட்டும் தனியே நின்றார். அந்த ஒரு முடியின் சுமையைத் தாங்க மாட்டாத வராகிய ரிஷபதேவர் மூர்ச்சையடைந்து கீழே சாய்ந்தார். பின்னர் தம் முனைப்படங்கிக் குற்றம் பொறுத்தருளுமாறு இறைவனை இறைஞ்சினார். இறைவன் காவிரி யாற்றங்கரையருகில் அமைந்துள்ள ஸ்ரீ வதான் யேஸ்வரரை வழிபட்டு வணங்கினால் பழைய நிலையைப் பெறுவாய் என்று கூறியருளினார்.

அவ்வாறே நந்தியெம்பெருமான் இத்தலத்து இறைவனை வழிபட்டு வணங்கி மனமுருகி வேண்டினார். அந்நிலையைக் கண்ட பெருமான் இத்தலத்தில் தட்சிணாமூர்த்தியாகக் காட்சி தந்தருளினார். தென்முகப் பெருமான் மீண்டும் ரிஷபதேவரைத் தம் வாகனமாகக் கொண்டு காட்சி தருகின்றார். வதான்யம் என்ற சொல்லுக்குக் கேட்காமல் கொடுப்பது என்பது பொருள், ஆகையால் இத்தலப் பெருமானுக்கு வள்ளலார் எனப்பெயர் வழங்குவதாயிற்று.

# இடபத்தின் அளவுமுறை

## (பொது)

இடபம் இருக்கவேண்டிய முழு உயரத்தை முதலில் தீர்மானம் செய்து கொள்ளவேண்டும். அதைப் பதினைந்து பாகமாகச் செய்தால் அதில் ஒரு பாகம் ஒரு அங்குல மென்னும் அடிப்படையில் இங்கு அளவுகள் கூறப்படுகின்றன. நந்தியின் முகத்திலிருந்து பின்புறம் வரையிலுள்ள முழு நீளம் நாற்பது அங்குலமாம்.

இனி இடபத்தின் உயரம் விளக்கப்படுகிறது. முகத்தின் உயரம் கீழிருந்து மேல் ஒன்பதங்குலம், அதிலிருந்து கழுத்துவரை உயரம் எட்டங்குலம். அதிலிருந்து மார்புவரை உயரம் பதினைங்குலம். துடைகளின் உயரம் ஆறங்குலம், முழங்காலின் உயரம் இரண்டங்குலம். கெண்டைக் காலினுயரம் ஆறங்குலம். குளம்பினுயரம் இரண்டங்குலம்.

இரண்டு கொம்புகளின் இடைவெளி எட்டங்குலம். கொம்புகளின் உயரம் நாலங்குலம். கொம்புகள் தொடங்குமிடத்தில் அதற்றினகலம் நாலங்குலம் ஆகும்.

கொம்புகளின் முனையினகலம் அரை அங்குலம். அடியிலிருந்து நுனிவரை படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்லும். கொம்புகளின் மத்தியில் சிறிது வளைவு இருக்கவேண்டும்.

நெற்றியினகலம் ஒன்பதங்குலம், முகத்தினகலம் ஐந்தங்குலம், அதன் கனமும் அவ்வளவேயாம். கண்ணின் நீளம் இரண்டங்குலம்.

கண்ணின் உயரம் ஒன்றரை அங்குலம். கண்ணின் அமைப்பு மீன் போன்றதாக இருக்க வேண்டும். கண்களின் மத்தியிலிருந்து முகத்தின் உயரம் எட்டங்குலம்.

கண் காது இவற்றின் இடைவெளியினளவும் (4 அங்குலம்) அதுவேயாம். காதின் நீளம் ஐந்தங்குலம். அடிப்புறத்தில் அதனகலம் இரண்டங்குலம்.

காதின் நடுவில் அதனகலம் நாலங்குலம், நுனியில் அதனகலம் ஒரு அங்குலம், காதின் கனம் அரை அங்குலம். கன்னமும் காது போன்ற அளவுள்ளதேயாம்.

மூக்கின் நீளம் ஒரு அங்குலமாகும். இவ்வாறாக இடபத்தின் அளவு முறைகள் சிற்பரத்தினம் நூலில் கூறப்படுகிறது.

# சக்தி தட்சிணாமூர்த்தி

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலின் சித்திரப் பிரகாரத்தின் கிழக்குப் பகுதியின் மதில் மேல் சுதைச் சிற்பமாக விளங்கும் சக்தி தட்சிணாமூர்த்தியைக் காணலாம்.

அருளே வடிவமாக விளங்கும் சக்தியானவள் தட்சிணாமூர்த்தியின் இடப்பக்கம் நின்ற கோலத்திலும், பெருமான் அமர்ந்த கோலத்திலும் காட்சி தருவதைக் காணலாம். தென்முகக் கடவுள் இங்கே வீராசனத்தில் அமர்ந்துள்ளார். இவரது ஜடாபாரத்தில் சந்திரனும் கங்கையும் காணப் படுகின்றன. பின் கரங்களில் தீச்சுடரும். ஜபமாலையும் விளங்குகின்றன. முன் கரங்களில் சின்முத்திரையும் சுவடியும் காணப்படுகின்றன. வலப்பாதம் கீழே உள்ள முயலகன் மீது பொருந்தியுள்ளது. இடப் பாதம் வலத் தொடையின் மீது மடக்கி வைக்கப்பட்டுள்ளது. இறைவன் சற்று சாய்ந்த நிலையில் மேல் நோக்கிய பார்வையுடன் திகழ்கின்றார்.

மேலும் பல்வேறு வகையான நிலைகளில் எழுந்தருளியுள்ள தென் முகக் கடவுளின் திருவுருவத் தோற்றங்களை இக்கோயிலின் சித்திரப்பிரகாரத்தில் சுதைவடிவத்தில் கண்டு களிக்கலாம்.

காமிகாகமத்தில் பிரதிஷ்டா தந்திரத்தில் சக்தி தட்சிணாமூர்த்தியின் திருவுருவ அமைப்பை பற்றியதாக வருகின்ற தியான சுலோகம் பின் வருமாறு.

"ஸ்படிகம் ரஜதவர்ணம் மௌக்திகை ரக்ஷமாலிகம்
அமிர்த கலசபூர்ணம் ஞானமுத்ராம் கராக்ரை:
ஸர்ப்ப ஹஸ்தம் சந்த்ரசூடம் யக்ஞ சூத்ரவிராஜிதம்
சக்தி பிரதக்ஷிண மூர்த்தேர் தியாயேத் தேவவிசேஷத :"

"ஸ்படிகம் போன்ற வெண்மை நிறமுடையவராய் முத்துக்களால் தொடுக்கப்பட்ட அக்ஷமாலையுடன் முழுவதும் நிறைந்து விளங்குகின்ற அமிர்த கலசத்தையுடையவராய் (நிறைகுட அமிர்தம் போன்றவராய்) மூன்றாம் பிறைச் சந்திரனைச் சடாமுடியில் தரித்தவராய், நாகத்தைக் கரத்தில் ஏந்தியவராய், மார்பகத்தில் பூணூல் அணிந்தவராய், ஞானமுத்திரை காட்டி சக்திதேவியுடன் காட்சியருளும் சக்தி தட்சிணாமூர்த்தியைத் தியானிக்கின்றேன் என்பது இந்தச் சுலோகத்தின் கருத்தாகும்."

# சாம்ப தட்சிணாமூர்த்தி

திருவிடைமருதூர் என்னும் இத்தலம் கும்பகோணத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையே அமைந்துள்ளது. இது ஜோதிர்லிங்கத் தலம் என்பர். நால்வர் பெருமக்களும் பாடிய சிறப்புடையது. இறைவன் திருப்பெயர் ஸ்ரீ மகாலிங்கேசுவரர். இறைவி திருப்பெயர் பெருநலமாமுலைநாயகி. சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுகளும் உள்ளன. வரகுணபாண்டியன், பட்டினத்தார், பத்திரகிரியார் முதலானோர் வணங்கி பேறு பெற்ற தலமாகும். இத்திருக்கோயிலினுள் மூன்று பிரகாரங்கள் உள்ளன (பிரணவப்பிரகாரம், சித்திரப்பிரகாரம், அஸ்வமேதப் பிரகாரம் ).

ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் மகா மண்டபத்தின் வடக்குப் பக்கம் அமைந்துள்ள மேடையில் சாம்ப தட்சிணாமூர்த்தியின் சுதைச் சிற்பம் விளங்குகின்றது, ( பெருமான் அம்பாளுடன் காட்சி தருகிறார் ) இத்தல புராணத்தின்படி இத்திருவுருவம் இங்கு அமைக்கப்படலாயிற்று. இத் திருவுருவத்தின் கீழேதான் விசேட காலங்களில் அபிஷேக ஆராதனைக்குரிய பொருள்களை வைத்திருப்பது மரபாகும்.

**புராண வரலாறு :**

இத்தலத்துப் பெருமானாகிய இடைமருதீசரின் சிறப்புக்களைத் திருநந்தி தேவரின் மூலம் கேட்டறிந்த உரோமச முனிவர், இத்தலத்தின் ஒரு பக்கம் பர்ணசாலை அமைத்துக் கொண்டு ஜோதிர்மயமாக விளங்கும் ஸ்ரீ மகாலிங்கப் பெருமானை நாள்தோறும் போற்றி வணங்கித் தவமிருந்து வந்தார். இவருக்குப் பக்குவ காலம் வந்தவுடன் இவருடைய தவச் சிறப்பைக் கண்டு இறைவன் சாம்ப தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி தந்து ஞானம் அருளினர் என்பது இத்தல புராண வரலாறாகும்,

**திருவுருவ விளக்கம் :**

இடப்பக்கத்தில் அமர்ந்த அம்பிகையுடன் பெருமான் சுகாசன நிலையில் அமர்ந்துள்ளார். வலப்பாதத்தின் கீழே அமர்ந்திருக்கும் நந்தியின் மீது பாதம் பொருந்தியுள்ளது. இவரது ஜடாமகுடத்தில் பத்ர பூரிமமும், சந்திரனும் விளங்குவதைக் காணலாம். மார்பிலும், தோளிலும் கரங்களிலும் பல்வகை அணிகலன்கள் அணி செய்கின்றன. பின்கரங்களில் சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் முதலான திருவுருவங்களில் காணப்படுவது போன்று மானும் மழுவும் காணப்படுகின்றன. முன்னே விளங்கும் இடக்கரத்தில் சுவடியை ஏந்தியும், வலக்கரத்தால் சின்முத்திரையினைக் காட்டியும் விளங்குகின்றார்.

இடப்பக்கம் அமர்ந்துள்ள அம்பிகையின் வலத் திருக்கரத்தில் கடக முத்திரை விளங்குகின்றது. இடக்கரம் பூமியைத் தொட்டுக்கொண்டிருகின்றது. அம்பிகையின் திருவுருவம் சுவாமியை நோக்கியவாறுள்ளது.

சாம்ப தட்சிணாமூர்த்தியாகிய குருநாதர் பின்னால் பிரணவத்தை உணர்த்தும் திருவாசியில் 18 தீச்சுடர்கள் விளங்குகின்றன இப்பதினெட்டும் பதினெண் புராணங்களை உணர்த்துகின்றது.

ஆகமங்களிலும் சிற்பநூல்களிலும் கூறப்படாத பல்வேறு நிலையுள்ள தட்சிணாமூர்த்தியின் உருவங்களைப் புராணங்களில் நாம் காணலாம். இத்திருக் கோயிலில் மட்டுமே இந்த எழில்மிகு திருவுருவம் அமைந்து விளங்குகின்றது

ஏனைய திக்கோயில்களில் திருப்பணி செய்யும் ஸ்தபதிகள் இத்திரு வுருவை முன் மாதிரியாகக் கொண்டு தட்சிணாமூர்த்தியின் திருவுருவத்தை சுதையாகவும் சிற்பமாகவும் ஓவியமாகவும் அமைக்கின்றனர். மேலும் இத் திருக்கோயிலினுள் உள்ள சித்திரப் பிரகாரத்திலுள்ள பல்வேறு நிலைகளில் உள்ள தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்கள் பின்னால் விளக்கப்படுகின்றன.

## ஹரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி


பூலோக கயிலாயமாகிய திருவையாற்றிலுள்ள பஞ்சநதேஸ்வரர் திருக்கோயிலில் இத்திருவுருவம் விளங்குகின்றது. இத்திருக்கோயில் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். இத்திருவுருவம் தட்சிணாமூர்த்தி பேதங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இக்குருநாதர் பின் வலக்கரத்தில் கபாலமும் இடக்கரத்தில் திரிசூலமும், முன் வலக்கரத்தில் அபயஹஸ்தமும் இடக்கரத்தில் சிவாகமச் சுவடியும் ஏந்தியுள்ளார்.

"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

என்ற குறளை நினைவூட்டுவது போல ஐம்புலன் அடக்கத்துக்கு எடுத்துக் காட்டாக ஐந்து உறுப்புக்களையுடைய ஆமையைப் பாதத்தில் அடக்கி அழுத்திக் காட்டுகின்றார். மேலும் தவத்திற்கு ஐம்புலன் அடக்கம் அவசியம் என்று தனது திருவடியின் கீழ்விளங்கும் ஆமையினை அடக்கி அழுத்தி உணர்த்துகின்றார்.

இக்குருமூர்த்தி சனகாதி முனிவர் நால்வர்க்கும் உண்மைப் பொருளை உபதேசவாயிலாக உணர்த்தாமல் உணர்த்திக் காட்டினார். அவ்வாறு உபதேசம் பெற்ற முனிபுங்கவர்கள் தியான யோகத்தில் அமர்ந்து சிவனடியே சிந்திக்கும் பேறு பெற்று அவனடியின் கீழ் தொழுது இருக்கின்றனர்.

இத்தலத்தில் திருமாலுக்குத் தனிச்சிறப்பு உண்டு, என்பதை அப்பர் சுவாமிகள் "அரியலால் உருவமில்லை" என்று தொடங்கும் பாடலின் இறுதியடியில் "அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே" எனக் குறிப்பிடுகின்றார். திருமாலையே தேவியாகக் கொண்டவர் என்பது கருத்து. மேலும் திருமால் திருவீழிமிழலையில் ஆயிரம் தாமரை மலர்களால் அருச்சித்தபோது ஒன்று குறைய, தம் கண்ணையே ஒரு மலராகக் கொண்டு அர்ச்சித்து சக்கரம் பெற்றதை நாவுக்கரசர் 'ஏறுடன் ஏழடர்த்தான் எண்ணி



திருவிடைமருதூர்
ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில்
சித்திரப் பிரகாரத்தில் உள்ள
சக்தி தட்சிணாமூர்த்தி


(சுதைச் சிற்பம்)

( பக்கம் 58-ல் இச்சிற்ப விளக்கம் )

திருவிடைமருதூர்
ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில்
மகாமண்டபத்தில் விளங்கும்
சாம்ப தட்சிணா மூர்த்தி

(சுதைச்சிற்பம்)

( பக்கம் 53-ல் இம்மூர்த்தியின் விளக்கம்)





திருவையாறு
ஸ்ரீ பஞ்சநதேஸ்வரர் திருக்கோயில்
ஹரி குரு சிவயோக தட்சிணாமூர்த்தி

( பக்கம் 60-ல் இம்மூர்த்தியின் விளக்கம் )

சுரட்டப்பள்ளி
ஸ்ரீ வன்மீகேச்வரர் திருக்கோயில்
ரிஷபாரூட ஞானயோக சக்தி
தட்சிணாமூர்த்தி

( பக்கம் 60-ல் இம்மூர்த்தியின் விளக்கம் )



ஆயிரம் பூக்கொண்டு, ஆளுடைச் சடையினனை அர்ச்சித்தான் அடியிணைக் கீழ், வேறு ஓர் பூக் குறைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக். கூறுமோர் ஆழி ஈந்தார் குறுக்கை வீரட்டனரே' எனவரும் பாடலால் கூறுகின்றார். இதற்குச் சான்றாகத் திருவீழிமிழலையில் உள்ள சோமாஸ்கந்த மூர்த்தியின் பாதத்தில் சக்கரம் காணப்படுவது கொண்டு உணரலாம்.

இத்தலத்தில் (பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தில்) பஞ்சாக்கர ஜெபம் செய்தால் எமபயம் அகலும் என்பதற்கு எடுத்துக்காட்டாக சுசரிதன் வரலாற்றைக் கூறலாம். சுசரிதன் என்னும் அந்தணச் சிறுவன் வசிட்ட முனிவரின் அறிவுரைப்படி இக்கோயிலின் தெற்குக் கோபுரவாயிலில் அமர்ந்து பஞ்சாக்கரத்தைப் பலகோடி உரு செபித்தான். இவனை அணுகி வந்த எமனை ஐயாறப்பருடைய ஆணையின் வண்ணம் துவார பாலகர் அழித்து இவனுக்கு அருள் புரிந்தார். இத் துவாரபாலகர் "ஆட்கொண்டார்" என்ற பெயருடன் தெற்குக் கோபுர வாயிலில் எழுந்தருளியுள்ளார்.

இந்த ஜெபத்தின் பெருமையை உணர்ந்த அகத்தியர், தூர்வாசர் முதலிய முனிவர்கள் இங்கு ஜெபம் செய்து பல சித்திகளைப் பெற்றார்கள் என்பது வரலாறு. இதனால் இக்கோயிலுக்குச் ஜெபேசுரம் எனப்பெயர் வழங்கலாயிற்று. இங்கு ஜெபேசமண்டபம் தனிச் சிறப்புடையது.

திருமால் ஜெபப் பெருமையை உணர்ந்து இங்கு எழுந்தருளியுள்ள சிவயோக தட்சிணாமூர்த்தியைத் தரிசித்து துதித்து வணங்கினார். தென்முகக் கடவுள் அவருக்கு திருவைந்தக்கரத்தை(பஞ்சாக்கரம்)உபதேசந்தருளினார். ஆகவே இங்கு வீராசனத்தில் வீற்றிருக்கும் குருநாதர் ஹரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி என்ற திருப்பெயரால் வழங்கப்படுகிறார் என்று கூறுவாரும் உளர். இப்புகழ் பெருமை வாய்ந்த திருக்கோயிலினை முற்காலச் சோழர்களும் பேரரசர்களும் திருப்பணிகள் பல செய்து நிபந்தங்கள் பல அளித்துள்ளனர். திருநாவுக்கரசு சுவாமிகளுக்குக் கயிலைக் காட்சியை அருளிய திருத்தலமாகும்.

## ரிஷபாருட ஞானயோக சக்தி தட்சிணாமூர்த்தி

**(வேறு வகை)**

இத்திருவுருவம் சுரட்டப்பள்ளி என்னும் தலத்தில் விளங்குகின்றது. (சென்னைக்கும் திருப்பதிக்கும் இடையே சென்னையிலிருந்து 48 கி. மீ. தொலைவில் உள்ள ஊத்துக் கோட்டை என்னும் ஊருக்கு அருகில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது) இத்தலத்தில் சிவபெருமான் பள்ளி கொண்ட நிலையில் காணப்படுவது தனிச்சிறப்பாகும். இங்கே புற்றுருவங் கொண்ட புனிதனின் திருமேனி சுயம்பு லிங்கமாக விளங்குகின்றது. இப் பெருமான் வால்மீகி முனிவரால் பூசிக்கப் பெற்றவர். ஆதலால் இவருக்கு வன்மீகேச்வரர் என்ற திருநாமம் வழங்கப்படுகிறது.

இச்சிவபெருமான் எழுந்தருளியுள்ள கருவறைச் சுற்றுச் சுவரான கோஷ்ட மாடங்களில் எழில் மிக்க பல்வேறு வகையான சிற்பச்

செல்வங்களைக் காணலாம். இச் சிற்பங்களின் எழிற் கோலம் காண்போரின் கண்களை விட்டகலாத் தன்மை வாய்ந்தது.

ஜடாபாரமாக பூரிமத்துடன் விளங்குகின்றது. ஜடாமுடியில் மூன்றாம் பிறைச் சந்திரனும் கங்கையும் காணப்படுகின்றன. நெற்றியில் அணிந்த நெற்றிப்பட்டையும், காதுகளில் காதோலையும், குழையும், சர்வ ஆபரணங்கள் பலவும் திகழ்ந்து பேரழகூட்ட பெருமான் எழில் மிகு தோற்றத்துடன் விளங்குகின்றார். இப் பெருமானது அழகுதிகழும் முகமும் அருள் ஒழுகு கண்ணும் எழிலுடன் விளங்குகின்றன. இவரதுபார்வை கீழ் நோக்கியதாக உளது. மேலும் குத்துக்காலாக வைத்த இடக்காலினைத் தன் இடுப்புடன் கட்டிய யோக பட்டையும் விளக்கப்பெறுகின்றது. தமது வலக்காலை கோரப்பல்லுடனும் சின்முத்திரைக் கரத்துடனும் விளங்கும் முயலகனின் முதுகின் மேல் பதிய வைத்துள்ளார். இங்கே முயலகன் அஞ்சும் நிலையில்லாமல் அமைதி தவழும் முகத்துடன் ஞானம் பெற்றவனைப் போல் காணப்படுகின்றான்.

இத் தலத்தில் எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி எல்லாத் தலங்களிலும் விளங்குவதுபோல சனகாதி முனிவர்களுடன் காட்சிதரவில்லை. இத் தலத்தில் சற்றுமாறுதலாகப் பதஞ்சலி, வியாக்ரபாதர் காட்சிதருகின்றனர்.

இத்திருக்கோயிலின் தெற்கு தேவகோஷ்ட மாடத்தில் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருக்கும் ரிஷபாரூட ஞானயோக சக்தி தட்சிணாமூர்த்தியின் பேரழகினைப் புனைந்துரைக்க இயலாது.

சிவபிரான் யோக நிலையில் இருந்தபோது அவருடைய தவத்தைக் கலைப்பதற்கு மன்மதன் முயலுகின்றான். எல்லாம் உணர்ந்த சிவபிரான் நெற்றிக் கண்ணைச் சிறிதே திறந்து நோக்கிய அளவில் அவன் பஸ்பமாகி விடுகிறான். சின்முத்திரை காட்டி முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்கின்ற தென்முகக் கடவுளின் திருமுகத்தை அம்பிகை அச்சத்துடன் நோக்குகின்றாள். தனது இடக்கரத்தால் இறைவனின் இடத்தோளின் கீழ் பொருந்த வைத்துச் சிந்தனையில் ஆழ்கின்றாள். இப்பெருமானின் பின் இருகரங்களில் மானும் மழுவும் விளங்குகின்றன. முன்னே விளங்கும் வலக்கரம் சின்முத்திரை காட்டி நிற்கிறது.

இடக்கரம் சுவடி இல்லாமல் குத்துக்காலாக இருக்கும் இடக்காலின் முட்டியில் தண்ட ஹஸ்தமாகக் கீழ் நோக்கியவாறு தொங்க விடப்பட்டுள்ளது. சிரசில் விளங்கும் கேசங்கள் எல்லாம் அடுக்கி வைத்தாற் போன்று விளங்கவும் ரிஷபவாகனம் தன் பின்னே அமைந்து விளங்கவும் தாம் விளக்கும் சின்முத்திரையினை, ரிஷபத்தின் சிரசின் மேல் வைத்தது போலவும் உள்ளது. முனிவர்களும் தாங்கள் உணர்ந்த ஞான நிலையினைச் சின்முத்திரையின் மூலம் காட்டி, பெருமான் எவ்வாறு தவ நிலையில் உள்ளாரோ அதுபோலத் தவநிலையில் உள்ளனர்.

இந்த சக்தி தட்சிணாமூர்த்தியின் திருவுருவ அமைப்பானது. நுண்ணிய சிற்ப வேலைப்பாட்டுத் திறத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகும், இதனை நேரில் கண்டால்தான் உணரமுடியும்.



திருவாதவூரர் திருப்பணி செய்விக்கின்ருர் பணிகள் விரைவாக நடக்கின்றன.



பரிசதீட்சை



நயனதீட்சையும் உபதேசமும்



பூவார் அடிச்சுவடு பொறித்தல்

# குருமூர்த்தி

தமிழ் மூன்றும் வளர்த்த தண்பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரைக்குப் பதினைந்துகல் தொலைவில் அமைந்துள்ளது வாதவூர் அவ்வூரில் அமாத்திய அந்தணர் மரபில் சம்புபாதாசிரிதர் என்பவருக்கும் சிவஞானவதி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக அவதரித்தார் வாதவூரர்.

அவர் இளமைப்பருவம் முதற் கொண்டு இறையன்பு மிக்கவராக விளங்கினர். பதினாறு வயதுக்குள் கற்கவேண்டிய கலைநூல்கள் அனைத்தையும் கற்றுக் கல்வி கேள்விகளில் வல்ல நல்லறிஞராக விளங்கினர். தெளிந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தார். இவரது தெளிந்த ஞானத்தையும் சிறந்த நுண்ணறிவையும் கேட்டறிந்த அரிமர்த்தன பாண்டியன் இவரைத் தன்பால் தக்க சிறப்புடன் வருவித்து, முதலமைச்சர் பதவியைக் கொடுத்துச் சிறப்பித்தான். இவரது செயலாற்றலை நன்குணர்ந்த பாண்டிய மன்னன் இவருக்குத் 'தென்னவன் பிரமராயன்' என்ற சிறப்புப் பட்டத்தையும் அளித்து மேலும் சிறப்பு செய்தான். வாதவூரர் பாண்டிய மன்னனுக்கு உறுதுணையாக இருந்து நாட்டை வளப்படுத்தி நல்லாட்சி நடத்தினர். ஆனால் இவரது மனம் "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்றபடி, உமையொருபாகன் மீது உண்மையன்பு பூண்டிருந்தது.

ஒரு நாள் அரிமர்த்தன பாண்டியன் அவைக்களத்தில் அரியணையில் அமர்ந்திருந்தபோது ஒற்றர் சிலர் வந்து சோழ நாட்டுக் கடற்கரையில் கப்பலிலிருந்து குதிரைகள் வந்து இறங்கியுள்ளன என்றுதெரிவித்தனர். தன் குதிரைப்படையை நன்றாக வலிமைப்படுத்த எண்ணியிருந்த பாண்டியன் அச்செய்தி கேட்டு நல்லினக் குதிரைகளாகப் பார்த்து வாங்கி வரும்படி நிறைந்த பொன்னைக் கொடுத்து வாதவூரரை அங்கே அனுப்பிவைத்தான்.

அரிமர்த்தன பாண்டியன் கருத்திற்கு இணங்க வாதவூரண்ணல் தன்பின்னே படைகள் சூழப்புறப்பட்டு, அங்கயற்கண் அம்மையையும் அழகிய சொக்க நாதரையும் வணங்கிக் கிழக்குக் கடற்கரையை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் உள்ள திருப்பெருந்துறையில் தங்கினர்.

அங்கே ஒரு பூஞ்சோலையில் வேதாகமங்களின் ஒலி கேட்டது. வாதவூரர் அங்கே சென்றார். குருந்தமர நிழலில் அழகமிகுந்த தோற்றத்துடன் ஞான குருநாதர் அடியவர் கூட்டத்துடன் வீற்றிருக்கும் அற்புதக் காட்சியைக் கண்டார். உள்ளம் அன்பு வெள்ளம் பொங்கக் கனிந்து உருகி, அந்தக் குருநாதருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி எழுந்து நின்று "எம்பெருமானே! தேவரீர் அடியேனை இனிப் பிறவா வண்ணம் காத்து ஆட்கொள்ள வேண்டும்" என்று வேண்டினர்.

அவரது பக்குவ நிலையைக் கண்ட குருநாதர் அவரைத் திருக்கண்ணால் நோக்கி 'அஞ்சற்க! நின்னை ஆட்கொள்ளுவோம்' என்று திருவாய் மலர்ந்தருளி அவர் சிரசின் மீது திருக்கரம் வைத்துப் பாதமலர் சூட்டி அறிவானந்தமாய் அன்புக்கடலாய் ஐந்தெழுத்தின் தத்துவ நியமங்களை உபதேசித்தருளினர், வாதவூரருக்குச் செவிவழியாகச் சிவானந்தம் சிந்தையுள் புகுந்தது. அகவிருள் அகன்றது. உள்ளொளி பெருகியது. வாதவூரர் சிவானந்த வெள்ளத்தில் திளைத்து நிட்டை கூடி இருந்தார்.


பின்னர் நிட்டை கலைந்தபோது அடியார் குழாத்துடன் குருநாதரையும் மற்றவர்களையும் காணவில்லை. 'பெருமானே! அடியாரெல்லாம் நின்னடி சேர்ந்தார். அடியேன் புறமே போந்தேன்' என்று கண்ணீர் வடித்தார். பாமாலை பாடினார். தன்னை மறந்தார். தலைவன் தாளே தலைப்பட்டுக் கோயில் திருப்பணிகள் செய்யத் தொடங்கினர். அங்கேயே தங்கி இருந்து பாமாலைபாடிப் பரவினர். அவை யெல்லாம் விலைமதிக்கமுடியாத மாணிக்கம் போன்று இருந்தமையால் இவருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயர் இறைவனால் சூட்டப்பெற்றது.

வாதவூரர் ஆகிய மணிவாசகர் தாம் வந்த காரியத்தை மறந்து சிவப்பணி மேற்கொண்டிருப்பதை ஒற்றர் மூலம் உணர்ந்த பாண்டியன் மணிவாசகரை மதுரைக்கு வருமாறு ஓலைவிடுத்தான். அரசன் கட்டளை பெற்ற மணிவாசகர் கோயிலுள்ளே சென்று 'பெருமானே! கொண்டு வந்த பொருளை எல்லாம் கோயிற்பணிக்குச் செலவு செய்தேன். குதிரை வாங்க என்ன செய்வேன்,' என்று விண்ணப்பம் செய்தார். 'அஞ்சற்க! ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று போய்ச் சொல்லுக' என அசரீரி கூறியது.


அமைச்சர் பிரான் மதுரை சென்று மன்னனிடம் ஆவணிமூல நாளில் குதிரைகள் வரும் என்று கூறினர். அரசனும் ஆவணிமூல நாளை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். வாதவூரர் கொண்டு சென்ற பொருள் முழுவதையும் ஆலயப்பணிக்குச் செலவழித்துவிட்டார், என்ற செய்தியை ஒற்றர்மூலம் அறிந்த பாண்டியன் வெகுண்டு அமைச்சரைச் சிறையில் அடைத்தான்.

அடியார் துன்பம் பொறுக்கமாட்டாத ஆலவாய் அரன் நரிகளைப் பரிகளாக்கித் தேவர்களைப் பாகர்ளாக்கித் தாம் குதிரை வணிகனாகி பாயும் பரிமேல் ஏறிக் குதிரைப் படைகளுடன் மதுரை வந்து மன்னனிடம் அவற்றை ஒப்படைத்தார். மன்னன் வாதவூரரை விடுவித்துப் பிழை பொறுத்தருள வேண்டினன்.

பின்னர் நள்ளிரவில் குதிரைகள் நரிகளாகிப் பழைய குதிரைகளையும் கடித்துக் குதறிவிட்டு ஊளையிட்டு ஓடி மறைந்தன. மன்னன் அது கேட்டுக் கடுஞ்சினம் கொண்டு அமைச்சரை வைகைச் சுடுமணலில் நிறுத்தித் துன்புறுத்தினன். மணிவாசகர் மனமுருகிச் சிவனை வேண்டினர்.



திருப்பெருந்துறை
அருள்மிகு ஆத்மநாதப் பெருமான் திருக்கோயில்



திருவாதவூரர்
( அமைச்சர் )

திருவாதவூரர்
( அடிகள் )

மாணிக்கவாசகர்
( திருவாசகச் சுவடியுடன் )

வைகையில் வெள்ளம் வந்தது. வீட்டுக்கு ஒருவராகக் கரையை அடைக்க மக்களுக்குக் கட்டளையிட்டான். வந்தி பங்கு அடைக்க ஆள்கிடைக்க வில்லை. அன்புடைய வந்தி வருந்தினள். மதுரைச் சொக்கரே வந்திக்கு ஆளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டு மறைந்தருளினர். பாண்டியன் உண்மையை அறிந்து இறைவன் திருவிளையாடலை உணர்ந்து மணிவாசகரை வணங்கிப் பிழை பொறுத்தருள வேண்டுமென்று வேண்டினன்.

மீண்டும் அமைச்சுப் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக் கொண்டான். மணிவாசகர் துறவு பூண்டு தேனமுதத் திருவாசகம் பாடினர். பின்னர் தில்லை சென்று பொன்னம்பலவாணன் பூங்கழல் சேர்ந்தார்.

திருக்கயிலை நாதர் விண்ணுலகத்துத் தேவருக்கும் முனிவருக்கும் உபதேசித் தருளியதோடல்லாமல் மண்ணுலகத்து மணிவாசகருக்கும் ஞானோபதேசம் செய்தருளினர். அதனல் அப்பெருமானுக்குக் குருமூர்த்தி எனப் பெயர் வழங்குவதாயிற்று.

அத்துடன் மணிவாசகர் பொருட்டுக் குதிரைச் சேவகனுகிவந்து 'பாண்டியன் தனக்குப் பரிமாவிற்று ஈண்டு கனகம் இசையப் பெருது ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்ப' என்று மணிவாசகர் பாடியதற் கேற்ப அசுவாருடமூர்த்தியாகவும் மன்னவர் காண எழுந்தருளினர் என்பதும் அறியத் தக்கதாகும்.


# திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில்

# தட்சிணாமூர்த்தி

திருவாவடுதுறை எனும் தலம் காவிரியின் தென்கரையில் அமைந்த திருத்தலமாகும். கும்பகோணம் மயிலாடுதுறை பெருவழிச் சாலையில், மயிலாடுதுறைக்கு மேற்கே 15 கி. மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். இத்தலம் திருமூலர் எழுந்தருளியிருந்து திருமந்திரம் பாடியருளிய பெருமையும், திருஞானசம்பந்தர் பொற்கிழி பெற்ற சிறப்பும் உடைய சிவத்தலமாகும். சித்தபுரம் என்ற திருப்பெயரும் இதற்கு உண்டு. சித்தர் சிவப்பிரகாசரின் அருளாணையினைச் சிரமேற் கொண்டு ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் இந்தத் திருவாவடுதுறை ஆதீனத்தைத் தாபித்தருளினார்கள்.

ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் தட்சிணாமூர்த்திப் பெருமான் பல கிளைகளையுடைய கல்லால மரத்தின் கீழ் வீராசனத்தில் வீற்றிருக்கின்றார். இவரது தலைக்குமேல் (கர்ண கூட்டில்) நடராஜரும் விளங்குகின்றார். சிரசில்விளங்கும் ஜடாபாரத்தில் சந்திரன் ஒளிவீசுகின்றது. உஷ்ணீஷம், லலாடம், பத்ரபூரிமம் ஆகியனவும் விளங்குகின்றன. மார்பில் கண்டாபரணமும் பூணூலும், சன்னவீரமும் உத்திராக்கமும் அணிசெய்கின்றன. வலக்கரம் வியாக்கியான முத்திரையினைக் காட்டுகின்றது. மாடத்தின் உட்பக்கம் முனிவர்கள் நால்வரும் உள்ளனர்.


உபதேசம் நிகழும் இடத்திற்கு யாரையும் உள்ளே செல்ல அனுமதிக்கலாகாது என்பதால் இங்கே இரு குண்டோதரர்கள் வாயிலில் காவல் புரிகின்றனர். இது இங்குத் தனிச்சிறப்பாகும். ஏனைய ஆலயங்களில் உள்ள தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்களுக்கருகில் வாயிற் காப்போர் விளங்குவதனைக் காண முடியாது. மேலும் இத்திருக்கோயிலினைத் திருப்பணி செய்த கற்றளிப்பிச்சன் புடைப்புச்சிற்பங்கள் மூன்று காணப்படுகின்றன. கோஷ்டத்தைச்சுற்றிக் கல்வெட்டுகள் உள்ளன. இத்திருக்கோயில் முதல் பராந்தக சோழன் (கி. பி 947) காலத்தில் திருப்பணி செய்ததாகக் கல்வெட்டுகளால் அறிகின்றோம். மேலும் இக்கோயில் கல்வெட்டால் ஒருமுழ உயரத்திற்கு தட்சிணாமூர்த்தியின் எழுந்தருளுந் திருமேனி (உற்சவர்) இருந்ததாக அறிகிறோம்.



திருவாவடுதுறை

ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில்


தட்சிணாமூர்த்தி



திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில்

திருவிடைமருதூர்
ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில்
கருப்பக்கிருகத் தெற்கு
தேவ கோஷ்டத்தில் விளங்கும்
தட்சிணாமூர்த்தி





திருவிடைமருதூர் திருக்கோயிலின் தோற்றம்

## திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில்

# தட்சிணாமூர்த்தி

இத்திருக்கோயில் கும்பகோணத்திற்குக் கிழக்கே 10 கி. மீ. தூரத்தில் உளது. காவிரியின் தென்கரையில் அமைந்த திருத்தலமாகும். சமயாசாரியர்கள், பட்டினத்தடிகள், பத்திரகிரியார், வரகுணபாண்டியன் முதலானோர் வழிபட்ட திருத்தலமாகும்.

இத்திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் தென்முகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இலைகள் அடர்ந்த கிளைகளையுடைய கல்லாலமர நிழலில் இப்பெருமான் வீராசனம் கொண்டு காட்சிதருகின்றார். பின் இடக்கரத்தில் திகழும் சுடர் திரிசூலம் போல உள்ளது. வலக்கரத்தில் ஏந்தியுள்ள நாகம் இருவட்டமாகச் சுழன்று காணப்படுகின்றது. காதுகளிலும் மார்பிலும் ஆபரணங்கள் எழிலூட்டுகின்றன. வலத்திருவடியில் சிலம்பும் வீரக்கழலும் விளங்குகின்றன. முயலகன் பெருமானின் திருவடிப்பதிவால் அஞ்சி விழித்த கண்களுடன் காணப்படுகின்றான். சனகாதி முனிவர்கள் நால்வரும் திருவடிக்கீழ் அமர்ந்துள்ளனர். இப்பெருமான் வீற்றிருக்கும் சன்னிதியின் முகமண்டபத்தினை இருசிங்கங்கள் தாங்கிய தூண்கள் காணப்படுகின்றன. இருகருங்கல் சங்கிலிகள் மேலிருந்து தொங்குகின்றன இத்திருக்கோயிலும் துறைசையாதீனத்திற்குச் சொந்தமானதாகும்.

## திருவாலங்காடு ஸ்ரீ வடவாரண்யேஸ்வரர் திருக்கோயில்

# தட்சிணாமூர்த்தி

கும்பகோணம் மயிலாடுதுறைப் பெருவழிச் சாலையில் திருவாலங்காடு எனும் வைப்புத்தலம் அமைந்துள்ளது. இத்தலத்திற்கு மிக அருகில் உள்ள தலம் திருவாவடுதுறை ஆகும். திருவாலங்காட்டில் உள்ள வடவாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் இத்திருவுருவம் காணப்படுகிறது. இக்கோயிலும் திருவாவடுதுறை ஆதினத்திற்குச் சொந்தமானதாகும். குருநாதர் கல்லாலமர நிழலில் ஜடாபாரத்தோடு மார்பில் அணிகலன்கள் அழகு செய்ய சின் முத்திரை காட்டி, பட்டு வஸ்திரம் விரித்த பீடத்தில் வீராசனத்தில் எழுந்தருளிக் காட்சி வழங்குகின்றார். இப்பெருமான் சன்னிதியில் உள்ள சித்திர வேலைப்பாடமைந்த சிங்கம் சுமந்த இருதூண்கள் அழகாக விளங்குகின்றன. அத்தூண்களின் அடிப்பகுதியில் உடைவாளோடு குருமூர்த்தியைத் தொழும் நிலையில் மூன்றாம் குலோத்துங்க சோழன் புடைப்புச் சிற்பம் உள்ளது.

மேலும் தட்சிணாமூர்த்தியின் தலைக்கு மேல் மிகச் சிறிய அளவில் வீணாதர தட்சிணாமூர்த்தி திருவுருவம் ஒன்று காணப்படுகிறது. இத் திருக்கோயிலின் தென்புறத்தில் விளங்குகின்ற அறுபத்துமூவர் திருவுருவச் சிலைகளை அடுத்து மூன்றாம் குலோத்துங்கன் உருவச்சிலை 3 அடி உயரத்தில் கூப்பிய கரத்துடன் காணப்படுகிறது. இவ்வரசனது தலையின் மீது இரு பாதுகைகள் காணப்படுகின்றன. இறைவன் திருவடிகளைச் சிரமேற் கொண்டு நாட்டை ஆட்சிபுரிந்தான் என்பதும், இவ்வரசனது சிவபக்தியும் விளங்குகின்றன. இத்திருக்கோயிலினை மூன்றாம் குலோத்துங்கன் திருப்பணி செய்ததாகக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.



தஞ்சைமாவட்டம் – திருவாலங்காடு
ஸ்ரீ வடவாரண்யேஸ்வரர் திருக்கோயில் திருப்பணிசெய்த
மூன்றாம் குலோத்துங்க சோழன். இம்மன்னனது உருவம்
சுவாமிகோயிலின் தெற்குப் பிரகாரத்தில் விளங்குகிறது.



தஞ்சாவூர் மாவட்டம் திருவாலங்காடு
ஸ்ரீ வடவாரண்யேஸ்வரர் திருக்கோயில்
தட்சிணாமூர்த்தி

நரசிங்கம்பேட்டை
ஸ்ரீ சுயம்புநாதர் திருக்கோயில்
தட் சிணாமூர்த்தி



## நரசிங்கன்பேட்டை ஸ்ரீ சுயம்புநாதர் திருக்கோயில்

# தட்சிணாமூர்த்தி

இத்தலம் தஞ்சைமாவட்டத்தில் கும்பகோணம் – மயிலாடுதுறை கற்சாலையில் உள்ளது. இவ்வூரின் தெற்கே 2 கி. மீ தொலைவில் ஸ்ரீ சுயம்புநாதர் கோயில் விளங்குகிறது. இது தேவாரப் பாடல் பெருத தலமாக இருந்த போதிலும் சிற்பச் சிறப்பு மிக்க திருக்கோயிலாக விளங்குகிறது. இத்தலத்தைப் பற்றிய அரிய செய்திகள் துறைசைப் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்திருக்கோயில் துறைசையாதீனத்திற்குச் சேர்ந்த மானதாகும்.

நரசிம்ம பல்லவன் நடு நாட்டையும் சோழ நாட்டையும் ஆட்சி புரிந்த காலத்தில் காடவர் கோன் கழற்சிங்கன் என்பான் கீழ் சிற்றரசர் பலர் சிறந்து விளங்கினர். அவர்களுள் ஒருவன் நரசிங்க முனையரையன் என்பவனுவான். இவ்வரசன் திருமுனைப்பாடி நாட்டை ஆண்டு வந்தான். இவன் சோழ நாட்டுக்கு வரும் போதெல்லாம் திருவாவடுதுறையை அடுத்துள்ள பேட்டையில் தங்குவது வழக்கம். அரசர் விரும்பித் தங்கிய தனல் இப்பேட்டை பல வகையிலும் சிறப்புற்று விளங்கியது. அதனல் இது, அவன் பெயரால் நரசிங்கன்பேட்டை என வழங்கப்பெறலாயிற்று.

நரசிம்மமூர்த்திக்கு பிரமஹத்தி தோஷம் ஏற்பட்டதால் இத்தலத்தில் விளங்கும் சுயம்புநாதரை வழிபட்டு நற்கதி பெற்ருர். இத்சகையை புராண வரலாற்றுச் சிற்பம் மகாமண்டபச் சுவரில் புடைப்புச் சிற்பமாகவும் திருக்கோயிலின் முகப்பில் சுதைச் சிற்பமாகவும் உள்ளன.

இத்திருக்கோயிலின் மகாமண்டபத்தில் தெற்கு நோக்கிய தட்சிணு மூர்த்தியின் திருவுருவம் 2½ அடி உயரமுடையதாய்க் காணப்படுகிறது. இப்பெருமான் வீராசனத்தில் அமர்ந்து எழிலுடன் விளங்குகின்ருர். தலையில் மகுடமாக ஜடாபாரமும் அதில் பத்ர பூரிமமும் பிறைச்சந்திரனும் கங்கையும் காட்சியளிக்கின்றன. இவரது கரங்களில் தீச்சுடர், ஜெபமாலை பாம்பு, சின்முத்திரையினைக் காண்கிருேம். கீழே வலக்காலால் மிதியுண்ட முயலகன், பெருமானின் ஆற்றலைக் கண்டு விழிகள் பிதுங்க அஞ்சிக் கலங்கிய நிலையில் காணப்படுகின்ருன். புன்முறுவல் பூத்து ஞான நிலையினை உணர்த்தும் குருநாதர் திருமுகம் காண்போரைக் கவரவல்லது. இங்கே சனகாதி முனிவர்கள் காணப்படவில்லை. இத்திருக்கோயிலின் கருவறை அரைவட்டமாக அமைந்துள்ளது. கோஷ்டமாடத்தில் விநாயகர், தட்சிணு மூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை முதலான திருவுருவங்கள் விளங்குகின்றன.

மயிலாடுதுறை ஸ்ரீ மயூரநாதசுவாமி திருக்கோயில்

## வியாக்யான தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி.

தஞ்சைமாவட்டத்தில் மயிலாடுதுறை எனும் தலத்தில் மயூரநாதசுவாமி திருக்கோயில் விளங்குகிறது. இத்திருக்கோயிலும் துறைசையாதீனத்தின் ஆளுகையில் உள்ளது. இத்திருக்கோயிலில் இரு தட்சிணாமூர்த்தி திருவுருவங்கள் காணப்படுகின்றன.

இப்பெருமான் கல்லாலமர நிழலில் ஜடாபாரத்தோடும், சின் முத்திரை யோடும் அணிகலன்கள் விளங்க வீராசனத்தில் அமர்ந்துள்ளார். அப்பப்பா! இவரது திருவடியின் கீழ்புலியும், மானும், பாம்பும் பகைநீங்கி நட்பு நிலையில் விளங்குகின்றன. முனிவர்கள் தம்மை மறந்த நிலையில் சிவானந்த அனுபவத்தில் ஆழ்ந்திருக்கின்றார்கள். குருநாதன் வியாக்யான தட்சிணா மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றார். ஞானம் வேண்டுபவர்கள் அதனை விரும்பினால் இங்குப் பெறலாம்.

மற்றொரு மூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தியாகக் காட்சிதருகிறார். தட்சிணாமூர்த்தி பேதங்களில் இதுவும் ஒன்று. சிலதலங்களிலேதான் இம்மூர்த்தியைக் காணலாம். குருநாதர் யோக நிலையினை ஆன்மாக்களுக்கு உணர்த்தவேண்டி, தாமே யோக நிலையிலிருந்து சின்முத்திரையோடு உத்குடிகாசனத்தில் எழுந்தருளியுள்ளார். இட முழங்கால் மீதுள்ள கரம் கஜஹஸ்தமாக தொங்கவிட்டுக் கொண்டு திருமுகத்தில் சாந்தமும், கண்களில் கருணையும் பொழியக்காட்சி தருகின்றார்.

சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

# தட்சிணாமூர்த்தி

தஞ்சைமாவட்டம்—குடந்தை வட்டத்திலுள்ள அறுபடை வீடுகளில் ஒன்றான ஸ்ரீ சுவாமிநாத திருக்கோயிலின் அடிவாரத்தில் விளங்கும் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் மிக நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தட்சிணாமூர்த்தி எடுப்பான தோற்றத்தில் எழுந்தருளிக் காட்சிதருகின்றார்.

குடைபோன்று கவிந்து விளங்கும் கல்லால மரத்தின் கீழ்அமர்ந்துள்ள தட்சிணாமூர்த்தியின் திருமுடி ஜடாபந்தம் என்ற அமைப்பில் உள்ளது. காதுகளில் காதோலையும் குழையும் விளங்குகின்றன. இவரது மார்பில் மகரகண்டியும். பூணூலும். கண்டமாலையும், உருத்திராக்க மாலையும் அழகூட்டுகின்றன. பின்னே விளங்கும் வலக்கரத்தில் உள்ள நாகம் பெருமானின் திருமுகத்தை நோக்குகின்றது. இடக்கரம் தீச்சுடரை ஏந்தியுள்ளது. முன்னே விளங்கும் வலக்கரம் ஜபமாலை கொண்டு சின் முத்திரையுடன் விளங்குகின்றது. இடக்கரம் சுவடியுடன் கஜஹஸ்தமாக உள்ளது. சின்முத்திரைதாங்கிய கரம் யோகதண்டத்தில் இருப்பதுபோல் உள்ளது. இது சிலையின் கைப்பலத்திற்கு சிற்பி அமைத்த அமைப்பாகும். நாகத்துடன் விளங்கும் முயலகனை இறைவன் தமது வலக்காலினால் ஊன்றியும் இடமுழங்காலை வலக்கால் முட்டியில் மடக்கிவைத்தும் வீராசனத்தில் அமர்ந்தவாறு முனிபுங்கவர்களுக்கு ஞான உபதேசம் செய்தருளுகின்றார்.

இப்பெருமானின் திருவடிக்கீழிருக்கும் முயலகனின் தலைப்பக்கம் கால்பக்கம் ஆகிய இருமருங்கிலும் இருக்கும் முனிவர்கள் சின்முத்திரை யுடன் கிழக்குத் திசையையும் மேற்குத் திசையையும் நோக்கியவாறு அமர்ந்துள்ளனர். குருநாதர் அமர்ந்த கோஷ்ட மாடத்தின் சுவர்த் தூணில் ஒற்றைக் காலில் நின்று கொண்டு (ஏகபாதஸ்தானக அமைப்பு) இரு கரங்களையும் உச்சிமேல் கூப்பிய வண்ணம் தொழுது தவநிலையில் நிற்கும் இரு முனிவர்களின் திருவுருவங்களைக் காணலாம்,

இக் குருநாதனின் எழில் உருவை ஒரு முறை கண்டோர் மீண்டும் காணவிழைவர்.

## தக்கோலம் - திருவூறல் மகாதேவர் திருக்கோயில்

# தட்சிணுமூர்த்தி

இத்திருவுருவம் தக்கோலம் - திருவூறல் மகா தேவர் திருக்கோயிலில் விளங்கும் தட்சிணுமூர்த்தியாகும். இத்தலம் வட ஆர்க்காடு மாவட்டம் அரக்கோணம் புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 6. கி. மீ. தொலைவில் உள்ளது. இது தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் 12-வது திருத்தலமாகும் இக்கோயிலின் கருவறைச் சுவரின் தெற்கு வெளிப் பக்கத்தில் ( தேவகோஷ்டத்தில் ) விநாயகரும் தட்சிணுமூர்த்தியும் காட்சி தருகின்றனர்.

இங்குள்ள தட்சிணுமூர்த்தியின் திருவுருவம் சோழ பரம்பரை யினருகிய முதலாம் ஆதித்தன் காலத்தில் திருமாணிக்கப்பட்ட தாகும். இத்திருவுருவம் எழில் மிக்கதாக விளங்குகின்றது. இப்பெருமான் ஜடா மண்டலத்துடனும், புன்சிரிப்புடனும் காட்சி தருகின்ருர். நாம் எந்தப்பக்கம் நின்று பார்த்தாலும் புன்சிரிப்பினைக் காணலாம். இவரது வலக்கரம் சின்முத்திரையுடன் விளங்குகின்றது.

இதில், நடுவிரல் அணிவிரல் சிறுவிரல் ஆகிய மூன்றும் மடங்கியுள்ளன. இது கடகஹஸ்தம் போல விளங்குகின்றது. திருவடியின் கீழே முயலகன் (அபஸ்மாரம்) காணப்படவில்லை. சர்ப்பம் ஒரு பக்கமும், இரண்டுமான்கள் மற்ருெரு பக்கமுமாக விளங்குகின்றன, உத்குடிகாசனத்தில் அமர்ந்தருளும் இப்பெருமான் சன்னிதியில் உயிர்கள் அனைத்தும் பகைமை மறந்து நட்புடனும் சமத்துவத்துடனும் விளங்குகின்றன என்பதை இக்காட்சி புலப்படுத்துகின்றது, பெருமானின் ஆடைக்கட்டு, ஆபரணங்களின் நுட்பவேலைப்பாடு, சாயல் முதலியன சிற்பியின் கைவண்ணத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.



தக்கோலம் - திருஊறல் மகாதேவர் திருக்கோயில்
தட்சிணாமூர்த்தி

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில்
சித்திரப் பிரகாரத்தில் பல நிலைகளில்
விளங்கும் தட்சிணாமூர்த்தி (சுதைச் சிற்பங்கள்)



## காஞ்சிபுரம் கருக்கினில் அமர்ந்தாள் சக்தி ஆலய

# தட்சிணாமூர்த்தி



இத்திருவுருவம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் செல்லும் தெற்குச் சாலையில் கருக்கினில் அமர்ந்தாள் என்ற சக்தி ஆலயத்தில் விளங்குகின்றது. இவ்வாலயத்தில் விளங்கும் திருவுருவங்கள் எல்லாம் ஆகமங்களில் இல்லாத வகையில் அமைந்துள்ளன. இங்கு எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி வீராசனத்தில் அமர்ந்துள்ளார். இவரது ஜடைகள் ஜடாமண்டல மாகக் காணப்படுகின்றன. இவரது திருமுகத்தின் இருமருங்கிலும் அரசனுக்குரிய வெண்சாமரமும் வெண்கொற்றக்குடையும் விளங்க திருக்கரத்தில் திரிசூலமும் காணப்படுகின்றன. பெருமானது வலப் பாதம் பத்மத்தில் பதிந்துள்ளது. இது காணக் கிடைக்காத சிற்பத் திருவுருவமாகும்.

கி. பி. 1012-ல் சோழ மன்னனாய் விளங்கிய முதலாம் ராஜேந்திரன் அரியணை அமர்ந்தான். இவனது காலத்தில் காஞ்சிப்பதியில் பல கோயில் களுக்குத் திருப்பணிகளைச் செய்தான். அவற்றுள் இதுவும் ஒன்றாகும். "ஜெயங்கொண்ட சோழ மண்டல எயிற் கோட்டப்பகுதியில் நின்றருளிய கருக்கமர்ந்த பட்டாரியர்" என்றே இம்மன்னன் கல்வெட்டு கி. பி. 1025-ல் குறிப்பிட்டு பொன் வழங்கிய செய்தியையும் வெளிப் படுத்துவதிலிருந்து சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பும் இக்கோயில் பிரசித்தி பெற்று விளங்கியதனை இதன் மூலம் நாம் அறிகின்றோம்.

## திருவல்லம் பில்வநாதீஸ்வரர் திருக்கோயில்

# தட்சிணாமூர்த்தி



தொண்டைநாட்டுத் தலத்தில் சிறப்புற்றுவிளங்குவது திருவல்லம் பில்வநாதீஸ்வரர் திருக்கோயில் ஆகும். இக் கோயிலின் தேவகோஷ்டத்தில் தட்சிணாமூர்த்திப் பெருமான் அருட்காட்சி தருகின்றார்; இவரது ஜடாபாரம் சிறு சிறு ஜடைக்கட்டுகளுடன் வட்ட வடிவமாகக் காணப்படுகிறது. இடக்காதில் ஓலையும் வலக்காதில் குழைக்குப் பதிலாக நாகமே குழையாக அமைந்துள்ளது. மார்பில் கண்டாபரணமும் ஏகருத்திராக்ஷமும், பூணூலும் அணிசெய்கின்றன. வலக்கரம் சின்முத்திரையினைக் காட்டுகின்றது. வலப்பாதத்தால் முயலகனை மிதித்துள்ளார். இடப்பாதத்தை ஆசனத்தின் மீது குத்திட்டு வைத்து உற்குடிகாசனத்தில் வீற்றிருக்கின்றார். இடக்கரத்தில் சுவடியினை ஏந்தியுள்ளார். திருவடியின் கீழ் இருமுனிவர்கள் உள்ளனர். ஒருவர் குருநாதரின் திருமுகக் குறிப்பை நோக்குகின்றார். ஒரு முனிவர் சுவடியில் எழுதும் நிலையில் உள்ளார். சாந்தம் தவழும் திருமுகத்துடன் குருநாதர் காட்சிதருகின்றார்.



இங்கு பஞ்சலோக தட்சிணாமூர்த்தி சிலை பாரீஸ் நாட்டின் " Guimet " மியூசியத்தில் உள்ளது. ஜடாபாரத்துடனும், முப்புரிநூலுடனும் விளங்கும் இவர் சின் முத்திரையினைக் காட்டியருளுகின்றார். பின் கரங்களில் தீச்சுடர் உள்ளது. மற்றொன்றில் ஏதும் காணப்படவில்லை வீரக்கழல் அணிந்த தனது வலக்காலால் முயலகனை அழுத்த, முயலகனது பார்வை பெருமானை நோக்கியவாறு உள்ளது. முன் இடக்கரம் கீழ் நோக்கியுள்ளது. இதன் உயரம் 11 செ. மீ. ஆகும். இது கி. பி. 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகரர் காலத்தது ஆகும். இந்த அழகுச் சிற்பம் கிடைத்தற்கரியதாகும்.

ஆதாரம் : South Indian Bronzes (Book)
93- a

Dakshinamurti Vijaysnagara 16 th Century A D H. t 11 C. ms Musee' Guimet Paris.

A miniature bronze typical of the Vijayanagara Period

திருப்பூந்துருத்தி எனும் தலம் திருவையாற்றுக்குத் தென் கிழக்கில் 3. கி. மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் உள்ள புஷ்பவன நாதர் திருக்கோயிலில் இத் திருவுருவம் காணப்படுகிறது. குருநாதர் ஜடா மண்டலத்துடன் முன் இரு கரங்களிலும் வீணையை ஏந்திய வண்ணம் ஒரு வகை உத்குடி காசனத்தில் எழுந்தருளியிருக்கின்றார். இப்பெருமான் வீணை ஏந்தி இசைப்பதைக் கண்ட திருநாவுக்கரசர் " பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னை " என்று குறிப்பிடுகின்றார். இது முற்காலச் சோழர் காலத்துச் சிற்பக்கலையைச் சார்ந்தது ஆகும்.





திருக்கச்சனம் எனும் தலம் திருவாரூர் திருத்துறைப்பூண்டி பேருந்துப் பாதையில் திருவாரூரிலிருந்து 19 கி மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள கைச்சின்னே சுவரர் திருக்கோயிலின் தேவ கோஷ்டத்தில் ரிஷபாருட தட்சிணாமூர்த்தி திருவுருவம் காணப்படுகிறது. இதனை மேதா தட்சிணாமூர்த்தி என்பர். குரு நாதருடைய ஜடா பாரமும் எடுப்பான அழகிய பூரிமமும் திருமுகத்திற்கு அழகூட்டுகின்றன. மார்பில் பல்வகை ஆபரணங்களும் உருத்திராக்க மாலையும் பூணூலும் அணிசெய்ய சின்முத்திரையுடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். முயலகனது ஜடைகள் ஜடா மண்டலமாக உள்ளது, வலப்பக்கம் நர்தியம் பெருமான் அமர்ந்து. தனது நாவால் பெருமானின் இடது திருவடியினை ஸ்பரிசிக்கின்ற முறையில் அமைந்துள்ளது. ஆகையால் இவர் ரிஷபாருட தட்சிணாமூர்த்தி என்று இத்தலத்தில் விளங்குகின்றார். இது இராஜேந்திர சோழன் காலத்துச் சிற்பவரிசையில் போற்றப் படுவதாகும்.

திரு ஆலூர் எனும் தலம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாபநாசம் இரயில் நிலையத்திலிருந்து கோவிந்த குடிக்கு அருகில் 11. கி. மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள பசுபதீச்சுரம் கோயிலின்தேவகோஷ்டத்தில் இந்த அழகிய திருவுருவம் கண்டு இன்புறத்தக்கது. சிரசில் ஜடா மண்டலமும் பூரிமமும் விளங்க எழில்முகம் காட்சி தருகின்றது. மார்பில் அணிகலன்கள் அழகு செய்யவும் பாதத்தில் சிலம்பும் வீரக்கழலும் விளங்கவும் பெருமான் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். புன்னகை பூத்தமுகத்தோடு சின்முத்திரை காட்டியருளுகின்றார். இச்சிற்பம் ராஜேந்திர சோழன் காலத்தைச் சார்ந்த தாகும்.



## ஆலங்குடி ஆபத்சகாயர் திருக்கோயில்

## தட்சிணாமூர்த்தி (மூலவர்)



தட்சிணாமூர்த்தியின் சிறப்புத் தலமாக விளங்குவது ஆலங்குடி ஆகும். இத்தலம் திரு இரும்பூளை என்று திருமுறைகளில் குறிப்பிடப்படுகின்றது. இது நீடாமங்கலம் இரயில் நிலையத்திற்கு வடக்கே 6 கி. மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள ஆபத்சகாயர் திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் இப்பெருமான் எழுந்தருளி யுள்ளார். மூலவராகிய தட்சிணாமூர்த்தி சின்முத்திரை காட்டிய திருக்கரத்துடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். முனிவர் நால்வரும் உள்ளனர், மேலும் இத்திருக்கோயிலில் ஜடாபாரத்துடன் விளங்கும் ஐம்பொன்னுலாகிய தட்சிணாமூர்த்தியின் உற்சவமூர்த்தி காணப்படுகின்றது. படர்ந்த கல்லால மரத்தின் கீழ், ஐந்தலை நாகம் பெருமானுக்குக் குடைபிடித்தும் சனகாதி முனிவர்கள் சூழ உற்சவ மூர்த்தியாய் இப்பெருமான் விளங்குகிறார். வேறு எந்தத்தலத்திலும் தட்சிணாமூர்த்தியின் உற்சவத் திருமேனியைக் காண்பது அரிது ஆகும். காண வேண்டியது நமது கடமையாகும்.



இப்பெருமான் அழகாக விரிந்த ஜடா பாரத்துடன் மார்பில் அணிகலன்கள் விளங்க சின் முத்திரை காட்டி வீராசனத்தில் எழுந்தருளி இருக்கின்றார். இடக்கரத்தை நேராகப் பூமியைத் தொடும்படி தொங்க விட்டிருக்கின்றார்.

இடம் : திருநெல்வேலி மாவட்டம் ஊர்க்காடு திருக்கோட்டியப்பர் திருக்கோயில்.

இப்பெருமானுடைய ஜடாமண்டலம் வரிசையாகவும் நேராகவும் குத்திட்டுக் காணப்படுகின்றது. பெருமான் சின் முத்திரை காட்டி வீராசனத்தில் அமர்ந்துள்ளார். இடப்பாதத்தின் பரடு மேல் நோக்கியுள்ளது. இடக்கரத்தை நேராகப் பூமியைத் தொடும்படி தொங்கவிட்டிருக்கின்றார். இடகரத்தருகே நாகம் இருக்கிறது. முனிவர் இருவர் பாதத்தருகே அமர்ந்துள்ளனர்.



இடம் ; திருநெல்வேலி மாவட்டம் — அத்தாளநல்லூர் — முன்றீஸ்வரர் திருக்கோயில்.



இப்பெருமான் ஜடாபாரத்துடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். இடப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. வலப்பாதம் மடங்கியுள்ளது. வீராசனத்தில் பாதம் மாறி அமைந்துள்ளது. சின்முத்திரை உள்முகமாகத் தனக்குத்தானே காட்டியவாறு அமைந்துள்ளது இடக்கரம் நேராகத் தொங்க விடப்பட்டுள்ளது.

இடம் : திருநெல்வேலி மாவட்டம். — பிரமதேசம் — கைலாச நாதர் கோயில்.

இக்குருநாதர் ஜடா மண்டலத்துடன் சின்முத்திரை காட்டி வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். வலப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. முயலகன் முகம்வலப்பக்கம் இருப்பதற்குப் பதிலாக இடப்பக்கம் அமைந்துள்ளது. இடக்கரம் நேராகத் தொங்க விடப்பட்டுள்ளது. முயலகன் கையில் ஓர் ஆயுதம் (நீண்டகோல்) காணப்படுகிறது என்பது கூர்ந்து நோக்கத் தக்கது.

இடம் : திருநெல்வேலி மாவட்டம் — சேரன் மாதேவி — அம்மநாத சுவாமி திருக்கோயில்.





இப் பெருமான் ஜடாபாரத்துடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். பின் இரு கரங்களில் சுடரும் ஜபமாலையும் திகழ்கின்றன. முன் இரு கரங்களில் சுவடியும் சின்முத்திரையும் காணப் படுகின்றன. பின்னால் நந்தி காட்சியளிக் கின்றது. முயலகன் ஜடாமண்டலத்துடன் மேல்நோக்கியவாறு காணப்படுகின்றான் இவர் மேதா தட்சிணாமூர்த்தி ஆவார் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆனங்கூர் (திருவாவடுதுறைக்கு அருகில்) அகத் தீஸ்வரர் திருக்கோயிலின் உள்மண்டபத்தில் இப் பெருமான் விளங்குகின்றார். கோஷ்டத்தில் விளங்கும் தட்சிணாமூர்த்தி யையும் இந்நூலில் வேறு இடத்தில் காணலாம் இக்கோயில் செம்பியன் மாதேவியாரால் திருப்பணி செய்யப்பட்ட தாகும். காலம் 0– ஆம் நூற்றாண்டாகும்.

## கலிங்கநாடு - யோகதட்சிணாமூர்த்தி

இந்தத் திருவுருவம் சிறப்பு மிக்க வேலைப்பாடு அமைந்த கருக்குகளும் சிற்பங்களும் (நகாசுவேலை) அழகுற அமைந்த தோரண வாயிலைப் போல விளங்கும் கோஷ்டத்தில் யோக தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். பெருமான் ஜடாமண்டலத் துடனும் ஏகருத்திராட்ச மாலையுடனும் இடப்பக்கம் தண்டத்தை ஏந்தி அர்த்த பத்மாசனத்தில் எழுந்தருளியுள்ளார். சின்முத்திரை வேறு விதமாக அமைந்துள்ளது குருநாதருடைய பீடத்தின் கீழ்முனிவர் நால்வரும் அமர்ந் துள்ளனர். பெருமான் எழுந்தருளியுள்ள மாடத்திற்கு மேலே சிவபிரான் ரிஷப வாகனத்துடன் புடைப்புச் சிற்பமாகக் காட்சிதருகின்றார். இது 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த ரீ : சிற்பமாகும்.



## முற்காலச் சோழர்களின்

# தட்சிணாமூர்த்தித் திருவுருவங்கள்

( முதல் பராந்தகன் முதல்- முதல் இராசராசன்வரை )

கி. பி. 907 – 985



இத்திருவுருவம் திருவிடைமருதூரை அடுத்துள்ள திருவியலூர் சிவ யோகநாத சுவாமிகோயில் தேவ கோஷ்டத்தில் உள்ளது. இந்தத் தட்சிணா மூர்த்தி ஜடாபாரம் எழிலுடன் விளங்க புன்னகை பூத்த திருமுகத்துடன் காட்சி தருகின்றார். திருமார்பில் கண்டாபரணமும் மகர கண்டியும் சரப்பள்ளியும் உருத்திராக்க மாலையும் பூணூலும் விளங்குகின்றன. உதர பந்தமும் அணிந்துள்ளார். பின் வலக்கரத்தில் நாகமும் இடக்கரத்தில் தீச்சுடரும் முன்வலக்கரம் சின்முத்திரையும் இடக்கரத்தில் சுவடியும் விளங்குகின்றன. வலப்பாதம் முயலகனை அழுத்திய நிலையிலும் இடப்பாதம் வலத்தொடையின் மீது தூக்கிவைத்த நிலையிலும் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். சில கோயில்களில் அமர்ந்த நிலையிலும் வீணாதரதட்சிணாமூர்த்தி விளங்குகின்றார்



கிராமம் என்று முன்பு அழைக்கப் பட்ட ஊர். அப்பரடிகள் காலத்தில் முண்டீச்சுரம் என வழங்கப்பட்டது. இது சென்னை திருச்சி பெருவழிச் சாலையில் திருக்கோயிலூரை அடுத்த 3 கி. மீ தொலைவில் பெண்ணையாற்றங் கரையில் அமைந்துள்ளது. இப்போது மலட்டார் என்று வழங்கப்படுகிறது. இங்குள்ள சிவலோக நாதர்கோயிலில் இத் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியிருக் கின்றார். இவரது ஜடாமுடி ஜடாபந்தம் போல் விளங்குகின்றது ஜடாபந்தத்தில் கங்காதேவி இருக்கின்றார் இவர் நெற்றிக் கண்ணும் சாந்தம் தவழும் திரு முகமும் கொண்டு யோக நிலையில் ராஜலிங்காசனத்தில் அமர்ந்திருக்கின்றார். மார்பகத்தில் உருத்திராக்க மாலைகளும் பூணூலும் இடையில் உதரபந்தமும் விளங்கு கின்றன. சின் முத்திரை தெளிவாக விளங்கு கின்றது. இத்தகைய சிறப்புடைய சிற்பம் இன்று இடக்கரமும் திருவடியும் ஊன்றி, சிதைந்த நிலையில் உள்ளது.

இத்திருவுருவம் வீணாதர தட்சிணா மூர்த்தியாகும். இது திருச்சிராப்பள்ளிக்குத் தென்மேற்கில் 37 கி. மீ தொலைவில் உள்ள கொடும்பாளூர் எனும் தலத்தில் உள்ளது. இவ்வூர் இருக்குவேளிர் வாழ்ந்த பழம் பெரும் புகழுடையது. ஒரு காலத்தில் இங்கே 108 கோயில்கள் இருந்ததாகக்கூறப் படுகிறது. சிதைந்தனபோக எஞ்சியன இரண்டு. அவற்றுள் ஒன்று மூவர்கோயில், இக்கோயிலின் தேவகோஷ்டத்தில் இந்த வீணாதர தட்சிணாமூர்த்தி காட்சிதருகின்றார். இவரது ஜடாமுடிகள் எல்லாம் சேர்ந்து ஜடாபந்தம் (வேறுவகை) போல அமைந்து விளங்குகின்றது. திருமுகத்தில் புன்னகை தவழ்கின்றது. இருகரங்களிலும் இன்னிசை வீணையை ஏந்தி எழிற் கோலத்தோடு நிற்கின்றார். கைகளில் வீரகடகம் திகழ் கின்றது. இடையில் ஆடை அணிகள் எழி லூட்டுகின்றன. இது 10ஆம் நூற்றாண்டுச் சிற்பம். இரண்டாம் ஆதித்தியன் காலத்த தாகும்.



## எறும்பூர் கடம்பவனேஸ்வரர் கோயில்

# யோக தட்சிணாமூர்த்தி



எறும்பூர் எனும் தலம் தென்னார்க்காடு மாவட்டத்தில் சென்னை கிழக்கே பெரும் பாதையில் சேத்தியாத்தோப்புக்கு அருகில் 5 கி மீ தொலைவில் உள்ளது. ஆங்குள்ள கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலில் தேவகோஷ்டத்தில் சிவபெருமான் யோக நிலையில் (யோக தட்சிணா மூர்த்தி நிலையின் வேறுவகை) பத்ம பீடத்தில், அர்த்த பத்மாசன நிலையில் எழுந்தருளியுள்ளார். தவத்தின் மேன்மையை உணர்த்த தாமே முதன்மை யாக இருந்து இடக்கரத்தின் மேல் வலக்கரத்தினைத் தியான ஹஸ்தமாக வைத்துள்ளார். இவரது திருமார்பில் அணிகலன்களாகத் திகழும் கண்டிகை சரப்பளி (கிரைவேயஹாரம்), அரும்புச்சரம், சுவடி, பூணூல். விரஸ் சூத்தரம், ஸ்தனசூத்திரம் உதர பந்தம், ஆகியன எழிலுடன் விளங்கு கின்றன. புஜங்களில் தோள்வளைகளும், கடகவளைகளும் திகழ்கின்றன. பின் கரங்களில் மானும் மழுவும் பெருமானின் கேசபந்தமான மகுடத்தை நெருங்கி அமைந்துள்ளன. நெற்றியில் நெற்றிப்பட்டையும் பூரிமமும் காது களில் காதோலையும் குழையும் விளங்குகின்றன. யோக நிலைக்குரியோரது பார்வை மூக்கின் நுனியினைப் பார்த்திருப்பது போல இத்திருவுருவப் பார்வையும் அவ்வாறு அமைந்துள்ளது. இது முற்காலச் சோழர்கலையின் சிறப்பான படைப்பேயாகும்.




இத்திருவுருவம் வேளச்சேரி எனும் தலத்தில் உள்ளது. இது செங்கல்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை அருகில் உள்ள அடையாறு பாலத்திலிருந்து 3 கி. மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள தண்டீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் இத் திருவுருவத்தைக் காணலாம் இறைது சிரசில் ஜடாமண்டலம் விளங்குகின்றது. எழில் முகம் சாந்தமாகத் திகழ்கின்றது மார்பில் ஏக உருத்திராக்க மாலையும் பூணூலும் உள்ளன. வலக்கரம் சின்முத்திரை காட்டுகிறது. ஏனைய மூன்று விரல்கள் மடங்கிய நிலையில் உள்ளதனைக் கவனிக்கவும். இடக்கரம் சுவடி ஏந்தியுள்ளது. இடையில் ஆடை சரிந்து விளங்குகின்றது. வலப்பாதத்தைப் பீடத்தில் தூக்கி நிறுத்தி இடப்பாதத்தை முயலகன் மீது அழுந்தி உத்குடிகாசனமாக எழுந்தருளியுள்ளார். வலமும் இடமும் இருமுனிவர்கள் ஜடாமகுடம் விளங்க அமர்ந்துள்ளனர். இதன் காலம் 10 ம் நூற்றாண்டாகும்.




இத்திருவுருவம் ஆடுதுறை (தென் குரங்காடுதுறை) எனும் தலத்தில் உள்ளது. கும்பகோணத்திற்குக் கிழக்கே 14 கி மீ. தொலைவில் உள்ளது இங்குள்ள ஆபத்சகாயேசுர சுவாமிகோயிலின் தெற்குக் கோஷ்டத்தில் இத் தட்சிணாமூர்த்தி திருவுருவம் விளங்குகின்றது. இறைது ஜடாபாரம் இருகட்டுகளுடன் காணப்படுகிறது. சிரசில் பூரிமம் எடுப்பாக அமைந்துள்ளது. பின் இருகரங்களில் தீச்சுடருடனும் ஜபமாலையுடனும் விளங்க முன் இருகரங்களில் சின்முத்திரையுடனும் சுவடியுடனும் திகழப் பெருமான் வீராசனத்தில் அமர்ந்துள்ளார். வலப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. திருமார்பில் பூணூலும், இடையில் உதரபந்தமும் விளங்குகின்றன. காலம் பத்தாம் நூற்றாண்டு ஆகும். இத் தென் குரங்காடுதுறை மகாதேவர் கோயில் செம்பியன் மாதேவியால் திருப்பணி செய்யப்பட்டது.



இத் திருவுருவம் திருவாவடு துறைக்குக் கிழக்கே 3. கி. மீ. தொலைவில் உள்ள ஆனுங்கூர் எனும் கிராமத்தில் உள்ளது. இங்குள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் தட்சிணு மூர்த்திப் பெருமான் விளங்குகின்ருர். சாந்தம் தவழும் திருமுகம். ஜடாபாரத் துடன் விளங்கும் இவரது மார்பில் கண்டிகை, சரப்பள்ளி ஒற்றை உருத்தி ராக்கம், உதரபந்தம், பூணூல் முதலியன விளங்குகின்றன. முன் வலக்கரம் சின் முத்திரையுடன் திகழ்கின்றது. இடது கரம் சுவடியுடன் மாலேயும் காணப்படு கிறது. (இதனை உருத்திராக்க மாலேயாகவும் கருதலாம்) இவர் வீராசனத்தில் எழுந் தருளியிருக்கின்ருர். இரு மருங்கிலும் முனிவர்கள் விளங்குகின்றனர். இத் திருக் கோயிலின் காலம் 10-ஆம் நூற்ருண்டு உத்தம சோழர் காலத்திலும், செம்பியன் மாதேவி காலத்திலும் திருப்பணி செய்ய பட்டதாகக் கல்வெட்டுகள் மூலம் தெரியவருகின்றது.

திருமணஞ்சேரி எனும் தலம் மயிலாடு துறையிலிருந்து 21. கி. மீ. தொலைவிலும் குத்தாலத்திலிருந்து 5. கி. மீ. தொலைவிலும் உள்ளது. இங்குள்ள அருள்வள்ளல் நாயகர் கோயில் தேவ கோஷ்டத்தில் இத்திருவுரு அமைந்துள்ளது. அழகுத் திருமுகமும் ஜடாபாரத்தோடு பூரிமமும் விளங்க புன்னகை தவழ்கிறது. மார்பில் சரப்பளியும் பூணூலும் அழகு செய்கின்றன. முன் இரு கரங்களிலும், சின்முத்திரையும், சுவடியும், ஏந்தியுள்ளார். இச் சிற்பம் உத்தம சோழன் காலத்தது ஆகும். முயலகன் பூமியை நோக்கியவாறு உள்ளான்.





திருவேள்விக்குடி எனும் இத்தலம் குத்தாலம் இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 5 கி. மீ தொலைவில் உள்ளது. இத்தலத்தில் கல்யாண சுந்தரர் கோயிலில் விளங்கும் தட்சிணாமூர்த்திப் பெருமானின் ஜடாபாரம் சுருள் சுருளாக அமைந்துள்ளது. இவரது திருமுகம் கீழ் நோக்கிய பார்வையும் சாந்தமும் கொண்டு திகழ்கிறது. உருத்திராக்கமாலையும் மழுவும் பின் கரங்களில் விளங்க, முன் வலக்கரம் சின் முத்திரை காட்டியும், இடக்கரம் சுவடி ஏந்தியும் உள்ளன. மார்பில் கண்டிகை சரப்பளி, அரும்புச்சரம் சுவடி ஆகியவை அணிசெய்கின்றன. பூணூல் பிரம்ம முடிச்சுடன் காணப்படுகின்றது. உதரபந்தமும் கட்டப்பட்டுள்ளது. சதரபீடத்தில் வீராசனமாக எழுந்தருளியுள்ளார். இது உத்தம சோழன் காலத்துச் சிற்பமாகும்.



இத்திருவுருவம் திருவாரூர் தியாகராஜர் திருக்கோயிலினுள் தனிக்கோயிலாக விளங்கும் அசலேஸ்வரம் திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் விளங்குகின்றது. இப்பெருமானது சிரசில் ஜடாபாரம் விளங்க, மார்பில் அணிகலன்கள் அணிசெய்ய அபயகரத்துடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். பாதத்தருகில் நாகம் காணப்படுகின்றது. இதுவும் 10 ஆம் நூற்றாண்டுச் சிற்பமாகும்.



இத்திருவுருவம் மேல்பாதி எனும் ஊரில் விளங்கும் சோளீஸ்வரர் கோயிலில் காணப்படுகிறது. இது சித்தூருக்குத் தென்மேற்கில் 26 கி. மீ தொலைவில் நீவா நதிக்கரையில் அமைந்துள்ளது. இங்குள்ள சிவாலயம் அரிஞ்சிகையீஸ்வரம் அல்லது சோளீஸ்வரர் என்று முற்காலத்தில் வழங்கப்பட்டது. இப்போது சோமநாதேஸ்வரர் கோயில் என அழைக்கப் படுகின்றது, இக்கோயிலின் தேவ கோஷ்டத்தில் ரிஷபாரூட வீணாதர தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் அமைந்துள்ளது. சிரசில் ஜடாமகுடமும் பூரிமமும் விளங்குகின்றன. மார்பில் முப்புரிநூலும் வயிற்றில் உதரபந்தமும் திகழ்கின்றன. அமர்ந்திருக்கும் நந்தியின்மீது உத்குடிகாசனத்தில். எழுந்தருளியுள்ளார். இது இங்கு சிறப்புடையதாகும். முன் கரங்கள் இரண்டும் வீணையை ஏந்தி இசைக்கும் பான்மையில் அமைந்துள்ளது. இச்சிற்பம் முதற் பராந்தகசோழன் காலத்தது ஆகும்.

திருச்சி – லால்குடிப் பெருவழிச் சாலையில் திருவாசிக்கருகில் கொள்ளிட நதிக்கரையில் 13. கி. மீ. தொலைவில் துறையூர் எனும் தலம் உள்ளது. இங்கே மூலத்தானத்துப் பரமேஸ்வரர் கோயில் என வழங்கும் விஷமங்களேஸ்வரர் கோயிலின் தேவகோஷ்டத்தில் இத்திருவுருவம் காணப் படுகிறது. இந்த வீணாதர தட்சிணாமூர்த்தி எழில்மிகு தோற்றத்துடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறார் ஜடாபாரம் உச்சிக் கொண்டையுடன் சிரஸ்திரகம் போல் காணப்படுகிறது. இரு கரங்களிலும் வீணையை ஏந்திய விரல்களால் மீட்டும் தோற்றத்தில் காணப்படுகின்றார். இதுவும் முதலாம் ஆதித்திய சோழன் காலத்ததாகும்.



## புஞ்சை

# தட்சிணாமூர்த்தி

மயிலாடுதுறைக்குக் கிழக்கில் 10 கி. மீ. தொலைவில் அமைந்துள்ள புஞ்சை எனும் தலத்தில் நற்றுணை ஈஸ்வரத்தில் தெற்குக் கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். முகமண்டலம் ஜடாபாரத்தால் எழிலுடன் விளங்குகின்றது. மார்பில் ஆபரணங்களும் பூணூலும் விளங்க வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். வலப்பாதத்தின் அருகில் நாகமானது தெளிவாகக் காணப்படுகிறது. இரண்டாம் ஆதித்திய சோழன் காலத்தில் செய்யப்பட்டது (10-ஆம் நூற்றாண்டுச் சிற்பம்) இத்தலம் திருஞான சம்பந்தரின் தாயார் பிறந்த திருநனி பள்ளியாகும்.



## இடைக்காலச் சோழர்களின்

# தட்சிணாமூர்த்தித் திருவுருவங்கள்

( கி. பி. 985 – 1070 )



திருவையாறு யாவரும் அறிந்த சிவத்தலமாகும். இது தஞ்சைக்கு அருகில் 16 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இத் திருத்தலத்தில் அமைந்துள்ள கைலாசநாதர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் கைதேர்ந்த சிற்பியால் உருவக்கப்பட்ட மிகவும் சிறப்புடைய இத் தட்சிணா மூர்த்தியின் திருவுருவம் காணப்படுகிறது. கல்லால மரத்தின் கிளைகளும் இலைகளும் தெளிவாக விளங்குகின்றன. அம் மரத்தின் கிளையில் உருத்திராக்கமாலையும், மற்றொன்றில் விபூதிப்பை போன்றதொன்றும் காணப்படுகின்றன. இதனை அமிர்த கலசம் என்றும் கூறுவர். ஜடாமண்டலம் சுருளாகவும் வட்டமாகவும் அமைந்து பிறைச் சந்திரனுடன் விளங்குகின்றது. நெற்றிக்கு மேல் அமைந்த பூரிமம் சாந்தமான திருமுகத்துக்கு எழிலூட்டுகிறது. எழிற்பார்வை மூக்கின் நுனியை நோக்கியவாறு அமைந்துள்ளது. மார்பில் பல்வகை ஆபரணங் களும் பூணூலும் கைகளில் வீரகடகமும் விளங்குகின்றன. திருவடிக்கு வலப்பக்கம் வராகமும் நாகமும், இடப்பக்கம் படுத்த நிலையில் நந்தியும் மானும் உள்ளன. திருவடி முயலகன் மீது பதிந்துள்ளது. முன் கரங்களும் பாதங்களும் சிதைந்துள்ளன. கைதேர்ந்த சிற்பியின் மெய்சோர்ந்தாலும், மனம் சோராமல் பக்தியோடு செய்தமைத்த சிற்பத்தைப் பொய் சேர்ந்த மனத்துப் புன்மையாளர் சிதைத்ததை எப்படிச் சொல்வது? இது முதலாம் இராசராசன் காலத்துச் சிற்பம் ஆகும்.



இத்திருவுருவம் திருச்செங்காட்டங்குடி எனும் தலத்தில் விளங்குகின்றது. (நன்னிலத்திற்கு தென்கிழக்கில் 8 கி. மீ தொலைவில் உள்ளது) இங்குள்ள உத்தராபதீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் இத்திருவுரு அமைந்துள்ளது. குருநாதர் கல்லால மரநிழலில் நாகம் ஏந்திய முயலகனை மிதித்தவாறு வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். சிரசில் ஜடாபாரமும் பூரிமமும் அழகாக விளங்குகின்றன. காதுகளில் குழையும் தோடும், மார்பில் ஆபரணங்களும் பூணூலும், பின் இருகரங்களில் உருத்திராக்க, மாலையும், தீச்சுடரும் பிரகாசிக்க முன்வலக்கரம் சின்முத்திரை காட்ட, இடக்கரம் சுவடியேந்தக் கீழ் நோக்கிய பார்வையுடன் காட்சி தருகின்றார். இத்திருவுருவம் முதலாம் இராசராசன் காலத்தது ஆகும்.

இந்த யோக தட்சிணாமூர்த்தி திருநெடுங்களத்தில் உள்ள திருநெடுங்களநாதர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் எழுந்தருளியுள்ளார். (திருச்சியை அடுத்துள்ள சோளகம்பட்டி இரயில் நிலயத்திற்கு மேற்கே 5. கி. மீ. தொலைவில் உள்ளது). இக்கோயிலை முதலாம் ஆதித்த சோழனும் பாண்டியர்களும், விஜயநகர வேந்தர்களும் திருப்பணி செய்துள்ளனர் குருநாதர் நீண்ட ஜடாபாரத்துடனும் மார்பிலும் கரங்களிலும் ஆபரணங்கள் திகழ்கின்றன பின்கரங்களில் மானும் மழுவும் விளங்க ராஜலிங்காசனத்தில் காட்சி தருகின்றார். இவர் யோக தட்சிணாமூர்த்தியாக விளங்குவதனால் முதுகுடன் இட முழங்காலை யோக பட்டையால் பிணைத்துள்ளார், இங்கு இடுப்புடன் யோக பட்டை இல்லாதது நோக்கத்தக்கது பாதங்களில் சிலம்புகளை அணிந்துள்ளார். இவர் அமர்ந்துள்ள பீடத்தின் கீழ் மானும், கிளியும் விளங்குகின்றன.





திருவாவடுதுறைக்கு வடக்கே 3. கி. மீ தொலைவில் திருக்கோடிகா எனும் தலம் உள்ளது. இங்குள்ள திருக்கோடீஸ்வரர் கோயிலில் ஐம்பொன்னாலாகிய வீணாதர தட்சிணாமூர்த்தியின் திருவுருவச் சிலை காணப்படுகிறது. (இதனைத் திரிபுராந்தகர் என்றும் சிலர் கூறுவர்) இவரது கேச பந்தமுடி மீது (ஜடாமகுடம்) சந்திரனும் பின்னால் சிரச்சக்கரமும் விளங்குகின்றன. திருமுகத்தில் நெற்றிப் பட்டையும் நெற்றிக் கண்ணும் விளங்க புன்னகையுடன் காட்சி தருகின்றார். மார்பில் பிரம்ம முடிச்சுடன் கூடிய பூணூலும் ஸ்தன சூத்திரமும் உள்ளன. வயிற்றில் உதரபந்தமும் கழுத்தில் கண்டிகையும் சரபளியும், சவடியும் விளங்குகின்றன. இடையில் அரைப் பட்டிகையும், தாரகைச் சும்மையும் அணிந் துள்ளார். பின் வலக்கரத்தில் மழுவும், இடக்கரத்தில் மானும் (மான்சிதைந் துள்ளது) விளங்குகின்றன. முன் இரு கரங்கள் வீணையை மீட்டும் நிலையில் அமைந்துள்ளன. அலர்ந்த பத்ம பீடத்தில் கால்களில் சிலம்பு தவழ நின்ற கோலத் தில் காட்சி தருகின்றார். இது இடைக் காலச்சோழர் காலத்துச் சிற்பமாகும்.

உற்றத்தூர் (உத்தத்தூர்) எனும் தலம் திருச்சி சென்னை பெருவழிச்சாலையில் பாடலூருக்குத் தென் கிழக்கில் 3. கி. மீ தொலைவில் உள்ளது. திருச்சிக்கு 34. கி. மீ. தொலைவிலும் உள்ளது. இங்குள்ள சித்தரத் னேஸ்வரர் கோயில் தேவகோஷ்டத்தில் அமைந்துள்ளது இத்திருவுருவம். கல்லால மரம் அடுக்கடுக்காக மயில் தோகை போல் தோற்ற மளிக்கிறது. சிரசில் ஜடாபாரம் விளங்க மார்பில் அணிகலன்கள் அழகு செய்ய, பின் இருகரங்களும் நாகமும் தீச்சுடரும் ஏந்த. முன் வலக்கரம் சின் முத்திரை காட்ட, இடக்கரம் சுவடி ஏந்த வலப்பாதம் முயலகனை மிதிக்கப் பெருமான் வீராசனத்தில் எழுந்தருளி இருக்கின்றார். பாதத்தருகில் ஜடைக்கட்டுடன் முனிவர் இருவர் அமர்ந்துள்ளனர். இக்கோயில் திருப்பணி முதலாம் ஆதித்தியன் காலத்தில் தொடங்கி இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் முடிவுற்றதாக வரலாறு கூறு கின்றது.





இத் திருவுருவம் திருப்பைஞ்ஞீலி எனும் தலத்தில் உள்ள நீலி வனநாத சுவாமி கோயிலில் விளங்குகின்றது. இப் பெருமான் விரிந்த கல்லால மரநிழலில் ஜடாபாரம் பூரிமத்துடன் விளங்க புன்னகையுடன் காட்சி தருகின்றார். முயலகனை வலப்பாதம் மிதிக்க, வீராசனத்தில் அமர்ந்துள்ளார். வலக்கரத்தில் உருத்திராக்க ஜபமாலையுடன் சின் முத்திரை விளங்குகிறது. பாதத்தருகில் (கீழ்) படுத்த அமர்ந்த நந்தி உள்ளது. பெருமானின் கட்டளையை நிறைவேற்ற ஆயத்தமாக இருப்பது போல இந்நந்தி விளங்குகின்றது. இது முதல் ஆதித்திய சோழன் காலத்துச் சிற்பமாகும்.

திருச்சிக்கு மிக அருகில் விளங்கும் திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் ஆலயத்தில் இப்பெருமான் விளங்குகின்றார். இவரது சிரசில் ஜடாபாரம் சரிந்து தொங்கவும் பூரிமம் விளங்கவும் திருமுகத்தில் சாந்தம் நிலவவும் காட்சி தருகின்றார். திருமார்பினில் அணிகலன்கள் விளங்குகின்றன. பிரம முடிச்சுடன் பூணூல் அணி செய்கிறது. உதரபந்தம் அணிந்துள்ளார். திருவடிகளில் சிலம்பணிந்து வலக்கரம் சின்முத்திரையினைக் காட்ட வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். இக்கோயில் கோச்செங்கணான் காலத்தைச் சார்ந்தது. பின்னர் முதலாம் ஆதித்திய சோழன் திரும்பவும் திருப்பணி செய்தார். எத்தனையோ எழில் சிற்பங்களை இத்திருக்கோயிலில் காணலாம்.



## திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் திருக்கோயில்

## தட்சிணாமூர்த்தி

சென்னைக்கு மிக அருகில் உள்ள திரு வொற்றியூர் ஆதிபுரிஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் காணப்பெறும் தட்சிணாமூர்த்தி திரு வுருவத்தில் சிரசில் கங்காதேவி விளங்குகின்றார். ஜடாமண்டலமும் பூரிமமும் திருமுகத்துக்கு அழகு செய்கின்றன. மார்பில் உருத்திராக்க மாலை கண்டிகை, சரப்பளி, சவடி ஆகியவை விளங்குகின்றன. வலக்கரம் சின் முத்திரையைக் காட்டுகின்றது. இடக்கரம் சுவடியினை ஏந்தியுள்ளது. வலப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. இடப்பாதத்தை வலத்தொடைமீது வைத்து வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். பாதத்தில் சிலம்பும் வீரக்கழலும் அணி செய்கின்றன.



## பிற்காலச் சோழர் காலத்துத்

# தட்சிணாமூர்த்தி சிற்பங்கள்

( கி. பி. 1070 - 1289 )



வடஆர்க்காடு மாவட்டம் செய்யாறு தாலுக்காவில் காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கில் 30 கி. மீ தொலைவில் திருவோத்தூர் எனும் தலம் உள்ளது. இங்குள்ள வேதநாதேஸ்வரர் கோயில் தேவ கோஷ்டத்தில் இத்திருவுருவம் விளங்குகிறது. கல்லாலமரம் அடர்த்தியான இலைகளுடன் கூடிய அரை வட்ட வடிவத்தில் காணப்படுகின்றது. சிரசில்ஜடாமண்டலமும் பூரிமமும் விளங்குகின்றன. மார்பில் அணிகலன்கள் அணிசெய்கின்றன. கரங்களில் நாகமும் தீச்சுடரும் சின்முத்திரையும் சுவடியும் உள்ளன. சின்முத்திரை கரத்தில் உருத்திராக்க மாலை எடுப்பாக உள்ளது பாதத்தில் சிலம்பும், வீரக்கழலும் விளங்க வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். திருவடி அருகில் முனிவர் இருவர் ஜடாபந்தத்துடன் அமர்ந்துள்ளனர். இது பிற்காலச் சோழர்களது காலத்தது ஆகும்.



இத் தட்சிணாமூர்த்தித் திருவுருவம் சித்தலிங்க மடத்தில் வியாக்ர புரீஸ்வரர் கோயிலில்காணப்படுகிறது. இப்பெருமான் சிரசில் ஜடாபாரம் விளங்க மார்பில் ஆபரணங்களும் பூணூலும் அணிந்துள்ளார். வலக்கரம் சின்முத்திரை காட்டுகின்றது. ஆனால் பெருவிரல் அணிவிரல் சிறுவிரல் மூன்றும் மடங்கி வளைந்த நிலையில் உள்ளன. இது சிந்தித்தற்கு உரியது. இடக்கரம் சுவடி ஏந்தியுள்ளது. இடப்பாதத்தை உள்ளே மடக்கி வலப் பாதத்தைத் தொங்க விட்டு சாய்வாக எழுந்தருளியுள்ளார். என்று கொள்ளலாம் இவ்அமைப்பில் இது போன்ற சிற்பம் காண்பது அரிதே ஆகும்.

இத்திருவுருவம் திரிசூலம் எனும் தலத்தில் (பல்லாவரம் இரயில் நிலையத் திலிருந்து 3 கி. மீ. தொலைவில் உள்ளது) விளங்கும் தர்மபுரீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் விளங்குகின்றது. பெருமானுடைய ஜடாமுடி அழகிய சுருள்களுடன் ஜடாமண்டலமாகக் காட்சி தருகின்றது. சர்வ ஆபரணங்களுடன் விளங்க இப் பெருமான் உத்குடி காசனத்தில் எழுந்தருளியுள்ளார். சிலம்புகள் பாதத்திற்கு மேலும் அழகூட்டுகின்றன. தெற்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் இரு முனிவர்கள் சின்முத்திரையுடன் இப் பெருமானின் கீழ் அமர்ந்துள்ளனர். இது 13 — ஆம் நூற்றாண்டுச் சிற்பமாகும்.





மயிலாடுதுறைக்கு வடக்கே 8 கி. மீ தூரத்தில் நீடூர் எனும் தலம் உள்ளது. இத் தலத்தில் விளங்கும் சோமநாதேஸ்வரர் கோயிலில் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் காணப்படுகிறது. பெருமான் கல்லால மரநிழலில் அழகிய வரிவரியான ஜடா மண்டலம் பூரிமத்துடன் விளங்க எழில் முகத்துடன் வீராசனத்தில் எழுந்தருளி யுள்ளார். மார்பில் உருத்திராக்க மாலையுல் ஆபரணங்களும் விளங்குகின்றன. வலக் கரத்தால் சின்முத்திரை காட்டியருளு கின்றார். இது முதற் குலோத்துங்கன் காலத்துச் சிற்பமாகும்.

இலவநாசூர் (கோட்டை) எனும் ஊர் தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக் கோயிலூருக்கு அருகில் உள்ளது. இது இறைவனுரையூர் என்றும் வழங்கப்படும் இங்குள்ள அர்த்தநாரீஸ்வரர் கோயிலில் இத்திருவுருவம் காணப்படுகிறது. அகல மாக விரிந்த ஜடாமண்டலத்துடனும் எடுப்பான பூரிமத்துடனும் புன்னகை பூத்த முகத்துடனும் குருநாதர் காட்சி தருகின்றார். சரிந்த ஆடையும் விரிந்த மார்பில் ஆபரணங்களும் விளங்குகின்றன. வீராசனத்தில் அமர்ந்து காட்சி தருகின்றார். இது உத்மசோழன் காலத்துச் சிற்பம். இத்தலத்தில் மாணிக்கவாசகர் அருளிய திருச்சாழலை ஓதுவார்க்கு விக்கிரம சோழன் (கி. பி 1118 - 1135) நிபந்தம் விட்ட செய்தி கல்வெட்டில் காணப் படுகிறது.





இத்திருவுருவம் மயிலாடுதுறைக்கு மிக அண்மையில் உள்ள பல்லவராயன் பேட்டை சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் விளங்குகின்றது. இப் பெருமானின் ஜடைகள் வட்டமாகவும் சுருள் சுருளாகவும் அமைந்த ஜடாமண்டலத்துடன் எழில் முகம் காண விளங்குகின்றார். சிரசில் கங்கையும் மார்பில் பூணூலும் கண்டாபரணமும் திகழ வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். இவர் தருநந்திதேவர் மீது அமர்ந்திருப்பது போலவும் விளங்கின்றார். வலப் பாதத்தின் கீழ் வராகமும், புலியும், முயலகனும் காணப்படுகின்றன. இது இரண்டாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்த சிற்பம் ஆகும்.

இத் திருவுருவம் திருவெண்ணெய் நல்லூர் (தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது) அருட்டுறை நாயனார் கோயிலின் தேவகோஷ்டத்தில் விளங்குகின்றது. குருநாதர், திருவடியால் முயலகனை மிதித்து வீராசனத்தில் வீற்றிருக்கின்றார். சின்முத்திரை காட்டியருளும் கரம், அணிகலன்கள் திகழும் மார்பு, அழகு ததும்பும் திருமுகம், பூரிமத்துடன் விளங்கும் ஜடாபாரம் தாங்கிய சிரசு ஆகியவற்றுடன் கல்லால மரநிழலில் எழுந்தருளியுள்ளார். இது இரண்டாம் இராசராசன் காலத்துச் சிற்பமாகும்.



# துறையூர் ஸ்ரீ நந்திகேஸ்வரர் திருக்கோயில்

# தட்சிணாமூர்த்தி



துறையூர் — திருச்சி பெருவழிச் சாலையில் நாமக்கல்லுக்கு வடக்கே அமைந்துள்ளது துறையூர். இங்குள்ள நந்திகேஸ்வரர் கோயிலில் இத்திருவுருவச்சிலை காணப்படுகின்றது. பெருமானுடைய ஜடாபாரம் பூரிமத்துடன் விளங்குகின்றது. இலைகள் அடர்ந்த கல்லால மரம் சிறியதாக உள்ளது. மார்பில் ஆபரணங்களும் பூணூலும் நன்றாக விளங்குகின்றன. சின்முத்திரையுடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். முயலகன் ஜடா பாரத்துடனும் ஆபாரணங்களுடனும் காணப்படுகின்றான். குருநாதர் திரு முகத்தில் சாந்தம் நிலவுகின்றது. இது மூன்றாம் இராசராசன் ( கி. பி 1246 — 1280 ) காலத்தைச் சார்ந்த சிற்பமாகும்.

॥ श्रीः ॥

॥ श्रीदक्षिणामूर्त्यष्टकम् ॥

# ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்

विश्वं दर्पणदृश्यमाननगरीतुल्यं निजान्तर्गतं
पश्यन्नात्मनि मायया बहिरिवोद्भूतं यथा निद्रया ।
यः साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ १ ॥

விச்வம் தர்ப்பண த்ருச்யமானநகரீ
துல்யம் நிஜாந்தர்கதம்
பச்யன்னாத்மனி மாயயா பஹிரிவோத்
பூகம் யதா நித்ரயா !
ய: ஸாக்ஷாத்குருதே ப்ரபோதஸமயே
ஸ்வாத்மானமேவாத்வயம்
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 1

बीजस्यान्तरिवांकुरो जगदिदं प्राङ्निर्विकल्पं पुनः
मायाकल्पितदेशकालकलनावैचित्र्यचित्रीकृतम् ।
मायावीव विजृम्भयत्यपि महायोगीव यः स्वेच्छया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ २ ॥

பீஜஸ்யாந்தரிவாங்குரோ ஜகதிதம்
ப்ராங் நிர்விகல்பம் புன :
மாயாகல்பித தேசகாலகலனா
வைசித்ர்ய சித்ரீக்ருதம் !
மாயாவீவ விஜ்ரும்பயத்ய பிமஹா
யோகீவ ய : ஸ்வேச்சயா
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 2

यस्यव स्फुरणं सदात्मकमसत्कल्पार्थगं भासते
साक्षात्तत्त्वमसीति वेदवचसा यो बोधयत्याश्रितान् ।
यत्साक्षात्करणाद्भवेन्न पुनरावृत्तिर्भवाम्भोनिधौ
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ३ ॥

யஸ்யைவ ஸ்புரணம் ஸதாத்மகஸத்
கல்பார்த்தகம் பாஸதே
ஸாக்ஷாத் தத்வமஸீதி வேதவசஸா
யோபோதயத்யாச்ரிதான் !
யத்ஸாக்ஷாத்கரணுத் பவேந்ந புனரா
வ்ருத்திர்பவாம் போநிதௌ
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 3

नानाच्छिद्रघटोदरस्थितमहादीपप्रभाभास्वरं
ज्ञानं यस्य तु चक्षुरादिकरणद्वारा बहि स्पन्दते ।
जानामीति तमेव भान्तमनुभात्येतत्समस्तं जग-
त्तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ४ ॥

நாநாச்சித்ர கடோதரஸ்தித மஹா
தீபப்ரபா பாஸ்வரம்
ஞானம் யஸ்யது சக்ஷுராதி கரண
த்வாரா பஹி : ஸ்பந்ததே !
ஜாநாமீதி தமேவ பாந்த மனுபாதி
ஏதத் ஸமஸ்தம் ஜகத்
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 4

देहं प्राणमपीन्द्रियाण्यपि चलां बुद्धिं च शून्यं विदुः
स्त्रीबालान्धजडोपमास्त्वहमिति भ्रान्ता भृशं वादिनः ।
मायाशक्तिविलासकल्पितमहाव्यामोहसंहारिणे
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ५ ॥

தேஹம் ப்ராணமபீந்த்ரியாண்யபி சலாம்
புத்திம் சசூன்யம் விது :
ஸ்த்ரிபாலாந்த ஜடோபமாஸ்த்வஹமிதி
ப்ராந்தா ப்ருசம்வாதின :
மாயா சக்தி விலாஸ கல்பிதமஹா
வ்யாமோஹ ஸம்ஹாரிணே
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 5

राहुग्रस्तदिवाकरेन्दुसदृशो मायासमाच्छादना-
त्सन्मात्रः करणोपसंहरणतो योऽभूत्सुषुप्तः पुमान् ।
प्रागस्वाप्समिति प्रबोधसमये यः प्रत्यभिज्ञायते
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ६ ॥

ரா்ஹுக்ரஸ்த திவாகரேந்து ஸத்ருசோ
மாயாஸமாச்சாதனாத்
ஸன்மாத்ர : கரணோபஸம்ஹரணதோ
யோ பூத்ஸுஷுப்த : புமான்
ப்ராகஸ் வாப்ஸமிதி ப்ரபோதஸமயே
ய : ப்ரத்யபிஜ்ஞாயதே
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 6

बाल्यादिष्वपि जाग्रदादिषु तथा सर्वास्ववस्थास्वपि
व्यावृत्तास्वनुवर्तमानमहमित्यन्तः स्फुरन्तं सदा ।
स्वात्मानं प्रकटीकरोति भजतां यो मुद्रया भद्रया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ७ ॥

பால்யாதிஷ்வபி ஜாக்ரதாதி ஷுத்தா
ஸர்வாஸ்வவஸ்தாஸ்வபி
வ்யாவ்ருத்தாஸ்வனுவர்த்தமானமஹ
மித்யந்த : ஸ்புரந்தம் ஸதா !
ஸ்வாத்மானம் ப்ரகடீகரோதி பஜதாம்
யோமுத்ரயா பத்ரயா
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 7

विश्वं पश्यति कार्यकारणतया स्वस्वामिसंबन्धतः
शिष्याचार्यतया तथैव पितृपुत्राद्यात्मना भेदतः ।
स्वप्ने जाग्रति वा य एष पुरुषो मायापरिभ्रामित-
स्तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ८ ॥

விச்வம் பச்யதி கார்யகாரணதயா
ஸ்வஸ்வாமி ஸம்பந்தத :
சிஷ்யார்யதயா ததைவ பித்ரு
புத்ராத்யாத்மனா பேதத :

ஸ்வப்னே ஜாக்ரதிவாய ஏஷபுருஷோ
மாயாபரிப்ராமித :
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 8

भूरंभांस्यनलोऽनिलोऽम्बरमहर्नाथो हिमांशुः पुमा-
नित्याभाति चराचरात्मकमिदं यस्यैव मूर्त्यष्टकम् ।
नान्यत्किञ्चन विद्यते विमृशतां यस्मात्परस्माद्विभो-
स्तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ९ ॥

பூரம்பாம்ஸ்யநலோ நிலோம்பர
மஹர்நாதோ ஹிமாம்ஸு : புமான்
இத்யாபாதி சராசராத்மகமிதம்
யஸ்யைவ மூர்த்யஷ்டகம் !
நான்யத் கிஞ்சன வித்யதே விம்ருசதாம்
யஸ்மாத் பரஸ்மாத் விபோ :
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே !! 9

सर्वात्मत्वमिति स्फुटीकृतमिदं यस्मादमुष्मिंस्तवे
तेनास्य श्रवणात्तदर्थमननाद्ध्यानाच्च संकीर्तनात् ।
सर्वात्मत्वमहाविभूतिसहितं स्यादीश्वरत्वं स्वतः
सिध्येत्तत्पुनरष्टधा परिणतं चैश्वर्यमव्याहतम् ॥ १० ॥

ஸர்வாத்மத்வமிதி ஸ்புடீக்ருதமிதம்
யஸ்மாதமுஷ்மிம்ஸ்தவே
தேனாஸ்ய ச்ரவணாத் ததர்த்தமனனாத்
த்யானாச்ச ஸங்கீர்த்தனாத் !
ஸர்வாத்மத்வ மஹாவிபூதி ஸஹிதம்
ஸ்யாதீச்வரத்வம் ஸ்வத;
ஸித்த்யேத் தத் புனரஷ்டதா பரிணதம்
சைச்வர்யமவ்யாஹதம் !! 10

श्रीदक्षिणामूर्त्यष्टकम् संपूर्णम् ॥

௨

॥ श्री दक्षिणामूर्ति वर्णमाला स्तोत्रम् ॥

# ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்ரம்

ॐ मित्येतद्यस्य बुधैर्नाम गृहीतं
यद्भासेदं भाति समस्तं वियदादि ।
यस्याज्ञातः स्वस्वपदस्था विधिमुख्या-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १ ॥

ஓமித்யேதத்யஸ்ய புதைர்நாம க்ருஹீதம்
யத்பாஸேதம் பாதி ஸமஸ்தம் வியதாதி !
யஸ்யாக் ஞாத : ஸ்வஸ்வபதஸ்தா விதிமுக்யா :
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி !! 1

नम्राङ्गाणां भक्तिमतो यः पुरुषार्था-
न्दत्वा क्षिप्रं हन्ति च तत्सर्वविपत्तीः ।
पादाम्भोजाधस्तनितापस्मृतिमीशं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २ ॥

நம்ராங்காணும் பக்திமதாம் ய : புருஷாரத்தான்
தத்வா க்ஷிப்ரம் ஹந்தி ச தத்ஸர்வ விபத்தீ : !
பாதாம்போ ஜதாஸ்தனிதாபஸ் ம்ருதிமீசம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி !! 2

मोहध्वस्त्यै वैणिकवैयासिकि मुख्याः
संविन्मुद्रापुस्तकवीणाक्षगुणान्यम् ।
हस्ताम्भोजैर्बिभ्रतमाराधितवन्त-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ३ ॥

மோஹத்வஸ்த்கிய வைணிக வையாஸிகிமுக்யா:
ஸம்வின்முத்ரா புஸ்தக வீணாக்ஷகுண்யம் !
ஹஸ்தாம் போஜைர் பிப்ரதமாராதிதவந்த :
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி !! 3

भद्रारूढं भद्रदमाराधयितृणां
भक्तिश्रद्धापूर्वकमीशं प्रणमन्ति ।
आदित्या यं वाञ्छितसिद्ध्यै करुणाब्धिं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ४ ॥

பத்ராருடம் பத்ரதமாராதயித்ருணும்
பக்திச்ரத்தா பூர்வகமீசம் ப்ரணமந்தி !
ஆதித்யா யம் வாஞ்சித ஸித்த்யை கருணுப்திம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி !! 4

गर्भान्तःस्थाः प्राणिन एते भवपाश-
च्छेदे दक्षं निश्चितवन्तः शरणं यम् ।
आराध्यांघ्रिप्रस्फुरदम्भोरुहयुग्मं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्र कलयामि ॥ ५ ॥

கர்ப்பாந்த : ஸ்தா : ப்ராணின ஏதே பவபாசச்
சேதே தக்ஷம் நிச்சிதவந்த : சரணம்யம் !
ஆராத்யாங்க்ரி ப்ரஸ்புரதம்போருஹ யுக்மம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி !! 5

वक्त्रं धन्याः संसृतिवार्धेरतिमात्रा-
द्भीताः सन्तः पूर्णशशाङ्कद्युति यस्य ।
सेवन्तेऽध्यासीनमनन्तं वटमूलं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ६ ॥

வக்த்ரம் தன்யா : ஸம்ஸ்ருதி வார்த்தேரதிமாத்ராத்
பீதா : ஸந்த ; பூர்ணசசாங்கத்யுதி யஸ்ய !
ஸேவந்தேபித்யாஸீ நமனந்தம் வடவடமூலம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி !! 6

तेजःस्तोमैरङ्गदसंघट्टितभास्व-
न्माणिक्योत्थैर्भासितविश्वो रुचिरैर्यः ।
तेजोमूर्तिं खानिलतेजःप्रमुखाब्धिं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ७ ॥

தேஜ : ஸ்தோமைரங்கத ஸங்கட்டித பாஸ்வன்
மாணிக்யோத்தைர் பாஸித விச்வோருசிரைர்ய : !
தேஜோமூர்த்திம் காநிலதேஜ : ப்ரமுகாப்திம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி !! 7

दध्याज्यादिद्रव्यककर्माण्यखिलानि
त्यक्त्वा काङ्क्षां कर्मफलेष्वत्र करोति ।
यज्जिज्ञासां रूपफलार्थी क्षितिदेव-
स्तं प्रत्यञ्च दक्षिणवक्त्रं कलयामि ॥ ८ ॥

தத்யாஜ்யாதி த்ரவ்யககர்மான்யகிலானி
த்யக்த்வா காங்சஷாம் கர்மபலேஷ்வத்ரகரோதி ।
யஜ்ஜிக்ஞாஸாம் ருபபலார்த்தீ க்ஷிதிதேவ :
தம் ப்ரத்யஞ்சம்ப தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 8

क्षिप्रं लोके यं भजमानः पृथुपुण्यः
प्रध्वस्ताधिः प्रोज्झितसंसृत्यखिलार्तिः ।
प्रत्यग्भूतं ब्रह्म परं सन्रमते य-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ९ ॥

க்ஷிப்ரம் லோகே யம் பஜமான : ப்ருதுபுண்ய :
ப்ரத்வஸ்தாதி: ப்ரோஜ்ஜி தஸம்ஸ்ருத்யகிலார்த்தி:।
ப்ரத்யக்பூதம் ப்ரஹ்மபரம் ஸன்ரமதே ய :
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 9

णानेत्येवं यन्मनुमध्यस्थितवर्णा-
न्भक्ताः काले वर्णगृहीत्यै प्रजपन्तः ।
मोदन्ते संप्राप्तसमस्तश्रुतितन्त्रा-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १० ॥

ணதேத்யேவம் யன்மனுமத்யஸ்தித வர்ணான்
பக்தா : காலே வர்ணக்ருஹீத்யை ப்ரஜபந்த : ।
மோதந்தே ஸம்ப்ராப்த ஸமஸ்தச்ருதி தந்த்ரா :
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ாம் கலயாமி ॥ 10

मूर्तिश्छायानिर्जितमन्दाकिनिकुन्द-
प्रालेयाम्भोराशिसुधामूतिसुरेभा ।
यस्याभ्राभा हासविधौ दक्षशिरोधि-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ११ ॥

மூர்த்திச்சாயாநிர்ஜித மந்தாகினிகுந்த
ப்ராலேயாம் போராசி ஸுதாபூதி ஸுரேபா ।
யஸ்யாப்ராபா ஹாஸவிதௌ தக்ஷசிரோதி:
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிண்வக்த்ரம் கலயாமி ॥ 11

तप्तस्वर्णच्छायजटाजूटकटाह-
प्रोद्यद्वीचीवल्लिविराजत्सुरसिन्धुम् ।
नित्यं सूक्ष्मं नित्यनिरस्ताखिलदोषं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १२ ॥

தப்தஸ்வர்ணச்சாய ஜடாஜூட கடாஹ
ப்ரோத்யத்வீசிவல்லி விராஜத்ஸுரஸிந்தும் I
நித்யம் ஸூக்ஷ்மம் நித்ய நிரஸ்தாகிலதோஷம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி II 12

येन ज्ञातेनैव समस्तं विदितं स्या-
द्यस्मादन्यद्वस्तु जगत्यां शशशृङ्गम् ।
यं प्राप्तानां नास्ति परं प्राप्यमनादिं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १३ ॥

யேன க்ஞாதேனைவ ஸமஸ்தம் விதிதம் ஸ்யாத்
யஸ்மாதன்யத்வஸ்து ஜகத்யாம் சசச்ருங்கம் I
யம்ப்ராப்தானாம் நாஸ்திபரம் ப்ராப்யமனாதிம்
தம்ப்ரத்ஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி II 13

मत्तो मारो यस्य ललाटाक्षिभवाग्नि-
स्फूर्जत्कीलप्रोषितभस्मीकृतदेहः ।
तद्भस्मासीद्यस्य सुजातः पटवास-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १४ ॥

மத்தோ மாரோ யஸ்ய லலாடாக்ஷிபவாக்னி
ஸ்பூர்ஜத்கில ப்ரோஷித பஸ்மீக்ருத தேஹ: I
தத்பஸ்மாஸித்யஸ்ய ஸுஜாத படவாஸ
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி II 14

अम्भोराशौ संसृतिरूपे लुठतां त-
त्पारं गन्तुं यत्पदभक्तिर्दृढनौका ।
सर्वाराध्यं सर्वगमानन्दपयोधिं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १५ ॥

ஹ்யம்போராசௌஸம் ஸ்ம்ருதிருபே லுடதாம்தத்
பாரம் கந்தும் யதிபத பக்திர்த்ருட னௌகா I
ஸர்வாராத்யம் ஸர்கவமானந்த பயோநிதிம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி II 15

मेधावी ज्ञादिन्दुवतंसं धृतवीणं
कर्पूराभं पुस्तकहस्तं कमलाक्षम् ।
चित्ते ध्यायन्यस्य वपुर्द्राङ्निमिषार्धं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १६ ॥

மேதாவீ ஸ்யாதிந்துவதம் ஸம் த்ருதவீணம்
கர்ப்பூராபம் புஸ்தக ஹஸ்தம் கமலாக்ஷம் ।
சித்தே த்யாயன்யஸ்ய வபுர்த்ராங்னி மிஷார்த்தம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 16

धाम्नां धाम प्रौढरुचीनां परमं य-
त्सूर्यादीनां यस्य स हेतुर्जगदादेः ।
एतावान्यो यस्य न सर्वेश्वरमीड्यं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १७ ॥

தாம்நாம்தாம ப்ரௌடருசீனாம் பரமம்யத்
ஸூர்யாதீநாம் யஸ்ய ஸஹேதுர்ஜகதாதே: ।
ஏதாவான்யோ யஸ்யந ஸர்வேச்வரமீட்யம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 17

प्रत्याहारप्राणनिरोधादिसमर्थै-
र्भक्तैर्दान्तैः संयतचित्तैर्यतमानैः ।
स्वात्मत्वेन ज्ञायत एव त्वरया य-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १८ ॥

ப்ரத்யாஹார ப்ராண நிரோதாதி ஸமர்த்தை:
பக்தைர்தாந்தை: ஸம்யத சித்தைர்யதமானை:
ஸ்வாத்மத்வேன க்ஞாயத ஏவத்வரயா ய:
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 18

ज्ञांशीभूतान्प्राणिन एतान्फलदाता
चित्तान्तस्थः प्रेरयति स्वे सकलेऽपि ।
कृत्ये देवः प्राक्तनकर्मानुसरः सं-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १९ ॥

க்ஞாம்சீபூதான் ப்ராணின ஏதான்பலதாதா
சித்தாந்தஸ்த: ப்ரேரயதிஸ்வே ஸகலேபி ।
க்ருத்யே தேவ ப்ராக்தன கர்மானுஸர: ஸந்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 19

प्रज्ञामात्रं प्रापितसंविन्निजभक्तं
प्राणाक्षादेः प्रेरयितारं प्रणवार्थम् ।
प्राहुः प्राज्ञा यं विदितानुश्रवतत्त्वा-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २० ॥

ப்ரக்ஞாமாத்ரம் ப்ராபித ஸம்வின்னிஜபக்தம்
ப்ராணக்ஷாதே: ப்ரேரயிதாரம் ப்ரணவார்த்தம் ।
ப்ராஹு: ப்ராக்ஞாயம் விதிதானுச்ரவதத்தவா :
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 20

यस्याज्ञानादेव नृणां संसृतिबोधो
यस्य ज्ञानादेव विमोक्षो भवतीति ।
स्पष्टं ब्रूते वेदशिरो देशिकमाद्यं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २१ ॥

யஸ்யாக்ஞானதேவ ந்ருணாம் ஸம்ஸ்ருதிபோதோ
யஸ்ய க்ஞானதேவ விமோக்ஷா பவதீதி ।
ஸ்பஷ்டம் ப்ரூதே வேதசிரோ தேசிகமாத்யம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி 21

छन्नेऽविद्यारूपपटेनैव च विश्वं
यत्राध्यस्तं जीवपरेशत्वमपीदम् ।
भानोर्भानुष्वम्बुवदस्ताखिलभेदं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २२ ॥

சன்னேவித்யாருப படேனைவ சவிச்வம்
யத்ராத்யஸ்தம் ஜீவபரேசத்வ மபீதம் ।
பானோர் பானோர் பானுஷ்வம்பு வதஸ்தாகில பேதம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 22

स्वापस्वप्नौ जाग्रदवस्थापि न यत्र
प्राणश्चेतः सर्वगतो यः सकलात्मा ।
कूटस्थो यः केवलसच्चित्सुखरूप-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २३ ॥

ஸ்வாபஸ்வப்னௌ ஜாக்ரதவஸ்தாபி நயத்ர
ப்ராணச்சேத: ஸர்வகதோய: ஸகலாத்மா ।
கூடஸ்தோய: கேவல ஸச்சித் ஸுகரூப:
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 23

हा हेत्येवं विस्मयमीयुर्मुनिमुख्या
ज्ञाते यस्मिन्स्वात्मतयानात्मविमोहः ।
प्रत्यग्भूते ब्रह्मणि यातः कथमित्थं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २४ ॥

ஹாஹேத்யேவம் விஸ்மயமீயுர்முனிமுக்யா
க்ஞாதேயஸ்மின் ஸ்வாத்மதயானாத்ம விமோஹ
ப்ரத்யக்பூதே ப்ரஹ்மணியாத: கதமித்தம்
தம்ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ll 24

यैषा रम्यैर्मत्तमयूराभिधवृत्तै-
रादौ क्लृप्ता यन्मनुवर्णैर्मुनिभङ्गी ।
तामेवैतां दक्षिणवक्त्रः कृपयासा-
वूरीकुर्याद्देशिकसम्राट् परमात्मा ॥ २५ ॥

யைஷாரம்யைர் மத்தமயூராபித வ்ருத்தை:
ஆதௌ க்லுப்தா யன்மனுவர்ணைர் முனிபங்கீ l
தாமேவைதாம் தக்ஷிணவக்த்ர : கருபயாஸௌ
ஊரிகுர்யாத் தேசிக ஸம்ராட் பரமாத்மா ll 25

श्रीदक्षिणामूर्तिवर्णमालास्तोत्रं संपूर्णम् ॥

என்ற 24 எழுத்துக்கள் கொண்ட மேதா தக்ஷிணாமூர்த்தி மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு ச்லோகமாக ஆதிசங்கரர் பாடிய தக்ஷிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்ரம் முற்றும்.

உ
சிவமயம்

॥ श्री दक्षिणामूर्तिस्तोत्रम् ॥

# ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

उपासकानां यदुपासनीय-
मुपात्तवासं वटशाखिमूले ।
तद्धाम दाक्षिण्यजुषा स्वमूर्त्या
जागर्तु चित्ते मम बोधरूपम् ॥ १ ॥

உபாஸகானும் யதுபாஸநீய
முபாத்தவாஸம் வடசாகிமூலே ।
தத்தாம தர்க்ஷிண்ய ஜுஷா ஸ்வமூர்த்யா
ஜாகர்து சித்தே மம போதரூபம் ॥ 1

अद्राक्षमक्षीणदयानिधान-
माचार्यमाद्यं वटमूलभागे ।
मौनेन मन्दस्मितभूषितेन
महर्षिलोकस्य तमो नुदन्तम् ॥ २ ॥

அத்ராக்ஷமக்ஷீண தயாநிதான
மாசார்யமாத்யம் வடமூலபாகே ।
மௌனேன மந்தஸ்மித பூஷிதனே
மஹர்ஷி லோகஸ்ய தமோ நுதந்தம் ॥ 2

विद्रावितोशेषतमोगणेन
मुद्राविशेषेण मुहुर्मुनीनाम् ।
निरस्य मायां दयया विधत्ते
देवो महांस्तत्त्वमसीति बोधम् ॥ ३ ॥

வித்ராவிதா சேஷதமோ கணேந
முத்ராவிசேஷேண முஹுர்முனீனும் ।
நிரஸ்ய மாயாம் தயயா விதத்தே
தேவோ மஹாம்ஸ் தத்வமஸீதி போதம் ॥ 3

अपारकारुण्यसुधातरङ्गै-
रपाङ्गपातैरवलोकयन्तम् ।
कठोरसंसारनिदाघतप्ता-
न्मुनीनहं नौमि गुरुं गुरूणाम् ॥ ४ ॥

அபாரகாருண்ய ஸுதாதரங்கை
ரபாங்க பாதை ரவலோகயந்தம் ।
கடோர ஸம்ஸார நிதாக தப்தான்
முநீநஹம் நௌமி குரும் குரூணாம் ॥ 4

ममाद्यदेवो वटमूलवासी
कृपाविशेषात्कृतसंनिधानः ।
ओंकाररूपामुपदिश्य विद्या-
माविद्यकध्वान्तमपाकरोतु ॥ ५ ॥

மமாத்ய தேவோ வடமூலவாஸீ
க்ருபா விசேஷாத்க்ருத ஸன்னிதான : ।
ஓம்காரரூபா முபதிச்ய வித்யா
மாவித்யகத்வாந்த மபாகரோது ॥ 5

कलाभिरिन्दोरिव कल्पिताङ्गं
मुक्ताकलापैरिव बद्धमूर्तिम् ।
आलोकये देशिकमप्रमेय-
मनाद्यविद्यातिमिरप्रभातम् ॥ ६ ॥

கலாபிரிந்தோரிவ கல்பிதாங்கம்
முக்தாகலாபைரிவ பத்தமூர்த்திம் ।
ஆலோகயே தேசிக மப்ரமேய
மநாத்ய வித்யா திமிரப்ரபாதம் ॥ 6

स्ववक्षजानुस्थितवामपादं
पादोदरालंकृतयोगपट्टम् ।
अपस्मृतेराहितपादमङ्गे
प्रणौमि देवं प्रणिधानवन्तम् ॥ ७ ॥

ஸ்வதக்ஷஜா னுஸ்தித வாமபாதம்
பாதோதராலங்க்ருத யோகபட்டம் ।
அபஸ்ம்ருதே ராஹித பாதமங்கே
ப்ரணௌமி தேவம் ப்ரணிதாநவந்தம் ॥ 7

तत्त्वार्थमन्तेवसतामृषीणां
युवाऽपि यः सन्नुपदेष्टुमीष्टे ।
प्रणौमि तं प्राक्तनपुण्यजालै-
राचार्यमाश्चर्यगुणाधिवासम् ॥ ८ ॥

தத்வார்த்த மந்தே வஸதாம்ருஷீணும்
யுவா஽பி ய: ஸந்நுபதேஷ்டுமீஷ்டே ।
ப்ரணௌமிதம் ப்ராக்தனபுண்யஜாலை
ராசார்ய மாச்சர்ய குணுதிவாஸம் ॥ 8

एकेन मुद्रां परशुं करेण
करेण चान्येन मृगं दधानः ।
स्वजानुविन्यस्तकरः पुरस्ता-
दाचार्यचूडामणिराविरस्तु ॥ ९ ॥

ஏகேந முத்ராம் பரசும் கரேண
கரேண சாந்யேன ம்ருகம் ததான : ।
ஸ்வஜானு வின்யஸ்தகர : புரஸ்தா
தாசார்ய சூடாமணி ராவிரஸ்து ॥ 9

आलेपवन्तं मदनाङ्गभूत्या
शार्दूलकृत्या परिधानवन्तम् ।
आलोकये कंचन देशिकेन्द्र-
मज्ञानवाराकरवाडवाग्निम् ॥ १० ॥

ஆலேபவந்தம் மதனங்க பூத்யா
சார்தூல க்ருத்யா பரிதானவந்தம் ।
ஆலோகயே கஞ்சன தேசிகேந்த்ர
மக்ஞான வாராகர பாடபாக்னிம் ॥ 10

चारुस्मितं सोमकलावतंसं
वीणाधरं व्यक्तजटाकलापम् ।
उपासते केचन योगिनस्त्वा-
मुपात्तनादानुभवप्रमोदम् ॥ ११ ॥

சாருஸ்மிதம் ஸோமகலாவதம்ஸம்
வீணுதரம் வ்யக்தஜடாகலாபம் ।
உபாஸதே கேசன யோகினஸ்த்வா
முபாத்த நாதானு பவப்ரமோதம் ॥ 11

उपासते यं मुनयः शुकाद्या
निराशिषो निर्ममताधिवासाः ।
तं दक्षिणामूर्तितनुं महेश-
मुपास्महे मोहमहार्तिशान्त्यै ॥ १२ ॥

உபாஸதே யம்முநய: சுகாத்யா
நிராசிஷோ நிர்மமதாதிவாஸா : I
தம்தக்ஷிணாமூர்த்தி தனும்மஹேச
முபாஸ்மஹே மோஹ மஹார்த்தி சாந்த்யை 12

कान्त्या निन्दितकुन्दकंदलवपुर्न्यग्रोधमूले वस-
न्कारुण्यामृतवारिभिर्मुनिजनं संभावयन्वीक्षितैः ।
मोहध्वान्तविभेदनं विरचयन्बोधेन तत्तादृशा
देवस्तत्त्वमसीति बोधयतु मां मुद्रावता पाणिना ॥ १३ ॥

காந்த்யா நிந்திதகுந்த கந்தலவபுர்
ந்யக்ரோதமூலே வஸன்
காருண்யாம்ருத வாரிபிர் முனிஜனம்
ஸம்பாவயன் வீக்ஷிதை : I
மோஹத்வாந்த விபேதனம் விரசயன்
போதேன தத்தாத்ருசா
தேவஸ்தத்வமஸீதி போதயது மாம்
முத்ராவதா பாணிநா II 13

अगौरगात्रैरललाटनेत्रै-
रशान्तवेषैरभुजंगभूषैः ।
अबोधमुद्रैरनपास्तनिद्रै-
रपूर्णकामैरमरैरलं नः ॥ १४ ॥

அகௌர காத்ரைரலலாட நேத்ரை
ரசாந்தவேஷைர புஜங்க பூஷை : I
அபோத முத்ரை ரநபாஸ்த நித்ரை
ரபூர்ணகாமை ரமரைரலம் ந : II 14

दैवतानि कति सन्ति चावनौ
नैव तानि मनसो मतानि मे ।
दीक्षितं जडधियामनुग्रहे
दक्षिणाभिमुखमेव दैवतम् ॥ १५ ॥

தைவதானி கதிஸந்தி சாவனௌ
நைவ நாதி மநஸோ மதானிமே ।
தீக்ஷிதம் ஜடதியா மனுக்ரஹே
தக்ஷிணாபிமுகமேவ தைவதம் ॥ 15

मुदिताय मुग्धशशिनावतंसिने
भसितावलेपरमणीयमूर्तये ।
जगदिन्द्रजालरचनापटीयसे
महसे नमोऽस्तु वटमूलवासिने ॥ १६ ॥

முதிதாய முக்தசசிநா வதம்ஸிநே
பஸிதாவலேபரமணீய மூர்த்தயே ।
ஜகதிந்த்ர ஜாலரசனாபடீயஸே
மஹஸே நமோஸ்து வடமூலவாஸிநே ॥ 16

व्यालम्बिनीभिः परितो जटाभिः
कलावशेषेण कलाधरेण ।
पश्यल्ललाटेन मुखेन्दुना च
प्रकाशसे चेतसि निर्मलानाम् ॥ १७ ॥

வ்யாலம்பிநீபி: பரிதோ ஜடாபி:
கலாவசேஷேண கலாதரேண
பச்யல்லலாடேன முகேந்துனா ச ।
ப்ரகாசஸே சேதஸி நிர்மலாநாம் ॥ 17

उपासकानां त्वमुमासहायः
पूर्णेन्दुभावं प्रकटीकरोषि ।
यदद्य ते दर्शनमात्रतो मे
द्रवत्यहो मानसचन्द्रकान्तः ॥ १८ ॥

உபாஸகாநும் த்வமுமாஸஹாய : I
    பூர்ணேந்து பாவம் ப்ரகடீகரோஷி I
யதத்யதே தர்சனமாத்ரதோமே
    த்ரவத்யஹோ மாநஸசந்த்ரகாந்த II 18

यस्ते प्रसन्नामनुसंदधानो
    मूर्तिं मुदा मुग्धशशाङ्कमौलेः ।
ऐश्वर्यमायुर्लभते च विद्या-
    मन्ते च वेदान्तमहारहस्यम् ॥ १९ ॥

யஸ்தே ப்ரஸன்னமனு ஸந்ததானே
    மூர்த்திம் முதா முக்தசசாங்க மௌளே : I
ஐச்வர்ய மாயுர்லபதேச வித்யா
    மந்தே ச வேதாந்த மஹாரஹஸ்யம் II

दक्षिणामूर्तिस्तोत्रम् संपूर्णम् ॥



உ

சிவமயம்

# திருமுறைப் பாடல்கள்

## திருவீழிமிழலை

திருஞானசம்பந்தர் திருமுறை 1

( பண் : மேகராகக குறிஞ்சி )

திருச்சிற்றம்பலம்

ஏரிசையும் வடஆலின் கீழிருந்தங்கு
 ஈரிருவர்க் கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
 நெறியளித்தோன் நின்ற கோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
 பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
 பொருட்சொல்லு மிழலையாமே. 1

## திருநாலூர்மயானம்

திருஞானசம்பந்தர் திருமுறை 2

( பண் : சீகாமரம்)

கல்லா நிழல்மேவிக் காமுறுசீர் நால்வர்க்கன்று
எல்லா அறனுரையும் இன்னருளாற் சொல்லினான்
நல்லார் தொழுதேத்தும் நாலூர் மயானத்தைச்
சொல்லா தவரெல்லாஞ் செல்லாதார் தெல்நெறிக்கே. 2

## திருக்கோட்டாறு

திருஞானசம்பந்தர் திருமுறை 3

( பண் : காந்தாரபஞ்சமம் )

ஏலம லர்க்குழல் மங்கைநல் லாளிம வான் மகள்
பாலம ருந்திரு மேனிஎங்கள்பர மேட்டியும்
கோலம லர்ப்பொழில் சூழ்ந்தெழி லார்திருக் கோட்டாற்றுள்
ஆலநீ ழற்கீழ்இருந்துஅறஞ் சொன்னஅ ழகனே 3

## திருப்பழனம்

திருநாவுக்கரசர் திருமுறை 4

( திருநேரிசை )

ஆலின்கீழ் அறங்களெல்லாம் அன்றவர்க் கருளிச்செய்து
நூலின்கீழ் அவர்கட்கெல்லா நுண்பொரு ளாகிநின்று
காலின்கீழ்க் காலன்தன்னைக் கடுகத்தான் பாய்ந்து பின்னும்
பாலின்கீழ் நெய்யு மானார் பழனத்தெம்பரம னாரே. 4

## திருவாட்போக்கி

திருநாவுக்கரசர் திருமுறை 5

( திருக்குறுந்தொகை )

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நிழல் அமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே. 5

## திருநாரையூர்

திருநாவுக்கரசர் திருமுறை 6

( திருத்தாண்டகம் )

ஆலாலம் மிடற்றணியா அடக்கினானை
ஆலதன்கீழ் அறம்நால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனாகிப் பழமு மாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையானானை
மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியினின் பயனாய விமலன் தன்னை
நாலாய மறைக் கிறைவன் ஆயினானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 6

## திருநாகேச்சரம்

சுந்தரர் — திருமுறை 7

( பண் : பஞ்சமம் )

அருந்தவ மாமுனிவர்க்கு
அருளாகியோர் ஆலதன்கீழ்
இருந்தறமே புரிதற்கு
இயல்பாகி யதென்னை கொலாம்
குருந்தய லேகுரவம்
அரவின் னெயிறேற் றரும்பச்
செருந்திசெம் பொன்மலருந்
திருநாகேச் சரத்தரனே. 7

மாணிக்கவாசகர் — திருமுறை 8

( திருவாசகம் )

அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்றார வேத்து நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 8

## கோயில் (சிதம்பரம்)

திருவொலிய முதனார் — திருமுறை 9

( திருவிசைப்பா – பண் : இந்தளம் )

அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய்
ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை மலையாய்
காண அருளென்று
பல்லா யிரம்பேர் பதஞ் சலிகள்
பரவ வெளிப் பட்டுச்
செல்வாய் மதில் தில்லைக் கருளித்
தேவன் ஆடுமே. 9

## கோயில் (சிதம்பரம்)

### சேந்தனார் - திருப்பல்லாண்டு    திருமுறை 9

( பண் : பஞ்சமம் )

நிட்டையி லாவுடல் நீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்,
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்து,
அட்ட மூர்த்திக்கென் அகம்நெகவூறும்
அமிர்தினுக்கு ஆலநிழற்,
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே, 10

### திருமூலர் – திருமந்திரம்    திருமுறை 10

விரைந்தன்று நால்வர்க்கு
மெய்ப்பதி சூழ்ந்து,
புரந்தகல் லால்நிழற்
புண்ணியன் சொன்ன,
பரந்தன்னை யோராப்
பழிமொழி யாளர்,
உரந்தன்மை யாக
வொருங்கிநின் றார்களே. 11

### பரணதேவநாயனார்    திருமுறை 11

( சிவபெருமான் திருவந்தாதி )

ஆல நிழற்கீழ் இருப்பதுவும் ஆய்வதறம்
ஆலம் அமுது செய்வ தாடுவதீ — ஆலந்
துறையுடையான் ஆனை உரியுடையான் சோற்றுத்
துறையுடையான் சோராத சொல்ல. 12

( பெரியபுராணம் )

ஆலின்கீழ் நால்வர்க் கன்று

அறமுரைத்த அங்கணனை

நூலின்கட் பொருள் பாடி

நூலறிவார்க் கீந்தானைக்

காலம்பெற் றினிதி றைஞ்சிக்

கைதொழுது புறம்போந்தார்

சீலங்கொள் தென்ன வனும்

தேவியரும் உடன்போத. 13

திருச்சிற்றம்பலம்



சிவமயம்

# தல புராணங்களில் தட்சிணாமூர்த்தி துதிப் பாடல்கள்

## திருவிளையாடற் புராணம்

கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறைஆறு
அங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்

பரஞ்சோதி முனிவர்

## துறைசைப் புராணம்

செம்மலர்நோன் தாள்சேரல் ஒட்டாமல்
உயிரையெல்லாம் தியக்கம் செய்யும்
அம்மலம்க நீஇமிகுந்த அன்பரொடு
மருவிநீர் அடையு முத்தி
இம்முறையாம் எனநால்வர்க்(கு) இருவிரற்சின்
முத்திரையால் இயம்பி ஆலின்
மன்மதன்மேல் நுதற்கண்அனல் இறைத்திருந்த
குருபரனை வணக்கம் செய்வாம்.

சாத்திரம் சாமிநாத முனிவர்

## திருக்குற்றாலத் தலபுராணம்

ஆல்வருக்கம் தனிஉயர்ந்த வடநிழற்கே
தென்முகங்கொண்(டு) அறவோ ராய
நால்வருக்குள் இருவருக்கும் ஒருவருக்கும்
நவின்றருளி நவிலொணாத

நூல்வருக்கம் ஒருவருக்கும் நுவலாமல்
நுவன்றானை நுதற்கண் ணானைப்
பால்வருக்கைக் கனியை அருள் பசுந்தேனைப்
பரவாமல் பரவல் செய்வாம்.

திரிகூடராசப்ப கவிராயர்

## மண்ணிப்படிக்கரைப் புராணம்

மூலஆ ணவம்தப முனிவர் நால்வரும்
மூலஆ சமம்கரத் தேந்தி மெய்வட
மூலவாஞ் சையின்அமர் முக்கண் நாற்புய
மூலஆ சிரியனை முன்னி ஏத்துவாம்

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை

## காசிரகசியம்

மாலமர் ஆடி வாவென நடுவன்
வந்து கொண்டேகுமுன் பிரியும்
சீலமராள் திவாவினும் நிகழும்
திருமதி முகம் உஞது உச்சிப்
பாலமர் ஆடிவாய் நிழல் பொருவப்
பதிபெரும்பே றுளங்கொடு கல்
ஆலமர் ஆடி வாழ்தரு பெருமான்
அடிமலர்க்(கு) அன்பு செய்திடுவாம்

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை

## சிதம்பர சபாநாதர் புராணம்

அனகா ரணமும் அறிதற் கரிய
மனவர் சகரீங் கியமாண் அருள்மெய்ச்
சனகா தியர்தே றியசற் குருவாய்
முனம்ஆல் நிழல்மே வியைமுன் னிடுவாம்

சபாபதி நாவலர்

## மாயூரப் புராணம்

மால்மல ரவன் முன்னோர் தோன்
முதலென வழுத்தற் கேற்பச்
சூல்மலர் கருணையா லோர்
தொன்முதல் அமர்ந்தாள் மாக்கள்
கால்மலர் அடங்கும் உண்மை
கைம்மலர்க் காட்சி யாலே
தான்மலர் தரத் தெரிக்கும்
தம்பிரான் சரணம் சார்வாம்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

## திருத்துருத்திப் புராணம்

பரவுடல் மூன்றும் அப்பால்பகர் உடல் இரண்டும் மாயத்
தரவுடல் ஐந்தும் நீத்துத்தன் திருவடியால் மாக்கள்
விரவஞர் உடலம்தாங்கி விரிகல்லால்அடி எஞ்ஞான்றும்
வரமுற அமரும் வள்ளல் மலரடிக்கன்பு செய்வாம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

## திருக்குடந்தைப் புராணம்

விதிவிலக்கு உயிர்க்கே யன்றி
மிளிர்தமக் கில்லை என்று
துதிமறை உரைத்த வாறே
துணிதரத் தாமா காதாய்
மதியமை தெற்கு நோக்கி
வடக்குமா றுக்கர் நோக்கப்
பொதியவிற் கல்லால் நீழல்
டொலிபவர்க் கன்பு செய்வாம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

## அம்பைத்தல புராணம்

முன்னோக்கி வணங்கி அவன் இருந்தருளும்
ஒருநான்கு முனிவர்க் கெல்லாம்
பின்னோக்கி அறிதலறப் பெரிதவர்கள்
முகம்நோக்கிப் பிறக்கும் சோதி
தன்னோக்கின் நோக்காத தகைமையெலாம்
தாராது தந்தளித்த
தென்னோக்கி ஓராவின் அடியிருக்கும்
தேசிகனைச் சிந்தை செய்வாம்.

அரிகரமையர்

## அம்பர்ப் புராணம்

செய்தொழிலின் அளவும்அருட் சத்திபதி
தலின் அளவும் சித்தாந்தத்தர்
எய்பொருளின்அளவும் முத்துஇருப்பளவும்
அத்துவிதத் தியல்பும் தேறக்
கொய்மலர்நேர் ஒருகைவிரல் ஒவ்வொன்று
மடக்கி இணைகூட்டி ஆன்றோர்
மெய்கெழும இனிதுணர்த்தி ஆலடிவாழ்
அரசடியை விரும்பி வாழ்வாம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

## சூதவன புராணம்

சிரவனம்புயங் கம்மதி இத்தியம் சிவனும்
பிரவனம்புய லளவுகல்லால் நிழல் பிரியா
உரவனம்புயர் நால்வர்சூழ் உறவமர்பரம
குரவன் அம்புய நாண்மலர்ச்சேவடி குறிப்பாம்

காரைக்குடி சொக்கலிங்கச் செட்டியார்

## பயறணீச்சுரர் தலப்புராணம்

மித்திருக்(கு) அறம்பொருள் இன்பென்பவைபை
மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
சித்திரமாய் அளிக்கும் ஒரு முழுமுதலே
சன்காதி தெளிவினோருக்கு

எத்தரையும் அறியொண்ணு அழியாத
செல்வத்தின் இன்பத்தைச்சின்
முத்திரையின் மரக்காலால் அளந்தபொரு
ளாளிபதம் உன்னி வாழ்வாம்.

கனகசபைக்கவிராயர்

## திருக்ககோளப் புராணம்

மாலினேன் மலரோன் மைந்தர் நால்வர்க்கும்
சீலமாம்அத் துவிதம் தெளித் திடப்
பாலின் நெய்யென எங்கும் பரந்தும்கல்
ஆலின் மேவும் அடிகளை வாழ்த்துவாம்

வேலாயுததேசிக சுவாமிகள்

## வயிரவன் கோயிற்புராணம்

காரணமாகி அனைத்துலகி னுக்கும்
களைகணுய் ஆதியோ டந்த
நாரணன் பிரமன் இன்னமும் துருவி
நண்ணரும் நுண்ணிய பொருளாய்ச்
சீரண வுறுமா நால்வரைச் செய்த
தேசிக சிகாமணி யாகி
ஆரணம் புழிச்சும் ஆல்நிழல் அமர்ந்த
அடிகளை அகத்திடை அமைப்பாம்.

நடராச கவிராயர்

## திருக்கருவைத்தல புராணம்

தழலிடைஉற் றிடுமெழுகொத்
துளமுருகிச் சலசமலர்க்
கழலிணைவீழ்ந் திறைஞ்சிய நால்
வருக்கு முன்னம் கருணையின்
செழுமறையின் பொருள்சொலத் தென்
திசை நோக்கிக் கல்லாலின்
நிழலிருந்த பரம்பொருள்எம்
நெஞ்சிலிருந்(து) அருள்செயுமால்

சொ, வீரப்பமுதலியார்

## நல்லூர்ப் பெருமணத் தலபுராணம்

மதியின்உயர் சனகாதி மாதவர்க்(கு) ஆலடிஇருந்து
பதிபசுபா சத்தினுறு பரப்பினைத்தன் மலர்க்கைவிரல்
நுதியதனல் கருணையொடு நுண்ணியதாய் அறிவித்தோன்
புதியமலர்த் தாள்இரண்டும் போற்றிவணங்கிடு வோமால்.

கொட்டையூர் சிவக்கொழுந்துதேசிகர்

## பவானிகூடற் புராணம்

நிறைமதி முகமும் முக்கணும் முரல்
நிலவுசெவ் வாயும் ஈரிரண்டு
நறைமலர்க் கரமும் சிவமணி வடமும்
ஞானமுத் திரையுமாய் நால்வர்க்கு
அறநெறி உணர்த்தி அருள்செய்து கல்லால்
அணிநிழல் இனிதுவீற் றிருந்த
மறைமுதல் நடுவீ றறியொணு ஞான
வடி வினைக் கருத்தினில் வைப்பாம்

வாசுதேவ முதலியார்

## கோயிலூர்ப் புராணம்

கற்றுணர் முனிவர் நால்வரும் காண்பான்
காட்சி காண்பொருள் ஒரு மூன்றும்
அற்றுணர் குறியும் அமைந்தபா வனையும்
அறைதரு குணங்களும் அகன்று
முற்றுணர் புராண பரசுக சொருப
முதல்வரரய் மருவலுர் கல்லால்
நற்றுணர் மலர்க்கைக் குறியொடு மருவும்
ஞானதே சிகனடி பணிவாம்,

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை

## திருவானைக்காப் புராணம்

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியில் கதுவ நல்கிய
செம்மலை அலதுளம் சிந்தியா தரோ

ஸ்ரீ கச்சியப்ப முனிவர்

## திருவான்மியூர்ப் புராணம்

பொருந்திய நால்வருக் கன்று கயிலைதனில்
உரைத்தவகை போதாவென்றே
அருந்தகைய அத்துவிதப் பதிபசு பாசத்(து)
உண்மை அருமையாகத்
திருந்தியநற் பெருந்துறையின் மணிவாசகர்க்கு
முனம் தெரித்து வேதக்
குருந்தடியில் எழுந்தருளும் குருவடியை
முடிதிருந்தக் கொண்டு வாழ்வாம்.

பூவை கலியாணசுந்தர முதலியார்

## திருமுல்லைவாயிற் புராணம்

மைக்கணுள் மலைமகள் வழுத்தும் மேன்மைசேர்
அக்கணு யகருடன் அன்று தோன்றிய
முக்கணு யகன்திரு முல்லைமா நகர்தத்
தெக்கணு மூர்த்திதாள் சிந்தை செய்குவாம்

சீகாழிவடுகநாத தேசிகர்

## களந்தைப் புராணம்

எண்ணிய பேற்றை எய்த
இருவர்தாம் எண்ணில் காலம்
பண்ணிய தவத்துக் காகப்
பரன்நண் ணியநடனம் போலும்
திருத் தில்லை மன்றுள்
நலம் தரு களந்தை உற்ற
புண்ணியப் பொதுவில் ஆடும்
பொற்பதம் போற்றி வாழ்வாம்

கைலாசநாத தேசிகர்

## தேவாங்க புராணம்

வருபிறவி நெடும்கேதக் கொடுங்கோடை
யொடும் காம வடவைத்தீயும்
ஒருவவிரு வடநிழலின் மூவாத
நால்வர்தம துள்த்தி னூடு

பேருவரிய மெய்ஞ்ஞானப் பயிரெழுந்
தானந்த சிவபோகம் வாய்ப்பக்
கருணைமழை பொழிமவுனக் கயிலைமுகில்
இணையடிப் பொற் கமலம் சேர்வாம்

மாம்பழக்கவிச்சிங்க நாவலர்

## திருப்புன்கூர்ப் புராணம்

நத்து இரையும் கடல்துயின்றோன்
அயன் மகவாய் வருசனகர் ஆதிநால்வர்
பத்திரையாய் நிவேதித்து மாணவராய்த்
திருவடியாம் பதுமம் போற்றிச்
சித்திரையாய் ஊட்டியருள் என்வாக்கால்
அளக்கொண்ணுச் செல்வத்தைச் சின்
முத்திரையின் மரக்காலால் அளந்தருள் செய்
முதல்வனடி முன்னி வாழ்வாம்.

கனகசபைக் கவிராயர்

## பரிதியப்பர் தலபுராணம்

வேதங்கள் ஆகமங்கள் சாத்திரங்கள்
உபநிடத்தின் விரிவான
பேதங்கள் முழுதுணர்ந்த முதுமூப்பு
நால்வரின்பம் பெறஉவாவாய்ச்
சீதமதி எனஆலின் கீழிருந்து
கைகாட்டும் தேவதேவன்
பாதமலர் இணையதனைப் பரிதிவனத்
தினில்கண்டே பணிதல் செய்வாம்.

நாராயணசாமி உபாத்தியாயர்

## பெருந்தோட்டத்து அகத்தீச்சுர புராணம்

கைவிரல் நான்கு ஒருசேரப் பெருவிரல்வே
ருய்உயிர்தன் கழல்சேராத
வெவ்வியமும் மலச்சார்பும் விளக்க அவை
விலக்கி வணங்கென்னும் மெய்ந்நூற்

செவ்வி தெரித்து இருவிரல்முன் பின்வளைத்து
முத்திரிலே தேற்றி ஆரும்
திவ்வியசின் முத்திரைப்பூம் செங்கரத்தான்
பங்கயத்தாள் சென்னி சேர்ப்பாம்.

ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார்

## திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

இருவினையா திகள்அகலக் கடைக்கண்
அளித் தறமாதி இன்பம் நான்கின்
ஒருமுடிவே புத்திமுத்தி யாக அதில்
ஒன்றைந்தும் உணர் பத்தாகப்
பொருள் விரவப் பத்தில் ஒன்றின்
புணர்ப் பெழுத்து அஞ்சக்கரத்தில் போகரூபம்
தெருளஅருள் பரமகுரு தட்சிணாமூர்த்தி
பதம்சிந்திப் பாமால்.

இலக்கணம் ஸ்ரீசிதம்பரநாதமுனிவர்

## திருப்பாண்டிக் கொடுமுடிப் புராணம்

பனிமதிச்செஞ் சடைநுதல் வெண்ணீற் றொளிமுச்
சுடர்விழியும் பவள வாயும்
கனிமொழிப்புன் சிறுநகையும் திருமுகமும்
கறைமிடறும் கரங்கள் நான்கும்
தொனிமலர்த்தாள் முயலகன்மேல் துதைந்
தொருகல் ஆலநிழல் தோன்றி நால்வர்க்கு
இனியமொழி பகர் கறையூர்த் தக்கிணாமூர்த்தி
பொற்றுள் இதயம் சேர்ப்பாம்.

பிரம்மஸ்ரீ வெங்கடரமணதாசச்

## தில்லையாளித்தல புராணம்

பின்ன மறைப்பை அடிப்படுத்திப்
பேராத் துகளை அகட்டடக்கி
என்னைப் பரம சுகமுடிமேல் இருத்தி
யருளும் தனது சத்தி

தன்னை வதனத் தமைத்தருளித்
  தடந்தோள் இரண்டும் தாஞகி
மன்னும் ஒலியால் மருவுகுரு
  மூர்த்தி கீர்த்தி வழுத்துதுமே.

## திருநெல்வேலித்தல புராணம்

புசிதநிறை தனுகரண புவன போகம்
  புணர்சரா சரமனைத்தும் பொருந்தி நாளும்
அசகஒளி காட்டும் அருவுருவினனை
  அத்துவிதச் சைவநிலை அமரும்தேவைச்
சநகரொடு நால்வருக்கும் அமுசஞானம்
  தனை உணர்த்தும் சற்குருவைத் தழற்கண்ணனைத்
தினகரர் ஆயிரகோடி திகழும்சோதித்
  தெக்கண மூர்த்திபதம் சிந்தை செய்வாம்

நெல்லையப்பப்பிள்ளை

## கேதாரீஸ்வர புராணம்

முருந்து போல்ஒளிர் நகைபயில் மூகையைமுன்னம்
திருந்து வாசகம் பேசுமாசெய்த தேசிகர்க்குக்
குருந்தம் எய்திநல் ஆசைவறு நிலையினைக்கூறி
இருந்த நாயகன் இணையடி ஏத்தி வாழ்த்திடுவாம்

ச. முருகப்ப செட்டியார்

## திருவேட்டக்குடிப் புராணம்

மால்முதல் அமர ரெல்லாம்
  வழுத்திடும் ஒருத்தன் மேலாம்
வான்முதற் பூத மானேன்
  மன்சன காதியர்க் கோர்
தான்முதல் உயிர்மா பந்தம்
  தனைத்தெரித் தருள்வான் முன்கல்
ஆல்முதல் அமர்ந்த பெம்மான்
  அடிமலர் முடிமேல் வைப்பாம்

பா. சிதம்பரநாத பிள்ளை

## திருக்குழிப்பாலைப் புராணம்

திருநீறு திருமேனி திகழத் திங்கள் திருமுடியின்
மருவுவுரி அரையின்மின்னக்
கருநீறு தருமேன்மை வீணைபுத்தகத் தொடுசின்
முத்திரை அக்கமாலை கைகள்
அருள்நீர் மையுற யோகபட்டம்சார ஆல்நிழலின்
மோன முனிவர்க்கு ஞானம்
தருநீர்மெய்க் குருவாகி ஆளும் எந்தை
தட்சிணாமூர்த்தி பிரான் மலர்த்தான் போற்றி

சிவப்பிரகாசப் பண்டிதர்

## திருவோத்தூர்ப் புராணம்

முக்கண வேதத்தின் முடிவான
ஆனந்த முதல்வா நீல
மைக்கணாள் ஒருபாகா என்றுதுதி
நால்வருக்கும் வடநீழற்கண்
கைக்கண்ஆ மலகமெனக் கூறுமொழிக்
கிணங்கக் கைகாட்டி யாண்ட
தக்கண மூர்த்திஇரு தாமரைத்தாள்
மறவாது சார்ந்து வாழ்வாம்

கருணாகரக்கவிராயர்

## திருக்கூடலூர் புராணம்

சீலமுனி நால்வர்மதி சிவமேபற்றிச்
சின்மயமும் மூலமதில் திரும்பிஒன்றாய்
ஏலவுயர் மால்வரையில் வலக்கால் தொங்க
இடக்காலை மடக்கியதில் ஏற்றிநீண்ட
தாலவிரல் மேலுற அங்குட்டம் தன்னைத்
தர்ச்சனியின் நுனிதீண்ட மிச்சம்கூட்டிச்
சாலவளர் ஆலடியில் தானே தானும்
தட்சிண மூர்த்திபதச் சலசம் போற்றி

மொழிபெயர்ப்பாளர் பாலகிருஷ்ண தீட்சிதர்

## திருவியலூர்ப் புராணம்

ஆலிலையில் பள்ளிகொளும் திருமாலும்
உறக்கம் வெறுத்து அயர்ந்து நோவ
மேலிலிலைப் பொருள் உண்மை கைத்தலத்தில்
காட்டி நனிவிழைந்து வந்த
நாலுமுனி வரர்க்கும் உபதேச முறையால்
குருவாய் நவிலும் மேன்மைக்
கோலமுடன் ஆங்கணுறை தட்சிணு
மூர்த்தி பதம் குறித்து வாழ்வாம்

## திருவாமாத்தூர்தல புராணம்

அருந்தவருக்(கு) ஆரமுதாம் ஆமாதை யூர்ச்சரிதம்
திருந்தருமைத் தமிழ்க்கவியால் செப்பிடநான் சிந்திந்தேன்
பெருந்தகையார் ஒருநால்வர் பேறெனக் கல்ஆல்அடியில்
இருந்தபடி இருந்தார்வந்(து) என்மனத்தும் இருந்தாரே

வண்ணச்சரபம்தண்டபாணி சுவாமிகள்

## திருநாகேச்சுரப் புராணம்

துன்றியஇன் இளவலாய் முதியவராய்
நால்வருக்கும் சொன்ஞன் மறையின்
நன்ருன அறன்முதல் நான்(கு)அத்தனையும்
நவிலாது நவின்றுரேனும்
என்றுநலம் கேட்பவர்செல் பவரியல்கள்
அத்தனையும் இசைத்தா ரென்ன
அன்ருலின் கீழிருந்த அறிவஞர்
அடிக்கமலம் அகத்துள் கொள்வாம்

## திருப்பைஞ்ஞீலிப் புராணம்

சிலைவடத்தில் எழுந்தருளிச் சேதனமாம்
பொருள்பெறும் நற்சீடரான
கலையுணர் மெய்ச்சன காதிக்கு அறமுதல்
நான்கடைவுடன் கைகாட்டி மேலும்

மலைகடல் சூழ்புவி அமரருலகு
பாதலமும் உய்ய அழிவிலாத
நிலையுறும்ஆ கமநிகம நிகழ்த்துறும்
ஆசிரிய னடிநினைந்து வாழ்வாம்

மெய்ப்பாதப் புலவர்

## திருத் தலைதைப்பதிப் புராணம்

பதிபசு பாசம் மூன்றும் பகர்சிவ ஞானபோதம்
விதிதரு சனக னுதி வேதியர்க்(கு) ஆலின் பாங்கர்
மதிகொள உபதேசித்த மவுனிதென் முகம்கொள் மூர்த்தி
கதிதரு கமலபாதம் கருத்தினில் கொள்வாமன்றே

சி. நாகலிங்கம் பிள்ளை

## சூரைமாநகர்ப் புராணம்

உணர்த்துதல் உணர்தல் என்ன
உரைசெய்தூர் இரண்ட னுள்ளும்
உணர்த்துதல் தனதே மற்றை
யுதுபசு வினதே என்ப(து)
உணர்த்திட ஒருநால் வர்க்கும்
ஒருகல்லால் நீழல் வைகி
உணர்த்திய அருள்சால் முற்றும்
உணர்ந்தவர்க்(கு) அன்பு செய்வாம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## திருவைகாவூர்ப் புராணம்

மாமறையும் ஆகமமும் மற்றுமுள கலையனைத்தும்
தோமறநன் குணர்ந்தார்கள் நால்வர்களும் தொழுதுஅமரக்
காமருமெய்ப் பொருள்விளங்கக் கைவிரலால் தெரித்தருளி
ஏமமிகு சல்லாலின் வதிபவர்தாள் இறைஞ்சிடுவாம்

சி. வேலைய தேசிகர்

## திருவெண்ணெய் நல்லூர்த்தல புராணம்

அருமறையா றங்கமெலாம் அறிந்தாலும்
அனுபவத்தின் மிக்கோரான
குருவிருந்து பயிற்றிலரேல் குணமிலையென்று
உணர்த்திடவே குரவனாகிப்
பெருமுனிவர் நால்வர்க்கும் பேசாமல்
இருந்துணர்த்திப் பிரமை தீர்த்த
தருநிழலில் இருந்தருளும் தக்கிணா
மூர்த்திபதம் தலைமேற் கொள்வாம்

திரு. வடிவேல் முதலியார்



உ

சிவமயம்

श्री दक्षिणामूर्ति अष्टोत्तर शतनामावलिः ॥

# ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டோத்தர சத நாமாவளி

मुद्रां भद्रार्थदात्रीं सपरशुहरिणां बाहुभिर्बाहुमेकं
जान्वासक्तं दधानो भुजगवरसमाबद्धकक्ष्यो वटाधः ।
आसीनश्चन्द्रखण्डप्रतिघटितजटः क्षीरगौरस्त्रिणेत्रो
दद्यादद्यैः शुकाद्यैर्मुनिभिरभिनुतो भावशुद्धिं भवो नः ।

முத்ராம் பத்ரார்(த்) ததாத்ரீம் ஸபரஸுஹரிணாம்
பாஹுபிர் பாஹுமேகம்
ஜான்வாஸக்தம் ததானோ புஜகவரஸமா
பத்தகக்ஷ்யோ வடாத: ।
ஆஸீனஸ்சந்த்ர கண்டப்ர திகடிதஜட:
க்ஷீரகௌர ஸ்த்ரிணேத்ரோ
தத்யாதாத்யை . ஸீகாத்யைர் முனிபி
ரபிநுதோ பாவஸுத்திரம் பவோந: ॥

ओं ओङ्कारसिंहसर्वेन्द्राय नमः
ஓம் ஓங்காரஸிம் ஹஸர்வேந்த்ராய நம:

,, ओङ्कारोद्यानकोकिलाय नमः
,, ஓங்காரோத்யானகோகிலாய நம:

,, ओङ्कारनीडशुकराजे नमः
,, ஓங்காரநீடஸுகராஜே நம:

,, ओङ्कारारण्यकुंजराय नमः
,, ஓங்காராரண்யகுஞ்ஜராய நம:

,, नगराजसुताजानये नमः
,, நகராஜஸுதாஜாநயே நம:

,, नगराजनिजालयाय नमः
,, நகராஜநிஜாலயாய நம:

ओं नवमाणिक्यमालाढ्याय नमः
ஓம் நவமாணிக்யமாலாட்யாய நம :

,, नवचन्द्रशिखामणये नमः
,, நவசந்த்ரஸிகாமணயே நம :

,, नन्दिताशेषमौनीन्द्राय नमः
,, நந்திதாஸேஷ மௌநீந்த்ராய நம :

,, नन्दीशादिमदेशिकाय नमः
,, நந்தீஸாதிமதேஸிகாய நம :

,, मोहानलसुधासाराय नमः
,, மோஹாநலஸுதாஸாராய நம :

,, मोहांबुजसुधाकाराय नमः
,, மோஹாம்புஜஸுதாகராய நம :

,, मोहान्धकारतरणये नमः
,, மோஹாந்தகாரதரணயே நம :

,, मोहोत्पलनभोमणये नमः
,, மோஹோத்பலநபோமணயே நம :

,, भक्तज्ञानाब्धिशीतांशवे नमः
,, பக்தஜ்ஞாநாப்திஸீதாம்ஸவே நம :

,, भक्ताज्ञानतृणानलाय नमः
,, பக்தாஜ்ஞாநத்ருணாநலாய நம :

,, भक्तांभोजसहस्रांशवे नमः
,, பக்தாம்போஜஸஹஸ்ராம்ஸவே நம :

,, भक्तकेकिघनाघनाय नमः
,, பக்தகேகிகநாகநாய நம :

,, भक्तकैरवराकेन्दवे नमः
,, பக்தகைரவராகேந்தவே நம :

,, भक्तकोकदिवाकराय नमः
,, பக்தகோகதிவாகராய நம :

,, गजाननादिसंपूज्याय नमः
,, கஜாநநாதிஸம்பூஜ்யாய நம :

ओं गजचर्मोज्ज्वलाकृतये नमः
ஓம் கஜசர்மோஜ்ஜ்வலாக்ருதயே நம ;

,, गङ्गाधवळदिव्याङ्गाय नमः
,, கங்காதவளதிவ்யாங்காய நம :

,, गङ्गाभङ्गलसज्जटाय नमः
,, கங்காபங்கலஸஜ்ஜடாய நம :

,, गगनांबरसंवीताय नमः
,, ககநாம்பரஸம்வீதாய நம :

,, गगनामुक्तमूर्धजाय नमः
,, ககநாமுக்தமூர்தஜாய நம :

,, वदनाब्जजिताब्जश्रिये नमः
,, வதநாப்ஜஜிதாப்ஜஸ்ரியே நம :

,, वदनेन्दुस्फुरद्दिशाय नमः
,, வதநேந்துஸ்புரத்திஸாய நம :

,, वरदानैकनिपुणाय नमः
,, வரதானைகநிபுணாய நம :

,, वरवीणोज्ज्वलत्कराय नमः
,, வரவீணோஜ்ஜ்வலத்கராய நம :

,, वनवाससमुल्लासाय नमः
,, வனவாஸஸமுல்லாஸாய நம :

,, वनवीरैकलोलुपाय नमः
,, வனவீரைகலோலுபாய நம :

,, तेजःपुञ्जघनाकाराय नमः
,, தேஜ : புஞ்ஜகனாகாராய நம ;

,, तेजसामपि भासकाय नमः
ஓம் தேஜஸாமபி பாஸகாய நம ;

,, विनेयानां तेजःप्रदाय नमः
,, விநேயானாம் தேஜ:ப்ரதாய நம ;

,, तेजोमयनिजाश्रमाय नमः
,, தேஜோமயநிஜாஸ்ரமாய நம :

ओं दमितानङ्गसङ्ग्रामाय नमः

ஓம் தமிதாநங்கஸங்க்ராமாய நம :

,, दरहासजिताङ्गनाय नमः

,, தரஹாஸஜிதாங்கநாய நம :

,, दयारससुधासिन्धवे नमः

,, தயாரஸஸு¬தாஸிந்தவே நம :

,, दरिद्रधनशेवधये नमः

,, தரித்ரதநஸேவதயே நம :

,, क्षीरेन्दुस्फटिकाकाराय नमः

,, க்ஷீரேந்துஸ்படிகாகாராய நம :

,, क्षीरेन्दुमुकुटोज्ज्वलाय नमः

,, க்ஷீரேந்து முகுடோஜ்ஜ்வலாய நம :

,, क्षीरोपहाररसिकाय नमः

,, க்ஷீரோடஹாரரஸிகாய நம :

,, क्षिप्रैश्वर्यफलप्रदाय नमः

,, க்ஷிப்ரைஸ்வர்யபலப்ரதாய நம :

,, नानाभरणमुग्धाङ्गाय नमः

ஓம் நாநாபரண முக்தாங்காய நம :

,, नारीसंमोहनाकृतये नमः

,, நாரீஸம்மோஹநாக்ருதயே நம :

,, नादब्रह्मरसास्वादिने नमः

,, நாதப்ரஹ்மரஸாஸ்வாதிநே நம :

,, नागभूषणभूषिताय नमः

,, நாகபூஷணபூஷிதாய நம :

,, मूर्तिनिन्दितकन्दर्पाय नमः

,, மூர்(த்)திநிந்திதகந்தர்பாய நம :

,, मूर्तामूर्तजगद्वपुषे नमः

,, மூர்(த்)தாமூர்(த்)தஜகத்வபுஷே நம :

,, मूकाज्ञानतमोभानवे नमः

,, மூகாஜ்ஞாநதமோபானவே நம :

ओं मूर्तिमत्कल्पपादपाय नमः

ஓம் மூர்(த்)திமத்கல்பபாதபாய நம :

,, तरुणादित्यसंकाशाय नमः

,, தருணாதித்யஸம்காஸாய நம :

,, तन्त्रीवादनतत्पराय नमः

,, தந்த்ரீவாதநதத்பராய நம :

,, तरुमूलैकनिलयाय नमः

,, தருமூலைகநிலயாய நம :

ओं तप्तजांबूनदप्रभाय नमः

ஓம் தப்தஜாம்பூநதப்ரபாய நம :

,, तत्त्वपुस्तोल्लसत्पाणये नमः

,, தத்த்வபுஸ்தோல்லஸத்பாணயே நம :

,, तपनोडुपलोचनाय नमः

,, தபநோடுபலோசநாய நம :

,, यमसन्नुतसत्कीर्त्तये नमः

,, யமஸந்நுதஸத்கீர்(த்)தயே நம :

,, यमसंयमसंयुताय नमः

,, யமஸம்யமஸம்யுதாய நம :

,, यतिरूपधराय मौनिने नमः

,, யதிரூபதராய மௌநிநே நம :

,, यतीन्द्रोपास्यविग्रहाय नमः

,, யதீந்த்ரோபாஸ்யவிக்ரஹாய நம :

,, मन्दारहाररुचिराय नमः

,, மந்தாரஹாரருசிராய நம :

,, मदनायुतसुन्दराय नमः

,, மதநாயுதஸுந்தராய நம :

,, मन्दस्मितलसद्वक्त्राय नमः

,, மந்தஸ்மிதலஸத்வக்த்ராய நம :

,, मधुराधरपल्लवाय नमः

,, மதுராதரபல்லவாய நம :

ओं मंजीरमंजुपादाब्जाय नमः
ஓம் மஞ்ஜீரமஞ்ஜுபாதாப்ஜாய நம :

,, मणिपट्टोल्लसत्कटये नमः
,, மணிபட்டோல்லஸத்கடயே நம :

,, हस्ताङ्कुरितचिन्मुद्राय नमः
,, ஹஸ்தாங்குரிதசிந்முத்ராய நம :

,, हठयोगपरोत्तमाय नमः
,, ஹடயோகபரோத்தமாய நம :

,, हंसजप्याक्षमालाढ्याय नमः
,, ஹம்ஸஜப்யாக்ஷமாலாட்யாய நம :

,, हंसेन्द्राराध्यपादुकाय नमः
,, ஹம்ஸேந்த்ராராத்யபாதுகாய நம ;

,, मेरुशृङ्गतटोल्लासाय नमः
,, மேருஸ்ருங்கதடோல்லாஸாய நம ;

,, मेघश्याममनोहराय नमः
,, மேகஸ்யாமமனோஹராய நம ;

,, मेधाङ्कुरालवालाग्र्याय नमः
,, மேதாங்குராலவாலாக்ர்யாய நம :

,, मेधापक्वफलद्रुमाय नमः
,, மேதாபக்வபலத்ருமாய நம :

,, धार्मिकान्तर्गुहावासाय नमः
,, தார்மிகாந்தர்குஹாவாஸாய நம :

,, धर्ममार्गप्रवर्तकाय नमः
ஓம் தர்மமார்கப்ரவர்(த்)தகாய நம :

,, धामत्रयनिजारामाय नमः
,, தாமத்ரயநிஜாராமாய நம ;

,, धर्मोत्तममनोरथाय नमः
,, தர்மோத்தமமனோரதாய நம ;

,, प्रबोधोद्गारदीपश्रिये नमः
,, ப்ரபோதோத்காரதீபஸ்ரியே நம ;

ओं प्रकाशितजगत्त्रयाय नमः
ஓம் ப்ரகாஸிதஜகத்த்ரயாய நம;

,, प्रज्ञाचन्द्रशिलाचन्द्राय नमः
,, ப்ரஜ்ஞாசந்த்ரஸிலாசந்த்ராய நம:

,, प्रज्ञामणिवराकराय नमः
,, ப்ரஜ்ஞாமணிவராகராய நம:

,, ज्ञान्तरान्तरभासात्मने नमः
,, ஜ்ஞாந்தராந்தரபாஸாத்மநே நம

,, ज्ञातृज्ञातिविदूरगाय नमः
,, ஜ்ஞாத்ருஜ்ஞாதிவிதூரகாய நம :

,, ज्ञानज्ञाद्वैतदिव्याङ्गाय नमः
,, ஜ்ஞானஜ்ஞாத்வைததிவ்யாங்காய நம:

,, ज्ञातृज्ञातिकुलागताय नमः
,, ஜ்ஞாத்ருஜ்ஞாதிகுலாகதாய நம:

,, प्रपन्नपारिजाताग्र्याय नमः
,, ப்ரபந்நபாரிஜாதாகரயாய நம:

,, प्रणतार्त्यब्धिबाडबाय नमः
,, ப்ரணதார்த்யப்திபாடபாய நம:

,, भूतानां प्रमाणभूताय नमः
,, பூதாநாமப்ரமாணபூதாய நம:

,, प्रपंचवीतकारकाय नमः
,, ப்ரபஞ்சவீதகாரகாய நம:

,, यत्तत्त्वमसिसंवेद्याय नमः
,, யத்தத்த்வமஸ்ஸம்வேத்யாய நம:

,, यक्षगेयात्मवैभवाय नमः
,, யக்ஷகேயாத்மவைபவாய நம:

,, यज्ञादिदेवतामूर्तये नमः
,, யஜ்ஞாதிதேவதாமூர்( த் ) தயே நம;

,, यजमानवपुर्धराय नमः
,, யஜமாநவபுர்தராய நம:

,, छत्राधिपतिविश्वेशाय नमः
,, சத்ராதிபதிவிஸ்வேஸாய நம;

ओं छत्रचामरसेविताय नमः
ஓம் சத்ரசாமரஸேவிதாய நம :

,, छन्दश्शास्त्रादिनिपुणाय नमः
,, சந்தஸ்ஸாஸ்த்ராதிநிபுணாய நம :

,, छलजात्यादिदूरगाय नमः
,, சலஜாத்யாதிதூரகாய நம :

,, स्वाभाविकसुखैकात्मने नमः
,, ஸ்வாபாவிகஸுகைகாத்மநே நம :

,, स्वानुभूतिरसौदधये नमः
,, ஸ்வாநுபூதிரஸௌததயே நம :

,, स्वाराज्यसंपदध्यक्षाय नमः
,, ஸ்வராஜ்யஸம்பதத்யக்ஷாய நம :

,, स्वात्माराममहामतये नमः
,, ஸ்வாத்மாராமமஹாமதயே நம .

,, हाटकाभजटाजूटाय नमः
,, ஹாடகாபஜடாஜூடாய நம :

,, हासोदस्तारिमण्डलाय नमः
,, ஹாஸோதஸ்தாரிமண்டலாய நம :

,, हालाहलोज्ज्वलगळाय नमः
,, ஹாலாஹலோஜ்ஜ்வலகளாய நம :

,, हारायुतमनोहराय नमः
,, ஹாராயுதமநோஹராய நம :

द्युद्रोरधस्स्वर्णमयासनस्थं मुद्रोल्लसद्बाहुमुदारकान्तिम् ।
सद्रोहिणीनाथकलावतंसं भद्रोदधिं कंचन चिंतयामः ॥

த்யுத்ரோரதஸ்ஸ்வர்ணமயாஸநஸ்தம்
முத்ரோல்லஸத்பாஹுமுதாரகாந்திம் ।
ஸத்ரோஹிணீநாதகலாவதம்ஸம்
பத்ரோததிம் கம்சந சிந்தயாம ; ॥

श्रीमेधादक्षिणामूर्त्यर्पणमस्तु ।

ஸ்ரீ மேதாதக்ஷிணாமூர்த்யர்பணமஸ்து

॥ ओं ॥

ஓம்

श्री दक्षिणामूर्त्यष्टोत्तरशतनामाख्यमन्त्रार्णस्तवः ॥

# ஸ்ரீ தட்சிணாமூர்த்தி அஷ்டோத்தர சத நாமாக்ய மந்த்ரார்ணஸ்தவ:

ओं नमो भगवते दक्षिणामूर्तये मह्यं मेधां प्रज्ञां प्रयच्छ स्वाहा ॥

ஓம் நமோ பகவதே தக்ஷிணாமூர்(த்)தயே
மஹ்யம் மேதாம்
ப்ரஜ்ஞாம் ப்ரயச்ச ஸ்வாஹா

श्री देव्युवाच—

भगवन्देवदेवेश मन्त्रार्णस्तवमुत्तमम् ।
दक्षिणामूर्तिदेवस्य कृपया वद मे प्रभो ॥

ஸ்ரீ தேவ்யுவாச :

பகவந்தேவதேவேஸ மந்த்ரார்ணஸ்தவமுத்தமம் ।
தக்ஷிணாமூர்(த்)திதேவஸ்ய க்ருபயா வதமே ப்ரபோ ॥

श्री महेश्वर उवाच—

साधु पृष्टं महादेवि सर्वलोकहिताय ते ।
वक्ष्यामि परमं गुह्यं मन्त्रार्णस्तवमुत्तमम् ॥

ஸ்ரீ மஹேஸ்வர உவாச :

ஸாது ப்ருஷ்டம் மஹாதேவி ஸர்வலோகஹிதாய தே ।
வக்ஷ்யாமி பரமம் குஹ்யம் மந்த்ரார்ணஸ்தவமுத்தமம் ॥

ऋषिच्छन्दोदेवताङ्ग - न्यासादिकमनुत्तमम् ।
मूलमन्त्रवदस्यापि द्रष्टव्यं सकलं हि तत् ॥

ருஷிச்சந்தோதேவதாங்க-ந்யாஸாதிகமநுத்தமம் ।
மூலமந்த்ரவதஸ்யாபி த்ரஷ்டவ்யம் ஸகலம் ஹிதத் ॥

भस्मव्यापाण्डुराङ्गश्शशिकलधरो ज्ञानमुद्राक्षमाला-
वीणापुस्तैर्विराजत्करकमलधरो योगपट्टाभिरामः ।
व्याख्यापीठे निषण्णो मुनिवरनिकरैः सेव्यमानः प्रसन्नः
सव्यालः कृत्तिवासास्सततमवतु नो दक्षिणामूर्तिरीशः ॥

பஸ்மவ்யாபாண்டுராங்க: ஸஸிகலதரோ
ஜ்ஞாநமுத்ராக்ஷமாலா
வீணாபுஸ்தைர் விராஜத்கரகமலதரோ
யோகபட்டாபிராம : ।
வ்யாக்யாபீடே நிஷண்ணோ முனிவரநிகரை :
ஸேவ்யமான : ப்ரஸன்ன :
ஸவ்யால : க்ருத்திவாஸாஸ்ஸததமவது நோ
தக்ஷிணாமூர்(த்)திரீஸ : ॥

इति ध्यात्वा महादेवं मन्त्रार्णस्तवमुत्तमम् ।
जपेत्त्रिसन्ध्यं नियतो भस्मरुद्राक्षभूषितः ॥

இதி த்யாத்வா மஹாதேவம் மந்த்ரார்ணஸ்தவமுத்தமம்
ஜபேத்த்ரிஸந்த்யம் நியதோ பஸ்மருத்ராக்ஷபூஷித : ॥

॥ हरिः ओम् ॥

॥ ஹரி: ஓம் ॥

ओंकारसिंहसर्वेन्द्र ओंकारोद्यानकोकिलः ।
ओंकारनीडशुकराटोंकारारण्यकुंजरः ॥ १ ॥

ஓம்காரஸிம்ஹஸர்வேந்த்ர
ஓங்காரோத்யானகோகில: ।
ஓங்காரநீடஸுகராட்
ஓங்காராரண்யகுஞ்ஜர: ॥ 1

नगराजसुताजानिर्नगराजनिजालयः ।
नवमाणिक्यमालाढ्यो नवचन्द्रशिखामणिः ।
नन्दिताशेषमौनीन्द्रो नन्दीशादिमदेशिकः ॥ २ ॥

நகராஜஸுதாஜாநிர் நகராஜநிஜாலய: ।
நவமாணிக்யமாலாட்யோ நவசந்த்ரஸிகாமணி: ॥
நந்திதாஸேஷமௌனீந்த்ரோ
நந்தீஸாதிமதேஸிக : ॥ 2

मोहानलसुधासारो मोहांबुजसुधाकरः ।
मोहान्धकारतरणिर्मोहोत्पलनभोमणिः ॥ ३ ॥

மோஹானலஸுதாஸாரோ
மோஹாம்புஜஸுதாகர : ।
மோஹாந்தகாரதரணிர்
மோஹோத்பலநபோமணி : ॥ 3

भक्तज्ञानाब्धिशीतांशुर्भक्ताज्ञानतृणानलः ।
भक्तांभोजसहस्रांशुर्भक्तकेकिघनाघनः ।
भक्तकैरवराकेन्दुर्भक्तकोकदिवाकरः ॥ ४ ॥

பக்தஜ்ஞாநாப்திஸீதாம்ஸுர்
பக்தாஜ்ஞாநத்ருணானல : ।
பக்தாம்போஜஸஹஸ்ராம்ஸுர்
பக்தகேகிகனாகன : ।
பக்தகைரவராகேந்துர்
பக்தகோகதிவாகர : 4

गजाननादिसंपूज्यो गजचर्मोज्ज्वलाकृति ।
गङ्गाधवलदिव्याङ्गो गङ्गाभङ्गलसज्जटः ।
गगनांबरसंवीतो गगनामुक्तमूर्धजः ॥ ५ ॥

கஜானனாதிஸம்பூஜ்யோ
கஜசர்மோஜ்ஜ்வலாக்ருதி : ।
கங்காதவளதிவ்யாங்கோ
கங்காபங்கலஸஜ்ஜட : ।
ககனாம்பரஸம்வீதோ
ககனாமுக்தமூர்தஜ : 5

वदनाब्जजिताब्जश्रीर्वदनेन्दुस्फुरद्दिशः ।
वरदानैकनिपुणो वरवीणोज्ज्वलत्करः ।
वनवाससमुल्लासो वनवीरैकलोलुपः ॥ ६ ॥

வதனாப்ஜஜிதாப்ஜஸ்ரீர்
வதனேந்துஸ்புரத்திஸ : ।
வரதானைகநிபுணோ
வரவீணோஜ்ஜ்வலத்கர : ।
வனவாஸஸமுல்லாஸோ
வனவீரைகலோலுப : 6

**तेजःपुञ्जघनाकारस्तेजसामपि भासकः ।**
**तेजःप्रदो विनेयानां तेजोमयनिजाश्रयः ॥ ७ ॥**

தேஜ : புஞ்ஜகனுகாரஸ்
    தேஜஸாமபி பாஸக : I
தேஜ : ப்ரதோ விநேயானும்
    தேஜோமயநிஜாஸ்ரய : 7

**दमितानङ्गसङ्ग्रामो दरहासजिताङ्गनः ।**
**दयारससुधासिंधुर्दरिद्रधनशेवधिः ॥ ८ ॥**

தமிதானங்கஸங்க்ராமோ
    தரஹாஸஜிதாங்கன: I
தயாரஸஸுதாஸிந்துர்
    தரித்ரதனஸேவதி : 8

**क्षीरेन्दुस्फटिकाकारो क्षीरेन्दुमुकुटोज्ज्वलः ।**
**क्षीरोपहाररसिको क्षीप्रैश्वर्यफलप्रदः ॥ ९ ॥**

க்ஷீரேந்துஸ்படிகாகாரோ
    க்ஷீரேந்துமுகுடோஜ்ஜ்வல : I
க்ஷீரோபஹாரரஸிகோ
    க்ஷீப்ரைஸ்வர்யபலப்ரத : 9

**नानाभरणमुग्धाङ्गो नारीसंमोहनाकृतिः ।**
**नादब्रह्मरसास्वादी नागभूषणभूषितः ॥ १० ॥**

நாபரணமுக்தாங்கோ
    நாரீஸம்மோகனுக்ருதி: I
நாதப்ரஹ்மரஸாஸ்வாதீ
    நாகபூஷணபூஷித : II 10

**मूर्तिनिन्दितकंदर्पो मूर्तामूर्तजगद्वपुः ।**
**मूकाज्ञानतमोभानुर्मूर्तिमत्कल्पपादपः ॥ ११ ॥**

மூர்(த்) திநிந்திதகந்தர்(ப்)போ
    மூர்(த்) காமூர்(த்)தஜ்கவபு : I
மூகாஜ்ஞாநதமோபானுர்
    மூர்(த்)திமத்கல்பபாதப ; II 11

तरुणादित्यसंकाशस्तन्त्रीवादनतत्परः ।
तरुमूलैकनिलयस्तप्तजांबूनदप्रभः ।
तत्त्वपुस्तोल्लसत्पाणिस्तपनोडुपलोचनः ॥ १२ ॥

தருணாதித்யஸங்காஸஸ் தந்த்ரீவாதநதத்பர : I
தருமூலைகநிலயஸ் தப்தஜாம்பூநதப்ரப : I
தத்வபுஸ்தோல்லஸத்பாணிஸ்
தபநோடுபலோசன : II 12

यमसन्नुतसत्कीर्तिर्यमसंयमसंयुतः ।
यतिरूपधरो मौनी यतीन्द्रोपास्यविग्रहः ॥ १३ ॥

யமஸந்நுதஸத்கீர்த்திர்
யமஸம்யமஸம்யுத : I
யதிருபதரோ மௌனீ
யதீந்த்ரோபாஸ்யவிக்ரஹ : II 13

मन्दारहाररुचिरो मदनायुतसुंदरः ।
मन्दस्मितलसद्वक्त्रो मधुराधरपल्लवः ।
मंजीरमंजुपादाब्जो मणिपट्टोल्लसत्कटिः ॥ १४ ॥

மந்தாரஹாரருசிரோ
மதநாயுதஸுந்தர : I
மந்தஸ்மிதலஸத்வக்த்ரோ
மதுராதரபல்லவ : I
மஞ்ஜீரமஞ்ஜுபாதாப்ஜோ
மணிபட்டோல்லஸத்கடி : II 14

हस्ताङ्कुरितचिन्मुद्रो हठयोगपरोत्तमः ।
हंसजप्याक्षमालाढ्यो हंसेन्द्राराध्यपादुकः ॥ १५ ॥

ஹஸ்தாங்குரிதசின்முத்ரோ
ஹடயோகபரோத்தம : I
ஹம்ஸஜப்யாக்ஷமாலாட்யோ
ஹம்ஸேந்த்ராராத்யபாதுக : II 15

मेरुशृङ्गतटोल्लासो मेघश्याममनोहरः ।
मेधाङ्कुरालवालाग्र्यो मेधापकफलद्रुमः ॥ १६ ॥

மேருஸருங்கதடோல்லாஸோ
மேகஸயாமமனோஹர : ।
மேதாங்குராலவாலாக்ர்யோ
மேதாபக்வபலத்ரும : ॥ 16

**धार्मिकान्तर्गुहावासो धर्ममार्गप्रवर्तकः ।**
**धामत्रयनिजारामो धर्मोत्तममनोरथः ॥ १७ ॥**

தார்மிகாந்தர்குஹாவாஸோ
தர்மமார்(க்)கப்ரவர்(த்)தக : ॥
தாமத்ரயநிஜாராமோ
தர்மோத்தமமனோரத : ॥ 17

**प्रबोधोद्गारदीपश्रीः प्रकाशितजगत्त्रयः ।**
**प्रज्ञाचन्द्रशिलाचन्द्रः प्रज्ञामणिवराकरः ॥ १८ ॥**

ப்ரபோதோத்காரதீபஸ்ரீ :
ப்ரகாஸஸிதஜகத்த்ரய : ।
ப்ரஜ்ஞாசந்த்ரஸிலாசந்த்ர :
ப்ரஜ்ஞாமணிவராகர : ॥ 18

**ज्ञान्तरान्तरभासात्मा ज्ञातृज्ञातिविदूरगः ।**
**ज्ञानज्ञाद्वैतदिव्याङ्गो ज्ञातृजातिकुलागतः ॥ १९ ॥**

ஜ்ஞாந்தராந்தரபாஸாத்மா
ஜ்ஞாதுர்ஜ்ஞாதிவிதூரக : ।
ஜ்ஞானஜ்ஞாத்வைததிவ்யாங்கோ
ஜ்ஞாத்ருஜாதிகுலாகத : 19

**प्रपन्नपारिजाताग्र्यः प्रणतार्त्यङ्घ्रिबाडबः ।**
**प्रमाणभूतो भूतानां प्रपञ्चहितकारकः ॥ २० ॥**

ப்ரபன்னபாரிஜாதாக்ர்ய :
ப்ரணதார்த்யங்க்ரிபாடப : ।
ப்ராமணபூதோ பூதானாம்
ப்ரபஞ்சஹிதகாரக : 20

**यत्तत्त्वमसिसंवेद्यो यक्षगेयात्मवैभवः ।**
**यज्ञादिदेवतामूर्तिर्यजमानवपुर्धरः ॥ २१ ॥**

யத்தத்த்வமஸிஸம்வேத்யோ
யக்ஷகேயாத்மவைபவ : ।
யஜ்ஞாதிதேவதாமூர்(த்)திர்
யஜமானவபுர்தர : 21

छत्राधिपतिविश्वेशश्छत्रचामरसेवितः ।
छन्दःशास्त्रादिनिपुणश्छलजात्यादिदूरकः ॥ २२ ॥

சத்ராதிபதிவிச்வேசச்
சத்ரசாமரஸேவித : ।
சந்த : சாஸ்த்ராதிநிபுணச்
சலஜாத்யாதிதூரக : ॥ 22

स्वाभाविकसुखैकात्मा स्वानुभूतिरसौदधिः ।
स्वाराज्यसंपदध्यक्षः स्वात्मारामममहामतिः ॥ २३ ॥

ஸ்வாபாவிகஸுகைகாத்மா
ஸ்வாநுபூதிரஸௌததி : ।
ஸ்வாராஜ்யஸம்பதத்யக்ஷ
ஸ்வாத்மாராமமஹாமதி : ॥ 23

हाटकाभजटाजूटो हासोदस्तारिमंडलः ।
हालाहलोज्ज्वलगलो हारायुतमनोहरः ॥ २४ ॥

ஹாடகாபஜடாஜூடோ
ஹாஸோதஸ்தாரிமண்டல ।
ஹாலாஹலோஜ்ஜ்வலகலோ
ஹாராயுதமனோஹர : ॥ 24

इति श्रीदक्षिणामूर्तेर्मन्त्रस्तवमुत्तमम् ।
अष्टोत्तरशतं श्रीमद्दिव्यनामात्मकं शुभम् ॥

இதி ஸ்ரீ தக்ஷிணாமூர்தேர்
மந்த்ரஸ்தவமுத்தமம் :
அஷ்டோத்தரஸதம் ஸ்ரீ மத்
திவ்யநாமாத்மகம்ஸுபம் ॥ 25

सर्वसौभाग्यदं पुण्यं सर्वविद्यैकसाधनम् ।
सर्वलोकाग्रगण्यत्व-विधायकमनूपमम् ॥

ஸர்வஸௌபாக்யதம் புண்யம்
ஸர்வவித்யைகஸாதநம் ।
ஸர்வலோகாக்ரகண்யத்வ
விதாயகமநூபமம் ॥ 26

सर्ववश्यकरं सर्वभूतभीतिनिवारणम् ।
सर्वरोगभिषग्वर्यं सर्वपापेन्धनानलम् ॥

ஸர்வவஸ்யகரம் ஸர்வ
பூதபீதிநிவாரணம் ।
ஸர்வரோகபிஷக்வர்யம்
ஸர்வபாபேந்தனானலம் ॥ 27

वैराग्यमोक्षज्ञानश्रीफलदानैकनैपुणम् ।
यो जपेत्परिशुद्धात्मा स सर्वफलभाग्भवेत् ॥

வைராக்யமோக்ஷக்ஞானஸ்ரீ
பலதானைகநைபுணம் ।
யோஜபேத் பரிஸுத்தாத்மா
ஸ ஸர்வபலபாக் பவேத் ॥ 28

इति श्री उमामहेश्वरसंवादे मंत्रार्णस्तवः संपूर्णः ॥

இதி ஸ்ரீ உமாமஹேஸ்வர ஸம்வாதே
மந்த்ரார்ணஸ்தவ: ஸம்பூர்ண:

द्युद्रोरधस्सुवर्णमयासनस्थं,
मुद्रोल्लसद्बाहुमुदारकान्तिम् ।
सद्रोहिणीनाथकलावतंसं
भद्रोदधिं कंचन चिन्तयामः ॥

த்யுத்ரோரதஸ்ஸுவர்ண மயாஸநஸ்தம்
முத்ரோல்லஸத்பாஹு முதாரகாந்திம் ।
ஸத்ரோர்ஹிணீ நாதகலாவதம்ஸம்
பத்ரோததிம் கஞ்சந சிந்தயாம: ॥ 29

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்யர்ப்பணமஸ்து

॥ श्री दक्षिणामूर्त्यर्पणमस्तु ॥

# அடிக் குறிப்புகள்

**பக்கம் - 5**

சிந்து சமவெளி நாகரிகத்தின் பல உண்மையினைக் கண்டறிய இப்பகுதியில் மீண்டும் அகழ்வாராய்ச்சிப் பணியினை மேற்கொண்டுள்ளனர் இதனால் இன்னும் பல செய்திகள் வர உள்ளன.

**பக்கம் - 5**

சிந்துசமவெளி அகழ்வாராய்ச்சியால் தட்சிணாமூர்த்தி பேதங்களும், வழிபாடுகளும் அக்காலத்திலிருந்து தொடர்ந்து வருவதால் இப்பெருமானின் வழிபாட்டுத் தொன்மையானது நமக்கு சிறப்புற விளங்குகின்றது. இவரது பல்வேறு உருவங்கள் திருக்கோயிலின் கோபுரங்கள், விமானங்கள், கோஷ்டங்கள், உள்மதிற்சுவர் ஆகியவற்றில் தென்திசைப் பகுதிகளில் நாம் காணலாம்.

**பக்கம் - 17**

பல்வேறு ஆயுதங்களை மேலும் அறிய சிற்பச் செந்நூலில் காண்க இங்குக் காணப்படும் ஆயுதங்களின் விளக்கங்களை இவ்வாதீன வெளியீடான கணபதி, முருகன் நூல்களில் காணலாம்.

**பக்கம் - 32**

பஞ்சாட்சரம் — சிவபிரானை உபாசிக்கும் மந்திரம்

ஷடாட்சரம் — முருகனை உபாசிக்கும் மந்திரம்

அஷ்டாட்சரம் — திருமாலை உபாசிக்கும் மந்திரம்

இம்மந்திரங்களை குரு மூலமாக அறிதலே சிறந்த பயனைத் தரும். மேலும் மந்திரங்கள் பலவற்றினை வேதங்களிலும், ஆகமங்களிலும் காணலாம்.

**பக்கம் - 49**

திருக்கழுக்குன்றம் மலைக்கோயிலில் (வேதகிரீஸ்வரர்கோயில்) உள்ள நடைபாதைக்கு இவ்வாதீனத்தின் 23-வது குரு மகாசந்நிதானம் அவர்களால் மின்விளக்குகள் மீண்டும் அமைக்கப்பெற்றன. மேலும் மலைக் கோயிலில் விளங்கும் நடராஜர் சபையினைத் திருப்பணி செய்ய திருவுள்ளம் கொண்டுள்ளார்கள். இத் தலத்து மலைக்கோயிலின் அடிவாரத்தில் இவ்வாதீனக்கிளைமடம் விளங்குகின்றது. இவ்வாதீனத்தின் 18–வது குரு மகாசந்நிதானம் அவர்களின் அவதாரத்தலமும் இப்பதியே ஆகும்

**பக்கம் - 51**

வீணாதர தட்சிணாமூர்த்தி போன்றே – "மிருதங்க தட்சிணாமூர்த்தி" என்ற பேதமும் உண்டு என்பர் சிலர். அப்பேதம் கிடைக்கப் பெறின் மறுப்பதிப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

**பக்கம் - 52**

யாழினைப் பற்றியும், வீணையைப்பற்றியும் அறிய பஞ்ச மரபு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், பிங்கலந்தை, தேவாரம் முதலான நூல்களில் காணலாம்.

**பக்கம் - 54 & 55**

தஞ்சைக் கலைக் கூடத்தில் 1953 ஆம் ஆண்டு நிகழ்ந்த கலைவிழாவில் இவ்வாதீனம் அன்பளிப்பாக விழாமலர் ( Souvenir ) அச்சிட்டு எல்லோருக்கும் வழங்கியது. மேலும் இவ்வாதீனத்தின் 21-வது குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் பூசையில்லாமல் பின்னப்பட்டுவிட்ட ஸ்ரீ நடராஜர் உற்சவ மூர்த்தியை இக் கலைக்கூடத்திற்கு வழங்கியருளினார்கள் இந்த நடராஜர் திருவுருவமே மிகப் பெரியதாகும். இத்திருவுருவம் சோழர் காலத்தது என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

வீணாதர தட்சிணாமூர்த்திக்கும் திரிபுராந்தகருக்கும் சிறுவேறுபாடு உண்டு. வீணை ஏந்தும் கையையும், வில்லை ஏந்தும் கையையும் கூர்ந்து கவனித்தால் விளங்கும். மேலும் கற்சிலைகளிலும், சுதைச்சிற்பங்களிலும் வீணையுடன் கூடிய வீணாதர தட்சிணாமூர்த்தியினைக் காணலாம். செப்புச் சிலைகளில் சிற்பிகள் வீணையை மீட்டும் பாவனையை மட்டும் காட்டுவர். அவ்வாறாகவே வீணாதர தட்சிணாமூர்த்தி செப்புத் திருமேனிகள் விளங்குகின்றன.

**பக்கம் - 56**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிவாலயங்களில் விளங்கும் தட்சிணாமூர்த்தி திருவுருவங்களுக்கு எதிரில் ஒன்பது பலிபீடங்கள் இருப்பதனைக் காணலாம். இதனை நவசக்திகள் என்று கூறுகின்றனர்.

**பக்கம் - 63**

மாணிக்கவாசகர் திருப்பணிசெய்த திருப்பெருந்துறை ஆத்மநாதர் ( ஆவுடையார்கோயில் ) திருக்கோயில் இவ்வாதீனத்திற்குச் சொந்தமானதாகும். இத் திருக்கோயிலின் திருப்பணிகள் நிறைவெய்தி இவ்வாதீனத்தின் 23-வது குரு மகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் அண்மையில் திருக்குடமுழுக்கு நிகழவுள்ளது.

திருநெல்வேலிப் பகுதிக்கோயில்களில் விளங்கும் தட்சிணாமூர்த்தியின் உருவங்களில் சில கால் மாற்றிப் போட்டமைவதையும் யோகதண்டத்தை பின் கரத்தில் ஏந்தியிருப்பதையும். முன்கரம் பூ ஸ்பரிசமாக உள்ளதையும் காணலாம். ஆனால் யோக தண்டம் வலக்கரத்தினைத் தாங்குவதுபோலக் காண்பது அரிதாகும்.

128021

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை - 609 803